விலை : 20.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 26 சனிக்கிழமை (10.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 081

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே



## பதற்றமான சூழ்நிலை நீங்கி

# அமைதி நிலை ஏற்பட்டுள்ளது

### வெளிநாட்டு தூதுவர்களிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்துரைப்பு

(கொழும்பு) கடந்த சில நாட்களாக சில பகுதிகளில் நிலவிய பதற்றமான சூழ்நிலை முழுமையாக நீக்கப்பட்டு நாட்டில் அமைதியான சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது என மைத்திரிபால சிறிசேன, வெளிநாட்டு தூதுவர்களிடம் எடுத்துரைத்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

---

தமிழ் அரசியல் கைதியான

## முருகையா கோமகன் கைதாகி விடுதலை

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதியாகத் தடுத்துவைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருந்த முன்னாள் யாழ்.மாநகர சபை உறுப்பினர் முருகையா கோமகன் நேற்று இந்தியாவுக்கு 23

---

கண்டி கலவரத்தை தொடர்ந்து

## தொழுகைக்கு செல்ல முஸ்லிம்கள் அச்சம்

(கண்டி)

கண்டியில் இடம்பெற்ற வன்முறைகளையடுத்து தொழுகைக்காக பள்ளிவாசல்களுக்குச் செல்வதற்கு தாம் அச்சத்துடன் இருப்பதாக முஸ்லிம்கள் தெரிவித்துள்ளனர்.

கண்டியில் வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் மீது பாதுகாப்புத் தரப்பினர் உரிய நடவடிக்கைகளை எடுக்காத 23

---

## ஜனாதிபதி இன்று இந்தியாவுக்கும் 12-ம் திகதி ஜப்பானுக்கும் பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று புதுடில்லிக்கு பயணமாகிறார். அங்கு நாளை இடம்பெறும் சர்வதேச சூரிய சக்திக் கூட்டணியின் முதலாவது மாநாட்டில் ஜனாதிபதி பங்கேற்கிறார் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

புதுடில்லி பயணத்தை முடித்துக் கொண்டு 23

---

## ஐ.நா அதிகாரி பெல்ட்மன் ஜனாதிபதியுடன் சந்திப்பு

நல்லிணக்கம் தொடர்பிலும் கலந்துரையாடல்



(கொழும்பு)

இலங்கை - ஐக்கிய நாடுகள் சபைக்கும் இடையிலான தொடர்புகளை உறுதிப்படுத்துவதற்காக வருடாந்தம் இடம்பெறும் விஜயம், இம்முறை நான்காவது தடவையாக 23

---

## இனவாதத்தை தூண்டினால் 10 வருட சிறைத் தண்டனை

அமைச்சர் தயாசிறி ஜெயசேகர

(கொழும்பு)

இனவாத கருத்துக்களை வெளியிடும் நபர்களுக்கு 10 வருட சிறைத் தண்டனை வழங்கக் கூடிய சட்டத்தை அமுல்படுத்துமாறு அமைச்சர் தயாசிறி ஜெயசேகர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன், இனவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்படும் தனிநபர்கள் மற்றும் அமைப்புகளை அரசாங்கம் தடைசெய்ய வேண்டும் எனவும் அமைச்சர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இனவாத கருத்துக்களை வெளியிடும் நபர்களுக்கு 10 வருட 23

---

## கண்டி வன்முறை 146 பேர் கைது

பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

கண்டி பிரதேசத்தில் இடம்பெற்ற குழப்பநிலை தொடர்பில் இதுவரை 146 பேர் கைது 24

---

## கிளிநொச்சியில் அதிரடிப்படையினரால் கஞ்சா பொதி மீட்பு



(கிளிநொச்சி)

விசேட அதிரடிப்படையினரால் நேற்று கஞ்சா பொதி மீட்கப்பட்டுள்ளது. விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று கிளிநொச்சியில் குறித்த கஞ்சா பொதி மீட்கப்பட்டுள்ளது.

155-ம் கட்டை பகுதியில் கஞ்சாவுடன் ஒருவர் செல்வது 23

---

தொழுகை நடைபெற்றபோது

## பள்ளிவாசல்களை பாதுகாத்த பௌத்த துறவிகள்

(கண்டி)

கண்டியில் ஏற்பட்ட வன்முறையான நிலைமைகளின் பின்னர், நேற்று முஸ்லிம்களின் ஜும்மா தொழுகை நடைபெற்றது. இதன் போது முஸ்லிம்களின் பாதுகாப்புக்காக சில பௌத்த பிக்குமார் பள்ளிவாசல்களுக்கு சென்றுள் 24

---

## ஐ.நாவின் உயர் அதிகாரிகளுடன் த.தே.கூட்டமைப்பு சந்திப்பு



அரசியல் நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடல்

(கொழும்பு)

இந்த அரசாங்கம் எந்த மக்கள் ஆணையின் மீது ஆட்சியில் அமர்த்தப்பட்டதோ அது முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே ஐக்கிய நாடுகள் சபையினதும் பொதுவாக சர்வதேச சமூகத்தினரதும் எதிர்பார்ப்பாகும். இந்த விடயத்தை தமிழ்த் தேசிய 23

---

## ஆலயக் கேணியிலிருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

கரவெட்டி பகுதியில் சம்பவம்



(கரணவாய்)

ஆலயக் கேணி ஒன்றில் இருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மோட்டார் சைக்கிளுடன் சேர்த்து மீட்கப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வெள்ளிக்கிழமை காலையில் சடலமாக மீட்கப்பட்ட 23

---

தாயார் இறந்த செய்தி

## அறிந்த மகன் உயிர்மாய்ப்பு

(கரணவாய்)

தாயார் இறந்த தகவல் அறிந்த மகன் ஒருவர் உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் வடமராட்சியில் இடம்பெற்றுள்ளது.

சங்கம்தோட்டம் பொலிகண்டி தெற்கைச் சேர்ந்த இராசு சுந்தரலிங்கம் (வயது -58) என்ப 23

---

கண்டியில் அமைதி நிலை

## மூவாயிரத்துக்கு அதிகமான முப்படையினர் பாதுகாப்பு

(கண்டி)



கண்டியில் தற்போது அமைதி நிலவிவருகின்ற போதிலும், தொடர்ந்து முப்படைகளை சேர்ந்த மூவாயிரத்திற்கும் அதிகமானோர் பாதுகாப்பு கட 24

---

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வன்முறைச் சம்பவங்களின் உண்மையை கண்டறிய ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்க வேண்டும்

## ஹர்ஷ டி சில்வா யோசனை

அம்பாறை, கண்டி, திகன மற்றும் தெல்தெனிய பகுதிகளில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பில் உண்மையை கண்டறிய ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்க வேண்டும் என அமைச்சர் ஹர்ஷ டி சில்வா யோசனையொன்றை முன்வைத்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின் போதே அவர் இந்த யோசனையை முன்வைத்தார். இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

தற்போது சமூகவலைதளங்களில் அதாவது பேஸ்புக், டுவிட்டர், வாட்ஸ் ஆப் மூலம் பரப்பப்பட்ட பொய் பிரசாரங்கள் இவ் அனைத்தையும் தடைசெய்ததன் மூலம் தற்போதைய பதற்ற நிலைமை கட்டுக்குள் வந்துள்ளது.

அம்பாறை, கண்டி, திகன மற்றும் தெல்தெனிய இன வன்முறைகளின் உண்மையை கண்டறிய ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்க வேண்டும். இதன் மூலம் இந்த சம்பவங்களின் பின்னணியில் உள்ளவர்களை கண்டறிய முடியும். இது சிங்கள இனவாதம் மட்டுமல்ல. முஸ்லிம் இனவாதம் இந்நாட்டில் உள்ளது என கூறினார். (ம)

# வவுனியா செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியில் விபத்து நால்வர் படுகாயம்

(குருமன்காடு)

வவுனியா செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் நால்வர் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மதவாச்சியில் இருந்து மன்னார் நோக்கி சென்ற ஜா எல பிரதேசத்தை சேர்ந்த டொல்பின் ரக வாகனமும் மெனிக்பாம் பகுதியில் இருந்து செட்டிகுளம் நோக்கி வந்த மோட்டார் சைக்கிளுமே மெனிக்பாம் கல்லாறு பாலத்திற்கு அருகில் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரும் வானில் சென்ற இருவருமாக நால்வர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

இவ் விபத்து தொடர்பாக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-250)

**யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி**
**இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு**
**2018**

இடம்:-பாடசாலை மைதானம்
காலம்:-இன்று (2018.03.10)
சனிக்கிழமை
நேரம்:-பி.ப 1.30 மணி

தலைவர்
**திரு.செ.மோகநாதன்** (அதிபர்)
பிரதம விருந்தினர்
சமூக திலகம் உயர்திரு
**அழகுசுந்தரம் கிருபாகரன்**
(அதிபர், கிருபா லேணர்ஸ்)
சிறப்பு விருந்தினர்கள்
உயர்திரு
**கணேஸ்வரன் வேலாயுதம்**
(ஸ்தாபகர், சிவன் அறக்கட்டளை)
உயர்திரு
**S.I.சஞ்ஜீவ**
(பொறுப்பதிகாரி, போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு, பொலிஸ் நிலையம், கோப்பாய்)
கௌரவ விருந்தினர்
உயர்திரு
**நாகலிங்கம் சிவநேசன்**
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், கோப்பாய்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
**பாடசாலைச்சமூகம்**

# மகளிர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா இன்று காலை 9.30 மணிக்கு கோவில் வீதியில் அமைந்துள்ள யாழ்.விழிப்புலனற்றோர் சங்க பிரதான அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செல்வி கிறிஸ்டில்லா கிளைமன்ட் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி செல்வி.சி.ஞானலோஜினி, கௌரவ விருந்தினராக கணனிப் பயிற்சி ஆசிரியர் செல்வி செ.செல்வநாயகி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-9)

# தேடப்பட்ட நபர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, நாவலடி பகுதியிலுள்ள பாழடைந்த கட்டிடமொன்றிலிருந்து இளைஞரொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, ஆரையம்பதி பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மீட்கப்பட்ட குண்டுகளுடன் தொடர்புடையவரென தேடப்பட்ட நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். கடந்த சில நாட்களாக காணாமல் போயிருந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 29 வயதுடைய ஆரையம்பதி கதிர்காமர் வீதியைச் சேர்ந்த ஆனந்தராஜ் பிரியராஜ் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஆரையம்பதியில் மீட்கப்பட்ட குண்டு தொடர்பில் பொலிஸாரினால் தேடப்பட்டு வந்தவரென்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் பகிரங்க ஏலவிற்பனை

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் ஒருதொகுதி விறகுகள் (நாவல் ம்றறும் புளியமரக் கொப்புகள்) பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

காலம் :-19.03.2018 திங்கட்கிழமை
காலை 10.00மணி
இடம் :-தலைமை அலுவலகம்

**நிபந்தனைகள்**

1. ஏல தாரராக கலந்து கொள்பவர் ரூபா 100.00 மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்தப்படல் வேண்டும்
2. சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே ஒப்புக் கொண்ட ஏலத்தொகையின் முழுத் தொகையையும் செலுத்தி பொருட்களை அலுவலகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.
3. மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப.14.00 மணிவரை பார்வையிடலாம்.

**யு.ஜெலீபன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.** (சி-1831) 2018.03.10

## நல்லூர் பிரதேச சபை பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

**இடம்:**-தலைமை அலுவலகம்
நல்லூர் பிரதேச சபை,
14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்
**காலம்:**-23.03.2018 (வெள்ளிக்கிழமை)
**நேரம்:**-மு.ப 10.00 மணி

ஏலப்பொருட்கள்:- கூரைத்தகரம், கூரைசீற், கூரை ஓடுகள், பழைய பனை மரங்கள், தீராந்திகள், யன்னல்கள், கதவு நிலைகள், இரும்புக் கம்பிகள், பாவித்த ரயர், பலகைத்துண்டுகள், மாபிள் கற்கள் (தரை ஓடு), இரும்புப் பைப்புகள், தகர பீலிகள், பிளாஸ்ரிக் உதிரி பாகங்கள், பழைய கத்திகள், தகரங்கள், Pvc பைப், பிரீக்காவீம் (கொங்கிறீற்)

ஆர்வமுள்ளோர் ஏலப்பொருட்களை அலுவலக நாட்களில் 22.03.2018 வரை மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணிவரை பார்வையிடலாம் என்பதுடன் விண்ணப்பப் படிவம் ரூபா.100.00 (வரி நீங்கலாக) மீள பெறக்கூடிய பாதுகாப்பு வைப்பு பணம் ரூபா.1000.00 (வரி நீங்கலாக) செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ளலாம் என்பதுடன் சித்தி பெறுவோர் அதற்கான பெறுமதியினைச் செலுத்தி அன்றையதினம் மாலை 3.00 மணிக்கு முன்பாக பொருட்களை அப்புறப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு.சு.சுதர்ஜன்**
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை. (சி-1837) 10.03.2018


முல்லைத்தீவு வாழ் மக்களுக்கு
யமஹா வழங்கும் மாபெரும் வாகன சந்தை 2018

**எவ்வகையான உங்கள் பழைய மோட்டார் சைக்கிளையும் கொடுத்து புதிய மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு உரிமையாளர் ஆகுங்கள்.**




முல்லைத்தீவு
கச்சேரிக்கு
முன்பாக

அரிய சந்தர்ப்பத்தை
தவறவிடாதீர்கள்.

மார்ச் 09,10,11
077 779 5800



எம்மிடம் லீசிங்
மூலம் பெற்றுக்
கொள்பவர்களுக்கு
15 லீற்றர் பெற்றோல்,
SLS ஹெல்மற்-01
இலவசம்

**Digital Electronics**
Main Street,
Mullaitivu.
077 662 3824

(சி-1834)

# மின்னஞ்சல்களையும் கட்டுப்படுத்த அரசு திட்டம்


(கொழும்பு)

சமூக வலைத்தளங்களைத் தொடர்ந்து ஏனைய வலைத்தளங்கள் மற்றும் மின்னஞ்சல்களையும் கட்டுப்படுத்துவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்ற பாதுகாப்பு அதிகாரிகளுடனான சந்திப்பின்போதே இத்தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களைக் கட்டுப்படுத்தியதன் மூலம் நாட்டில் நிலவிய இனங்களுக்கிடையிலான மோதலை பாரிய அளவில் கட்டுப்படுத்த முடிந்ததாக குறித்த சந்திப்பில் கருத்து தெரிவித்த பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்தில் கடந்த காலங்களில் அசாதாரண சூழ்நிலை நிலவிவந்த நிலையில், குழப்பங்களைத் தோற்றுவிக்கும் வகையிலான போலிப் பிரசாரங்களைத் தடுக்கும் வகையில் பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



(கேலிச்சித்திரம்)

# கண்ட இடத்தில் துப்பாக்கிச் சூடு

## உத்தரவு பிறப்பிக்க ஹக்கீம் கோரிக்கை

(கொழும்பு)

கண்ட இடத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தும் உத்தரவினை பிறப்பிக்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கோரிக்கை விடுத்துள்ளார். பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.



பாதுகாப்பு விடயங்களை கையாள்வதில் சில குறைபாடுகள் காணப்படுவதாகத் தெரிவித்துள்ள அவர் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதில் ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்துள்ளார். புலனாய்வுப் பிரிவினர் வன்முறைச் சம்பவங்கள் குறித்து முன்கூட்டியே அறிவிக்காமை தொடர்பில் அரசாங்கம் விசாரணை நடத்த வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார். புலனாய்வுப் பிரிவின் நடவடிக்கைகள் குறித்து சில பிரச்சினைகள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# சிறைவாசம் ; பழிவாங்கல் சரத் பொன்சேகாவிற்கு ஏன் சட்டம் ஒழுங்கு மறுக்கப்பட்டது?

## அமைச்சர் தயாசிறி விளக்கம்



(கொழும்பு)

இராணுவத்தில் பீல்ட் மார்சல் அதிகாரியாகத் தொடர்ந்து செயற்பட்டுவரும் ஒருவரை பொலிஸாருக்கு பொறுப்பானவராக நியமிக்க முடியாது என அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

சட்டம் ஒழுங்கு அமைச்சுப் பதவியை சரத் பொன்சேகாவுக்கு வழங்க மறுப்பு தெரிவிக்கப்பட்டமை தொடர்பாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், சரத் பொன்சேகா கடந்த ஆட்சிக் காலத்தில் இரண்டு ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்ததாக சுட்டிக்காட்டிய அவர், பொன்சேகா இப்பதவிக்கு நியமிக்கப்படும் பட்சத்தில் அவர் பழிவாங்கல் செயற்பாட்டில் ஈடுபடக்கூடும் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை, இராணுவத்தில் உள்ள ஒருவரை பொலிஸாருக்கு பொறுப்பானவராக நியமித்தால் அது பல பிரச்சினைகளுக்கே வழிவகுக்கும் எனவும் தெரிவித்தார். (இ-7)


# சமூக வலைத்தளங்களை அரசாங்கம் முடக்கியமைக்கு எதிராக முறைப்பாடு

(கொழும்பு)

வட்ஸ்அப், வைபர், பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களை அரசாங்கம் முடக்கிய நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளது. (இ-7)

# 12 பெற்றோல் குண்டுகள் கண்டியில் நேற்று மீட்பு!

(கண்டி)



கண்டி- இலுக்தென்ன, பிரதேசத்தில் மறைத்து வைக் கப்பட்டிருந்த 12 பெற்றோல் குண் டுகளை பொலிஸார் நேற்று அதிகாலை மீட்டுள்ளனர்.

தாக்குதல்களை மேற்கொள் ளும் வகையில் இவ்வாறு பெற்றோல் குண்டுகளை மறைத்து வைத்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (இ-7)

## தனிநாட்டு கோரிக்கையை கைவிட்டது சாதனை

# எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் நீடிக்க வேண்டும்

## அமைச்சர் மனோ விருப்பம்



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவராக இரா. சம்பந்தன் தொடர்ந்தும் நீடிக்க வேண்டுமென தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் விருப்பம் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராக வருவாரா? என்ற ஊடகவியலாளரின் கருத்துக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"மகிந்த எதிர்க்கட்சித் தலைவராக வரவேண்டிய அவசியமில்லை. சம்பந்தனை இலங்கை தேசிய அரசியலிலேயே அவரை செயற்பட முடியாமல் வடக்கில் முடக்கி வைத்துள்ளனர். ஆனாலும் அவர் பதவியில் இருக்க வேண்டுமென ஆசைப்படுகிறேன்.

காரணம் கடந்த காலங்களில் தனிநாடு என்ற வியூகத்தில் இருந்த வடக்கு - கிழக்கு தலைமைகள் இன்று ஒரே நாடு என வந்திருக்கின்றமை பெரியதொரு செயல். இதுவொரு சாதனை. ஆகவே அவர் எதிர்க்கட்சித் தலைவராக நீடிக்க வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ அதிகம் நாடாளுமன்றத்திற்கு வருவதில்லை. அவர் அதிகம் செல்லுவது விகாரைகளுக்கே. அவர் அவ்வாறு விகாரைகளுக்கே சென்று கொண்டிருக்கட்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜப்பான் படை அதிகாரி ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

ஜப்பான் நாட்டின் பாதுகாப்பு பணிக்குழாம் தலைவர் அட்மிரல் Katsutoshi Kawana நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தார்.

இலங்கையின் சமுத்திரப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு ஜப்பான் கடற்படையின் உதவியைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்று அட்மிரல் Katsutoshi Kawana தெரிவித்தார்.

இலங்கையின் கடற்படைக்கு ஜப்பானின் பயிற்சி சந்தர்ப்பங்களை அதிகரித்துத்தருமாறு ஜனாதிபதி முன்வைத்த வேண்டுகோளுக்கு ஜப்பான் பாதுகாப்பு பணிக்குழாம் தலைவர் இணக்கம் தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளை ஒழித்தல், அனர்த்த நிவாரண சேவைகள் போன்ற நடவடிக்கைகளில் தேவையான தொழில்நுட்ப அறிவைப் பரிமாறிக் கொள்ளும் நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை பாதுகாப்பு பணிக்குழாம் தலைவர் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்தனவும் இந்த சந்திப்பின் போது பிரசன்னமாகியிருந்தார். (இ-7)

# வடக்கின் பெரும் போர் - 2018

# ஜெயதர்சன், ராஜ்கிளின்டன், மதுசன் அசத்தல் இன்னிங்ஸ் வெற்றியை நோக்கி யாழ்.மத்தி.



ஜெயதர்சன்



ராஜ்கிளின்டன்



மதுசன்

ஜெயதர்சன், ராஜ்கிளின்டன், மதுசன் என மத்தியின் மைந்தர்கள் அரைச் சதங்கள் குவிக்க, 300 ஓட்டங்களைக் கடந்த யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி, அதேவேகத்தை பந்துவீச்சிலும் ஒரு காட்டு காட்ட சென். ஜோன்ஸ் கல்லூரி வீரர்கள் வாயடைத்துப் போனார்கள்.

இந்நிலைமை நீடிக்க நேற்றைய 2ஆம் நாளாட்டம் நிறைவுக்கு வந்தபோது, தமது 2ஆவது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடி வரும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வெறும் 8 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து பரிதவிக்கிறது.

இதன்மூலம் இன்னிங்ஸ் வெற்றியை நோக்கி ஜோராக முன்னேறுகிறது யாழ்.மத்திய கல்லூரி.

வடக்கின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி அணிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான 3 நாட்களைக் கொண்ட 112ஆவது பெருந் துடுப்பாட்ட போர் நேற்று முன்தினம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.மத்திய கல்லூரி கேட்டுக் கொண்ட தற்கிணங்க முதலில் துடுப் பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, ஆரம்பத்தில் தேவதாஸ் செரோபன் கொடுத்த சிறப்பான துடுப் பாட்டத்தால் 77.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 217 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் செரோபன் 65, எல்சன் டேனுசன் 32, தெய்வேந்திரன் டினோசன் 28, நாகேந்திரராஜா சௌமியன் 22, ஜோயல் பிரவீன் 21 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி அணி சார்பாக, விஜயகாந்த் விஜஸ்காந்த் 59 ஓட்டங்களுக்கு 4, சிவலிங்கம் தசோபன் 34 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி அணி, நேற்று முன்தினம் முதல்நாள் ஆட்டநேர நிறைவில் 16 ஓவர்களை எதிர் கொண்டு ஒரு விக்கெட்டினை இழந்து 43 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்றைய 2ஆம் நாளாட்டத்தில் முதல் இன்னிங்ஸை தொடர்ந்த யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி அணி அட்டகாசமான துடுப் பாட்டத்தை வெளிப்படுத்தியது.

இதன்மூலம் 101.2 ஓவர்களை எதிர்கொண்டு 328 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் அன்ரனிடயஸ் ஜெயதர்சன் மிகச் சிறப்பாக ஆடி, முதல் நபராக அரைச்சதம் அடித்து 77 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். இராஜரத்தினம் ராஜ்கிளின்ரன் ஆட்டமிழக்காமல் 54, செல்வராசா மதுசன் (52), அணித்தலைவர் சிவலிங்கம் தசோபன் (49), சதாகரன் நிசான் (30), கமலராசா இயலரசன் (22) ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் அணி சார்பாக, கனகரட்னம் கபில்ராஜ் 94 ஓட்டங்களுக்கு 5, முர்பின் அபிநாஸ் 2 விக்கெட்டுக் களைக் கைப்பற்றினர்.

111 ஓட்டங்கள் பின்னிலையில் தமது 2ஆவது இன்னிங்சுக்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் துடுப்பாட்டம் ஆட்டம் கண்டது.

மத்திய கல்லூரியின் எழுச்சியான பந்துவீச்சில் அடுத்தடுத்து விக்கெட்டுக் களை பறிகொடுத்தது.

இந்நிலையில் நேற்றைய 2ஆம் நாளாட்டம் நிறைவுக்கு வர 5 ஓவர்களை எதிர் கொண்ட சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 8 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக் களை இழந்து, இன்னிங்ஸ் தோல்வியை நோக்கி நகர்கின்றது.

பந்துவீச்சில் மத்திய கல்லூரி அணி சார்பில் செல்வராசா மதுசன், சூரியகுமார் சுஜன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப் பற்றினர்.

போட்டியின் 3ஆவதும் இறுதியுமான நாளாட்டம் இன்றாகும்.

இன்றைய நாளில் மத்திய கல்லூரி வீரர்கள் தமது எழுச்சியான ஆட்டத்தை வெளிப்படுத்தும் பட்சத்தில் கடந்த ஆண்டு தோல்விக்கு தக்க பதிலடி கொடுக்கலாம். (26)

## 9ஆவது இந்துக்களின் போர்

# எல்.சிவலக்சனின் பந்துவீச்சில் 165 ஓட்டங்களுக்கு சுருண்டது கொழு/இந்து பலமான நிலையை நோக்கி நகர்கிறது யாழ்.இந்து

எல்.சிவலக்சனின் அபார பந்துவீச்சில் சிக்கிய கொழும்பு இந்துக் கல்லூரி அணி 165 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

தொடர்ந்து யு.மிலுக்சன், கே.விதுசன் ஆகியோரின் அரைச்சதங்கள் கைகொடுக்க யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி, முன்னிலை பெற்று பலமான நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையிலான 9ஆவது இந்துக்களின் போர் பெருந்துடுப்பாட்ட போட்டி நேற்று யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது.

1981ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சுற்றுப் போட்டியானது, போர்ச்சூழல் காரணமாக தடைப்பட்டது.

அதன்பின் 2005ஆம் ஆண்டு முதல் மீள ஆரம்பிக்கப்பட்டது.

இதுவரையில் 8 பருவப் போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளது.

இதில் 8 போட்டிகளில் 3 இல் கொழும்பு இந்துக் கல்லூரி அணியும் ஒரு போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியும் வெற்றி பெற்றன. 4 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருந்தன.

இந்நிலையில் 9ஆவது பருவகாலத்துக்கான போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற கொழும்பு இந்துக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

தொடக்கத்தில் சிறப்பான ஆரம்பத்தை கொடுத்த கொழும்பு இந்துக் கல்லூரி அணி, 108 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

எனினும் அதன்பின்னர் சிவலக்சனின் பந்துவீச்சில் அடுத்தடுத்து விக்கெட்டுக் களை பறிகொடுத்து 45.4 ஓவர்களில் 165 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக் களையும் இழந்தது.

துடுபபாட்டத்தில்ஜி.டினேஸ் 66, ஆர்.சேவாக் 24 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் இந்து கல்லூரி சார்பாக எல்.சிவலக்சன் 5, அணித்தலைவர் எம்.கோபிராம் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

தொடர்ந்து தமது முதலாவது இன்னிங்சுக்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி, யு.மிலுக்சன், கே.விதுசன் ஆகியோரின் அபாரமான அரைச் சதங்கள் கைகொடுக்க 200 ஓட்டங்களைக் கடந்தது.

இந்நிலையில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தபோது 49 ஓவர்களை எதிர்கொண்ட யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 212 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதன்மூலம் 6 விக்கெட்டுக்கள் கைவசமிருக்கும் நிலையில் 47 ஓட்டங்களால் முதல் இன்னிங்ஸில் முன்னிலையில் உள்ளது.

துடுப்பாட்டத்தில் மிலுக்சன் 72 ஓட்டங்களை எடுத்திருந்ததுடன் விதுசன் 50, ஆர்.கஜாநந் 33 ஓட்டங்களுடன் களத்திலுள்ளனர்.

போட்டியின் 2ஆவதும் இறுதியுமான நாளாட்டம் இன்றாகும்.

இன்றைய இறுதிநாளாட்டத்திலும் சிறப்பான துடுப் பாட்டத்தை தொடரும் பட்சத்தில் வலுவான ஓட்ட எண்ணிக்கையை பெற்று யாழ்.இந்துக் கல்லூரி வெற்றிக்கு முயற்சிக்கலாம். (26)

## ரபாடா அசத்தல்: 243 ஓட்டங்களுக்கு சுருண்டது ஆஸி



போர்ட் எலிசபெத் டெஸ்டில் தென்னாபிரிக்காவின் ரபாடா, நிகிடி, பிலாண்டர் 'வேகத்தில்' மிரட்ட, முதல் இன்னிங்ஸில் அவுஸதிரேலிய அணி 243 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி, அங்கு 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

டர்பனில் நடந்த முதல் டெஸ்டில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றிருந்த நிலையில், இரண்டாவது டெஸ்ட் போர்ட் எலிசபெத்தில் நேற்று ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலி அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

### வோர்னர் ஆறுதல்

அவுஸ்திரேலிய அணிக்கு பான்கிராப்ட், டேவிட் வோர்னர் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது.

முதல் விக்கெட்டுக்காக 98 ஓட்டங்கள் சேர்த்திருந்த போது பிலாண்டர் 'வேகத்தில்' பான்கிராப்ட் (38) வெளியேறினார். அடுத்து வந்த உஸ்மான் கவாஜா (4) ஏமாற்றினார். பொறுப்பாக ஆடிய வோர்னர், அரைச்சதம் கடந்தார். இவர், 63 ஓட்டங்கள் எடுத்திருந்த போது நிகிடி பந்தில் போல்டானார். பின் வந்தவர்களுக்கு ரபாடா தொல்லை கொடுத்தார்.

இவரது 'வேகத்தில்' ஸ்ரீவ் ஸ்மித் (25), ஷோன் மார்ஷ் (24), மிட்சல் மார்ஷ் (4), கம்மின்ஸ் (0), மிட்சல் ஸ்ரார்க் (8) ஆட்டமிழந்தனர். நிகிடி பந்தில் நேதன் லயன் (17) போல்டானார். சிறிது நேரம் தாக்குப்பிடித்த ரிம் பெய்ன் (36), நிகிடியிடம் சரணடைந்தார்.

இறுதியில் அவுஸ்திரேலியா தமது முதல் இன்னிங்சில் 243 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. ஹேசல்வுட் (10) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பில் ரபாடா 5, நிகிடி 3, பிலாண்டர் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பின, முதல் இன்னிங்ஸை தொடர்ந்த தென்னாபிரிக்க அணிக்கு மார்க்ரம் (11) ஏமாற்றினார்.

இந்நிலையில் நேற்றைய முதல் நாள் முடிவுக்கு வந்தபோது தென்னாபிரிக்கா முதல் இன்னிங்சில் ஒரு விக்கெட்டை இழந்து 39 ஓட்டங்களை எடுத்து, 204 ஓட்டங்களால் பின் தங்கி இருந்தது. எல்கர் (11), ரபாடா (17) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# ஒரு இலட்சம் தமிழ் புத்தகங்கள் இலங்கைக்கு வழங்கப்படும்

## தமிழக அமைச்சர் செங்கோட்டையன் தகவல்

(கோவை)

இலங்கைக்குச் சென்று ஒரு இலட்சம் தமிழ் புத்தகங்களை வழங்க உள்ளோம் என்று கோவையில் அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்தார்.

தமிழக பள்ளி கல்வித் துறை அமைச்சர் செங்கோட்டையன் சென்னையிலிருந்து நேற்று முன்தினம் மதியம் விமானம் மூலம் கோவை வந்தார். அப்போது அவர் நிருபர்களிடம் தெரிவிக்கையில்.

மகளிர் தினத்தையொட்டி தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பெண்களுக்காக பல நல்ல திட்டங்களை உருவாக்கினார். நாங்கள் அதைப் பின்பற்றி தாலிக்கு தங்கம் 4 கிராம் என்று இருந்ததை இன்று 8 கிராமாக உயர்த்தி பல ஏழை பெண்களின் வாழ்க்கையை உயர்த்தி வழிகாட்டியாக உள்ளோம்.



மேலும் இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும் போது தமிழகம் பெண்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் முன்னோடியாகத் திகழ்கிறது.

இந்தியாவிலேயே சென்னை அண்ணா நகர் மற்றும் கோவை பொலிஸ் நிலையம் ஆகியவை சிறந்த பொலிஸ் நிலையங்கள் என்ற பெருமையை மத்திய அரசிடம் இருந்து பெற்றது குறிப்பிடத்தக்கது.

சில தினங்களில் மலேசியாவில் இருந்து தமிழ் சார்ந்த ஆசிரியர்கள் தமிழகம் வரவுள்ளனர். அவர்களுடன் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

அதில் மலேசியா வாழ் தமிழர்கள் பயன்பெறும் வகையில் தமிழ் குறித்த விவாதம் நடைபெறும்.

மேலும் முதலமைச்சரின் ஒப்புதலோடு இலங்கைக்கு ஒரு இலட்சம் தமிழ் புத்தகங்களை அனுப்ப நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

அதற்காக இலங்கை கல்வி அமைச்சர் சில தினங்களுக்கு முன்பு இங்கு வந்தார். அந்த ஒரு இலட்சம் புத்தகங்களை இலங்கைக்கு நேரடியாக சென்று வழங்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சமூக வலைத்தளங்களை பயன்படுத்தினால் ஆபத்து

## ஆணைக்குழு எச்சரிக்கை

(கொழும்பு)

பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களுக்கு பிரவேசிக்க விதிக்கப்பட்டுள்ள தற்காலிக தடை நேற்றும் அமுலில் இருந்தது.

கண்டி மாவட்டத்தில் நிலவும் அசாதாரண நிலைமையைக் கருத்திற் கொண்டு இந்த தற்காலிக தடை நீடிக்கப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய இணையம் ஊடாக பயன்படுத்தப்படும் பேஸ்புக், வைபர், வட்ஸ்அப் ஆகிய சமூக வலைத்தளங்களுக்கு தொடர்ந்தும் பிரவேசிக்க முடியாது என அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், மாற்று வழிகளை பயன்படுத்தி பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத் தளங்களுக்கு பிரவேசிப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறானவர்களுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இனவாத கருத்துக்கள் மற்றும் புகைப்படங்களை சமூக வலைத்தளங்கள் ஊடாக வெளியிடுகின்றவர்கள் மற்றும் பரிமாற்றுகின்றவர்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கான ஆதரவை குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்திடம் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)


## 45ம் நாள் நினைவஞ்சலி

அமரர் திரு.

### நாகமுத்து கந்தையா

தோற்றம் 03 • 08 • 1939

மறைவு 25 • 01 • 2018



சீர் பூத்த தீவகத்தில் சிவம் பூத்த தீவுதனில்
பேர் போன நாகமுத்து புத்திரனாம் கந்தையா
சைவ நெறி தவறாத நவப் புதல்வன்
ஆயிரம் சுமைதாங்கி எமை அரவணைத்த தெய்வம்
பண்பான தந்தையாய் பாசத்திற்கு இலக்கணமாய்
வாழ்ந்த காலங்கள் எம் மனதில் நிழலாய் போனதுவே
நாற்பத்தைந்து நாட்கள் ஓடி மறைந்ததுவே
நேற்றுப் போல் இருக்குதையா–நாம்
தோற்றுப் போய் அழுத நினைவுகள்
புன்சிரிப்பால் கதை சொல்லி காலமெல்லாம்
எம்மோடு வாழ்ந்திடுவீர்கள் என்றிருந்தோம்
மீளாத்துயரில் எமை ஆழ்த்தி மறைந்ததேனோ?
கண்ணகையின் பாதக் கமலமதில் வீற்றிருந்து
காலமெல்லாம் எமைக் காத்திடுங்கள்
சாந்தி பெறுகவென அம்பாளை வேண்டுகின்றோம்.

நயினாதீவு 08 குடும்பத்தினர் (3165)



## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் பராசக்தி

பண்ணாகம் தெற்கு சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பராசக்தி 09.03.2018 நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், கதிரமலைநாதன் (ஓய்வு பெற்ற உதவி திட்ட மிடல் பணிப்பாளர்), பத்மநாதன் (லண்டன்), கணேசலிங்கம் (டென்மார்க்), ஜெயபாலன் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தாயாரும் புவனஜோதி, சந்திராதேவி, லங்கேஸ்வரி, ஜெயராணியின் அன்பு மாமியாரும் யசோதா, நித்தியானந்தன், கணபதி, ஆனந்தன், நிஷாந்தன், விஜிதா, அனோற்றா, ஜெயன், ஜெனன் ஜெகன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.03.18 நேற்று பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று திருவடி நிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம் தெற்கு, சுழிபுரம். (3165)

தகவல்:- மகன் ஆ.கதிரமலைநாதன் 077 602 9783


## இராசி பலன்

**மீனம்:** மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**மேடம்:** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**இடபம்:** குடும்பத்தில் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், தேவையற்ற விரயங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் தாமதங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்:** விருந்தினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்:** எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

| | | | |
|---|---|---|---|
| சுக் புத | | | |
| சூரி | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் ரோகிணி | | |
| சனி, சந் | குரு, செவ் | | |

**10.03.2018**

மாசி 26, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு
அட்டமி முற்பகல் 8.22 மணிவரை
மூலம் முழுவதும்
சுபநேரம் 3.23-4.53 மணிவரை
இராகுகாலம் 9.23-10.53 மணிவரை
அட்டமி-நவமி

வளவன்

**கடகம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், கௌரவமான நாள்.

**மகரம்:** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சயனக்குறைவான நாள்.

**சிம்மம்:** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பிள்ளைகள் வழியில் பெருமைகள் கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** சவால்களை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, கற்பனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி கூடும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்:** இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் நீடிக்கும், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி:** குடும்பத்தினர்கள் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முற்படுவர், கடன் சுமை குறையும் நாள், வாகன பழுதுச் செலவுகள் குறையும்.



காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் ஸ்தாபக தின நிகழ்வு கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் அண்மையில் இடம்பெற்றது. இதில் நாட்டிய மயில் நுண்கலைமாணி ஸ்ரீமதி பவித்திரா வசந்தரூபனின் நாட்டிய அர்ப்பணமும் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையிலான சிறப்பு பட்டி மண்டபமும் இடம்பெற்றது.

## பழைய மாணவர் சங்க கூட்டம்

யாழ்.கோண்டாவில் சி.சி. த.க பாடசாலை பழைய மாண வர் சங்க பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 8.30 மணியளவில் பாடசாலை மண்டபத் தில் அதிபர் சி.நந்தகுமார் தலைமையில் இடம் பெறும். (இ)

## மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சமூக செயற்பாட்டு மையம் நடத்தும் பெண்களின் மேம்பாட்டுக்கு வலுச் சேர்ப்போம் மகளிர் தின நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் சங்கிலியன் பூங்காவில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக இலங்கையின் கனடா உயர்ஸ்தானிகர் டேவிட் மக்கினன், கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

## கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் விநாயகமூர்த்தி சயந்தன் (922393990V) என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதனை கல்லூரி நேரத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (இ)

## சங்குஸ்தாபன அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

வண் கிழக்கு-கலட்டி எச்சாட்டி மஹா மாரியம்மன் ஆலய சங்குஸ்தாபன அங்குரார்ப்பண வைபவம் எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.55 மணிக்கு இடம்பெறவுள்ளது. (இ-7)

## விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் க.பொ.த உயர்தரப்பரீட்சைக்கு முதல் தடவையாகவும், இரண்டாம் தடவையாகவும் தோற்றவுள்ள மாணவர்கள் தங்களின் பரீட்சைக்கான கணனிமயப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிடுவதற்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு சமுகமளிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார். (இ-7)

## சான்றிதழ் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

2013 ஆம் ஆண்டுக்கு முன்னர் NCT (Quantity Surveying) சான்றிதழ் பெற்ற மாணவர்கள் NVQ Level 5 இனை பெற்றுக் கொள்வதற்கு 3 மாத GAP FILLING பாட நெறியினை நடத்தி அதன் மூலம் NVQ Level 5 சான்றிதழ் வழங்குவதற்கு மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

எனவே 2013 ஆம் ஆண்டுக்கு முன் NCT (QS) கற்ற மாணவர்கள் தங்களது பெயர், பாடநெறி, கற்ற ஆண்டு, கற்ற கல்லூரி, முகவரி, தொலைபேசி இல போன்ற விபரங்களை தொழில் நுட்பவியல் கல்லூரியின் பரீட்சை அலுவலகத்தில் வழங்குமாறு பணிப்பாளர் எஸ். சண்முகநாதன் அறிவித்துள்ளார். (இ)

# சமவுரிமை கேட்பது மடமைத்தனம் பொருத்தமான உரிமைக்காக போராடுவது தான் சிறந்தது!

## வடக்கு ஆளுநர் கூரே அறிவுரை

(யாழ்ப்பாணம்)

சமமான உரிமை கிடைக்க வேண்டும் எனக் கோருவதை விட, பொருத்தமான உரிமை கிடைக்க வேண்டும் எனப் போராடுவதே சிறந்தது என வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினமும், சிறு கைத்தொழில் முயற்சியில் ஈடுபடும் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள், அனுபவங்கள், முன்னடைவுகள் தொடர்பாக 2017 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மகளிர் தின நிகழ்வின் பரிந்துரைகளுடனான அறிக்கை வெளியீட்டு நிகழ்வும் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.


இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

அவள் இல்லாத உலகம்? என்ற தொனிப்பொருளில் இந்த நிகழ்வு இடம்பெறுகிறது. தமிழர்களுடைய கலாசாரத்தில் பெண் இல்லாத உலகில் ஒன்றும் இல்லை என ஒரு ஆண் தெரிவிப்பார். அது தான் உண்மை. ஆனால் அதே ஆண் தான் பெண்களுக்கான உரிமையைக் கொடுப்பதற்கும் தடையாக இருக்கிறார்.

எம் மத்தியில் பெண்களுக்கு சமமான உரிமை இருக்க வேண்டும் என்ற கருத்து உள்ளது. சர்வதேசமும் அதை வலியுறுத்தி வருகிறது. அந்தவகையில் எமது நாட்டில் அரசாங்கம், பெண்களின் உரிமையை பாதுகாப்பதற்காக சட்டத்தில் அனுமதி கொடுத்துள்ளது. இவ்வாறு பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்நாலும் தொடர்ச்சியாக பெண்கள் போராடி வருகிறார்கள். அதற்கு காரணம் என்ன என நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

கருத்து, ஆலோசனை, சட்டம் மட்டும் போதாது. அது அனைத்துக்கும் மேலாக அன்பு சிநேகம் இருக்க வேண்டும். உண்மையான அன்பு, சிந்தனை இருந்தால் பெண்களின் உரிமையை பெற்றுக் கொள்ள எந்த தடைகளும் இல்லை.

பெண் விடுதலை தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும். அதற்கும் சட்டம் அமைக்க வேண்டும் என



தெரிவிப்பார்கள். ஏன் எல்லா விடயங்களுக்கும் சட்டம் கொண்டு வருகிறீர்கள்? சட்டத்துக்கும் மேல் அன்பு இருக்க வேண்டும். அப்போது தான் எதையும் வெல்லமுடியும். நல்ல சிந்தனை நெஞ்சில் இருந்தால் அனைவரும் விடுதலை பெறமுடியும். அதற்கு தடை இல்லை.

தற்போது அனைத்து விடயத்துக்கும் நாம் சர்வதேசத் திடம்தான் செல்கிறோம். சர்வதேசத்தின் பதிலுக்காக தான் காத்தும் இருக்கிறோம். ஆனால் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் எமது முன்னோர் பல நல்ல சிந்தனைகளை, ஆலோசனைகளை கொடுத்துள்ளார்கள். அந்த விடயத்தை நாம் தெரிந்து கொள்ளாமல் தற்போது சர்வதேசத்திடம் செல்கிறோம். அங்கு ஆலோசனை கேட்கிறோம்.

ஒரு நாட்டில், பெண்கள் அனுபவிக்கும் உரிமைகளை வைத்துத்தான் அந்த நாட்டின் சுதந்திரத்தை கணிப்பார்கள். அந்த வகையில் பெண்களுக்கு வேண்டிய எல்லா உரிமையும் கிடைக்க வேண்டும். இன மத பேதம் இன்றி இருக்க வேண்டும்.

பெண்களுக்கு சம உரிமை என கேட்பது மடமைத்தனம் அனைவருக்கும் பொருத்தமான உரிமை கிடைக்க வேண்டும் என போராட வேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ-9)

## வர்த்தக உடன்படிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றம் உலக வர்த்தக நிறுவனத்துடன் இணைந்து வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையும் தலைப்பில் 2நாள் கருத்தரங்கை எதிர்வரும் 15,16ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை யாழ். ரில்கோ விருந்தினர் விடுதியில் நடத்தவுள்ளது. (இ)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வர சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் சப்பறத்திருவிழாவும் தொடர்ந்து 29ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணியளவில் தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ-10)

# இனவாதத்துக்கு எதிராக சத்தியாக்கிரக போராட்டம்



(கொழும்பு)

இனவாதத்துக்கு எதிராக சத்தியாக்கிரக போராட்டமொன்று நேற்று கொழும்பில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. "இனவாத மோதல்களைத் தடுக்க சட்டத்தை அமுல்படுத்து" எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்ட இந்த சத்தியாக்கிரக போராட்டத்தை மக்கள் விடுதலை முன்னணி ஏற்பாடு செய்தது.

கொழும்பு விஹார மகா தேவி பூங்காவுக்கு அருகில் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பௌத்த பிக்குகள், மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், கலைஞர்கள் உள்ளிட்ட பொது மக்கள் பலர் கலந்துகொண்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். (இ-7)





# கண்டி வன்முறை! உயிரிழந்த இளைஞன் தொடர்பில் பொலிஸார் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

கண்டியில் எரிந்த நிலையில் மீட்கப்பட்ட இளைஞனின் மரணம் தொடர்பில் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கண்டி, பல்லேகலையில் தீயில் எரிந்த நிலையில் மீட்கப்பட்ட இளைஞனின் மரணத்தை கொலையாக இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளதாக சிங்கள ஊடகமான லங்காதீப செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த இளைஞனின் மரணத்தை கொலையாக கருதி விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அந்த வீடு மற்றும் அருகிலுள்ள கடைக்கு தீ வைத்தவர்கள் தொடர்பில் முக்கிய பல தகவல்கள் கிடைத்துள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் குறித்த ஊடகத்திற்கு தெரிவித்துள்ளார்.

விசாரணைக்காக சிசிடிவி காணொலிகள் மற்றும் வீடியோ காட்சிகளை பயன்படுத்துவதாக பொலிஸ் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 6ஆம் திகதி காலை கண்டி பல்லேகல, கென்கல்ல வீட்டில் இருந்து இளைஞனின் சடலம் மீட்கப்பட்டது. 5ஆம் திகதி ஏற்பட்ட அசாதாரண சம்பவத்தின் போது இளைஞனின் வீட்டிற்கு தீ வைக்கப்பட்டது.

இதன்போது அவரது சகோதரர் மற்றும் பெற்றோரை அவர் காப்பாற்றியுள்ளார் என பொலிஸ் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விசேட தேவையுடையவர் என கூறப்படுகின்ற இந்த இளைஞர் அதிக புகையை சுவாசித்தமையினால் உயிரிழந்துள்ளதாக மரண விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

திட்டமிட்ட வகையில் புகையை ஏற்படுத்தி அவரை உயிரிழக்க செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான செயற்பாட்டினை கொலையாக கருதி சந்தேக நபர்களுக்கு எதிராக கொலை குற்றச்சாட்டின் கீழ் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)


## யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

## ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்-2018

காலம்: 11.03.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி
இடம்: சங்கக் காரியாலயம், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
தலைமை: திரு.செ.ஜெயக்குமார் அவர்கள் (சங்கத் தலைவர்)

அனைத்து அங்கத்தவர்களையும் குறித்த நேரத்திற்கு சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (சு-1823)

செயலாளர்
க.செல்வச்சந்திரன்


# இரத்மலானையில் துப்பாக்கிச்சூடு மாகாண சபை உறுப்பினர் காயம்

இரத்மலானையில் நேற்றுக்காலை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேல் மாகாண சபை உறுப்பினர் அமல் சில்வா மீதே இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரத்மலானை, ஹொலுமாதுவ சந்தியில் காரில் வந்த ஆயுதக் குழுவினரால் குறித்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (இ-7)

# ஜெப்ரி பெல்ட்மன்-ரணில் சந்திப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிப் பொதுச் செயலாளர் ஜெப்ரி பெல்ட்மன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார். இந்தச் சந்திப்பு அலரிமாளிகையில் நேற்று பிற்பகல் இடம்பெற்றது. (இ-7)

# பாதாள உலகக் குழுவின் வேலையாக இருக்கலாம்

## துப்பாக்கிச் சூடு குறித்து பொலிஸார் சந்தேகம்

(கொழும்பு)

கொழும்பு - கொட்டாஞ்சேனை, ஹெட்டியாவத்தை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் பாதாள உலகக் குழுவின் செயற்பாடுகளாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் முன்னெடுத்துள்ள விசாரணைகளின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டிருந்தார். அத்துடன், இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டிருந்தனர். இதில் 29 வயதான நபர் ஒருவர் உயிரிழந்திருந்தார். உயிரிழந்தவரும், படுகாயமடைந்தவரும் உறவினர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் இருவரும், கொழும்பு - புறக்கோட்டை பகுதியில் பழ விற்பனையில் ஈடுபட்டவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

தற்போது வெளிநாட்டில் தங்கியுள்ள பாதாளக் குழுவொன்றின் தலைவருக்கு கப்பம் வழங்காத காரணத்தினாலேயே, இந்த துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (இ-7)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L/கனடா PR<br>தொ.இ: B/8317 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 43செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/8327 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 26 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ்<br>தொ.இ: B/8318 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 42 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc/அரச தொழில்<br>எதிர்பார்ப்பு:விவாகரத்து பெற்றவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/8330 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: கணனி பொறியியலாளர்<br>தொ.இ: B/8319 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 44<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/8331 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 14செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L/சாரதி<br>தொ.இ: B/8320 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/8333 |

கல்யாணமாலை
இல. 144, விரவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# முஸ்லிம்கள் மீதான தாக்குதலை கண்டித்து வவுனியா, மன்னாரில் நேற்று கதவடைப்பு


வவுனியா


மன்னார்

(குருமன்காடு)

நாட்டில் ஏற்பட்ட முஸ்லிம் மக்கள் மீதான அசாதாரண சூழ்நிலையைக் கண்டித்தும், முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களை கண்டித்தும் நேற்றைய தினம் வவுனியாவில் முஸ்லிம் வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை பூட்டி கதவடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரண்மாக நகர பள்ளிவாசல் மற்றும் வர்த்தக நிலைய பகுதிகளில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, வவுனியாவில் ஏனைய வர்த்தக நிலையங்கள் நேற்றைய தினம் திறக்கப்பட்டு இயல்பு நிலை காணப்படுகின்றது.

முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல் சம்பவங்களைக் கண்டித்து மன்னாரில் நேற்று முஸ்லிம் வர்த்தகர்கள் வர்த்தக நிலையங்கள் மூடி எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பஸார் பகுதி மற்றும் ஏனைய இடங்களில் உள்ள முஸ்லிம் மக்களின் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை ஏனைய தமிழர்களுடைய வர்த்தக நிலையங்களும் அதிக அளவில் மூடப்பட்டுள்ளன.

மேலும் மன்னாரில் உள்ள பள்ளிவாசல்களுக்கு இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அரச, தனியார் போக்குவரத்துச் சேவைகள் வழமை போல் இடம்பெற்று வருவதோடு, பாடசாலைகள் மற்றும் அரச தனியார் திணைக்களங்களின் செயற்பாடுகளும் வழமைபோல் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250-315)

## நடுகை செய்யப்பட்ட ஐம்பது தேக்குமரக் கன்றுகள் திருட்டு

(மல்லாவி)

மல்லாவியிலுள்ள வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவரின் நிதி அனுசரணையுடன் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வவுனிக்குளத்தின் வலதுகரை நீர்ப்பாசனக் கால்வாய் வீதியில் சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரத்திற்கு நடுகை செய்யப்பட்ட ஆயிரம் தேக்குமரக் கன்றில் இருந்து 50 தேக்கு மரக்கன்றுகளை திருட்டுக் கும்பல் ஒன்று பிடுங்கி சென்றுள்ளதாக வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வகையில் திரு நகரில் இருந்து வளநகர் ஊடாக துணுக்காய் வரையிலான வவுனிக்குளத்தின் வலது கரை நீர்ப்பாசனக் கால்வாய் வீதியில் சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்திற்கு ஆயிரம் தேக்குமரக் கன்றுகள் நடுகை செய்யப்பட்டு வார த்தில் இருதடவைகள் பௌசர் வண்டி மூலம் நீர் பாய்ச்சப்பட்டு பராமரிக்கப்பட்ட இந் நிலையில், கடந்த வாரம் திருட்டுக் கும்பல் ஒன்று ஒரே வரிசையில் தொடர்ச்சியாக இருந்த 50 தேக்கு மரக் கன்றுகளை திருடிக் கொண்டு சென்றுள்ளது.

பொது நலன் கருதி நடுகை செய்யப்பட்ட தேக்கு மரக்கன்றுகளை திருட்டுக் கும்பல் தங்களது சுயலாபத்துக்காக திருடிக் கொண்டு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-15)




## கண்ணிவெடிகள் அகற்றப்படாத பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வினால் ஆபத்து

### எச்சரிக்கின்றார் – தொண்டு நிறுவன அதிகாரி

(முகமாலை)

முகமாலையை அண்டிய கண்ணிவெடிகள் அகற்றப்படாத பகுதிகளில் இருந்து சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபடுவோரால் பொது மக்களுக்கு ஆபத்து என கண்ணி வெடிகள் அகற்றும் தொண்டு நிறுவனங்கள் எச்சரித்துள்ளன.

இதுதொடர்பில் தொண்டு நிறுவன அதிகாரிகள் தெரிவிக்கையில்

முகமாலை, கிளாலி போன்ற சில பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் நிறைவடையவில்லை. இந்த நிலையில் அந்தப். பகுதிகளில் இரவு நேரங்களில் சட்ட விரோதமான முறையில் இடம்பெறும் மணல் அகழ்வுகளால் பாரிய ஆபத்து ஏற்பட்டுள்ளது.

அதாவது அப்பகுதியில் இரவு வேளைகளில் அள்ளப்படும் மணலை கண்ணி வெடிகள் அகற்றப்பட்ட பகுதிகளுக்குக் கொண்டு வந்து சேர்க்கிறார்கள். பின்னர், பகல் நேரங்களில் வெளியிடங்களுக்கு ஏற்றிச்செல்கிறார்கள்.

இவ்வாறு சட்டவிரோத மணல் அகழ்வுகளில் ஈடுபடுவோரால், கண்ணிவெடி அகற்றப்படாத பகுதிகளில் இருந்து எடுக்கப்பட்ட மணலினுள் உள்ள கண்ணி வெடிகள் கண்ணிவெடி அகற்றப்பட்ட பகுதிகளில் மீண்டும் வீசப்படுவதும், மணல் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லும் போது அதற்குள் கண்ணிவெடிகளும் சேர்ந்து எடுத்துச் செல்லப்படுவது பொது மக்களுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும்.



அத்துடன், வெடி பொருள்களுடன் அவர்கள் எடுத்துச் செல்லும் மணலை குறைந்த விலைக்கே பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றனர். அதை பரிசோதனை செய்யாமல் வாங்கும் பொதுமக்களுக்கு பாரிய ஆபத்து ஏற்பட்டுள்ளது என்பதை கவனத்தில் எடுக்க வேண்டும்.

எனவே இந்த சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்க பொலிஸார் மற்றும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுடன் இது தொடர்பில் பொது மக்களும் விழிப்புடன் இருக்கவேண்டும் என மேலும் தெரிவித்தனர். (2-9)

## திருமுறிகண்டி, இந்துபுரம் கிராம மக்களுக்கு குழாய் மூலம் குடிநீர் வசதி

### புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

(மல்லாவி )

வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி ஒரு கோடி ஒதுக்கீட்டில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட திருமுறிகண்டி, இந்துபுரம் ஆகிய கிராம மக்களிற்காக குழாய் மூலம் குடிநீர் வழங்கும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடைந்த நிலையில் பொது மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் நடராஜா - ஜெயராஜா தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவது,

திருமுறிகண்டி, இந்துபுரம் ஆகிய கிராம மக்களுக்கான குடிநீர் வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கும் வகையில் இந்துபுரம் கிராமத்தில் 50 ஆயிரம் லீற்றர் குடிநீர் தாங்கி ஒன்று அமைக் கப்பட்டு நீர் விநியோகம் செய்வதற்காக நிலத்தின் கீழ் குழாய்கள் பொருத்தப்பட்டு 30 பொது இடங்களில் இருந்து மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதன் ஊடாக சுமார் 300 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் பயனடையும் வகையில் இந்த குடிநீர் திட்டம் முன்னெடுக்கப்பட்டு இந்துபுரம் கிராம சனசமூக நிலைய நிர்வாகத்திடம் குடிநீர் சேவை கண்காணிப்பு நடைமுறைப் படுத்தும் முகமாக கையளிக்கப்பட்டுள்ளது. (2-15)

## வைத்தியசாலையில் பிறந்த குழந்தையைக் காணவில்லை

### தாயார் முறைப்பாடு

(குருமன்காடு)

வவுனியா பொது வைத்தியசாலையில் பிறந்த குழந்தை ஒன்றை நேற்று முற்பகல் 11மணியளவில் மர்ம நபர் ஒருவர் தூக்கிச் சென்றுவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வைத்தியசாலை 5ஆம் இலக்க விடுதில் கடந்த 7ஆம் திகதி இரவு பிறந்த ஆண் குழந்தை ஒன்றினை நேற்று வைத்தியசாலை விடுதியில் தனக்குஅருகில் நின்றிருந்த இளம் கர்ப்பிணி பெண் ஒருவரிடம் கொடுத்துவிட்டு குழந்தையின் தாயார் குளியலறைக்கு சென்றுவிட்டு திரும்பி வந்து பார்த்தபோது குழந்தையை வழங்கிய நபரையும் தனது குழந்தையையும் காணவில்லை என்று வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் பிரஸ்தாப தாயார் ஒருவரால் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருடப்பட்ட குழந்தை அவரின் 4ஆவது ஆண் குழந்தை என்பதும் நேற்று அவரை வீடு செல்வதற்கு வைத்தியர் விடுவித்துள்ளபோதே குழந்தையை திருடிச் சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

இதையடுத்து வைத்தியசாலையில் பொருத்தப்பட்ட சி.சி.ரி கமராவின் உதவியுடன் குழந்தையை திருடியவரை தேடும் நடவடிக்கை நடைபெற்று வருவதாக வைத்தியசாலைத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தனிப்பட்ட நபரின் கடத்தலா? அல்லது வேறு தேவைகளுக்காக குழந்தை கடத்தப்பட்டதா? போன்ற விசாரணைகளை வைத்தியசாலைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர் (2-250)

## ஆற்றுமணலுடன் பயணித்த டிப்பர் கைப்பற்று;சாரதி கைது

(மல்லாவி)

தருமபுரம் 07, ஆம் யூனிட் பகுதியில் சட்ட விரோதமான முறையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த டிப்பர் வாகனத்தை கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்திலன் பேரில் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். விமல குணரட்ணா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 09, மணியளவில் நடை பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்திற்கிடமான வகையில் காணப்பட்ட டிப்பர் வாகனத்தைதடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது, அதில் அனுமதிப் பத்திரமின்றி ஆற்று மணலை ஏற்றி பயணித்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, டிப்பர் வாகனம் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் நடை பெற்று முடிந்த நிலையில், அவரை பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் மீண்டும் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களுடன் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (2-15)

# பச்சிளம் குழந்தையை விற்பனை செய்த பெண் உட்பட இருவர் கைது

## வவுனியாவில் சம்பவம்

(குருமன்காடு)

பிறந்த பச்சிளம் குழந்தையை பணத்துக்காக விற்பனை செய்த பெண் ஒருவரையும், அவருக்கு உடந்தையாக செயற்பட்ட பெண் ஒருவரையும்வவுனியா பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த பெண் ஒருவர் பிறந்து சில நாட்களே ஆன பச்சிளம் குழந்தை ஒன்றை யாழ்ப்பாணத்தில் ஒரு இலட்சம் ரூபா பணத்திற்கு விற்பனை செய்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து குழந்தையை பிரசவித்த பெண்ணையும் குழந்தையை விற்பனை செய்வதற்கு இடைத்தரகராக செயற்பட்ட வவுனியா தேக்கவத்தையை சேர்ந்த நடுத்தர வயதுடைய பெண் ஒருவரையும் கைது செய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் தெரிவிக்கையில்,

விற்பனை செய்யப்பட்ட குழந்தையை மீட்டுள்ளோம். குழந்தையை யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்த பெண் மணி ஆயிரம் ரூபாவிற்கே குழந்தையை வாங்கி ஒரு இலட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக தெரிவித்தனர்.

அத்துடன் கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் நீதிமன்றத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக குழந்தை தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-250)

# பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும்

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

பெண்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு அரசியல் கட்டமைப்பை உருவாக்கி ஆட்சி செய்கின்ற சந்தர்ப்பத்தை பெண்கள் இழந்து விடக்கூடாது என மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண மகளிர் அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மாவட்ட அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

பெண்கள் போராட்டங்கள் மூலம் மகளிர் அமைப்புக்கள் பல்வேறு வெற்றிகளை தொடர்ச்சியாகவே பெற்றுவருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சுமார் எண்ணாயிரத்து 600 இற்கும் மேற்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் காணப்படுகின்றன.

பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் உண்மையில் வடக்கு மாகாணத்தில் மிகமிக அதிகம். இக் குடும்பங்களுக்கான வாழ்வாதாரம் மற்றும் சமுக மேம்பாட்டு திட்டங்களை செயற்படுத்த வேண்டியதும் அவர்களுக்கான சமுக நீரோட்டத்தில் தாங்களும் ஒரு சமூக அமைப்பை கொண்டவர்களாக வருவதற்குரிய சகல நடவடிக்கைகளையும் நாங்கள் செய்யவேண்டியது அரசாங்கத்தினது முழுமையான கடமையாகும்.

மத்திய அரசாங்கத்தினூடாக கிடைக்கின்ற நிதிகள் மற்றும் மாகாண அரசினூடாக கிடைக்கின்ற நிதிகளை ஒன்றுதிரட்டி ஒட்டு மொத்தமாக இந்த சமூகங்களினுடைய விசேடமாக மகளிர் தேவைப்பாடுகள் தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் நாம் எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு என்றும் தயாராகவே இருக்கின்றோம்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் 63 பெண் வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட்டனர். இதில் நான்கு பெண் வேட்பாளர்கள் மட்டுமே களத்திலே நின்று வெற்றி பெற்றனர்.

நீங்கள் பெண்கள் என்ற ரீதியில் குரல் கொடுக்கின்றீர்கள். உங்களுடைய அரசியல் உரிமை என்பது இவ்வாறான உள்ளூராட்சி தேர்தல்கள் அல்லது உள்ளூராட்சி மட்டங்களில் இருந்து எழ வேண்டும் என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.

அதனூடாக பெண்கள் தலைமைதாங்கும் பெண்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு அரசியில் கட்டமைப்பை நீங்களாகவே உருவாக்கி ஆட்சிசெய்கின்ற சந்தர்ப்பத்தை நீங்கள் இழந்து விடக்கூடாது. இன்று பெண்கள் துணிந்து விட்டார்கள்.

தங்களுடைய எந்த ஒரு செயற்பாட்டையும் மூடி மறைக்காமல் அதனை வெளிப்படுத்தி அதற்கான ஒரு போராட்டத்தை நடத்தும் அளவிற்கு ஒரு துணிச்சல் மிக்கவர்களாக மாறியுள்ளனர் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

ஒரு ஆணின் முன்னேற்றத்திற்கு பின்னணியில் ஒரு பெண் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றாரோ அதேபோல் ஒரு சமூகத்தினுடைய மேம்பாடு சமூகத்தினுடைய வெற்றி சமூகத்தினுடைய சிறப்புக்கு பெண்களின் பங்களிப்பு இன்றியமையாதது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)




# வவுனியா சுற்றுவட்ட வீதியில் நேற்று நடைபெற்ற சர்வதேச மகளிர் தினம்





(பனிக்கன்குளம்)

சர்வதேச மகளிர் தினம் நேற்று காலை 9.30 மணியளவில் வவுனியாவில் நடைபெற்றது.

வவுனியா சுற்று வட்ட வீதியிலுள்ள கிராமிய அபிவிருத்தித் திணைக்கள மண்டபத்தில் வவுனியா இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பொறுப்பதிகாரியும் சட்டத்தரணியுமான ஆர். எல்.வசந்தராஜா தலைமையில் இடம்பெற்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையை அடுத்து மிகவும் எளிமையான முறையில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம விருந்தினராக திருமதி சாமுவேல் ஜானகி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வவுனியா வளாக நிதி மற்றும் முகாமைத்துவ தலைவர் மற்றும் ஜான்சிலா மஜித்,முல்லைத்தீவு பெண்கள் உரிமைகள் செயற்பாட்டாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் வவுனியா பொலிஸ் திணைக்கள சிறுவர்,பெண்கள் பிரிவு அதிகாரிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் , அரச திணைக்களப் பணியாளர்கள் , சமூக ஆர்வலர்கள் , பெண்கள் அமைப்பினர் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர் (2-281)

# இளைஞர் படையணியில் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்



(பனிக்கன்குளம்)

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சின் கீழ் இயங்கி வரும் இளைஞர் படையணியில் பயிற்சியை நிறைவு செய்த 83 பேருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள இளைஞர் படையணி அலுவலகத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் முதலாவது இளைஞர் படையணியான இங்கு மூன்றாவது அணியில் ஆளுமை விருத்தியும் தலைமைத்துவமும் என்ற கற்கை நெறியை பூர்த்தி செய்த 83 பேருக்கே இவ்வாறு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

முல்லைத்தீவு இளைஞர் படையணியின் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.எம்.ஆர். எஸ்.வன்னிநாயக்க தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட உதவி மாவட்ட செயலாளர், இளைஞர் படையணியின் மாகாண பணிப்பாளர், இலங்கை போக்குவரத்து சபை முல்லை சாலை முகாமையாளர், மு/வற்றாப்பளை மகா வித்தியாலய அதிபர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர். (2-281)

# விவசாயிகள் பயிர்களையும் பயிரிட முன்வர வேண்டும்

## கிளி.மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவுகின்ற வரட்சியினால் குளங்களின் நீர்மட்டம் குறைவடைந்துள்ள நிலையில் இரணைமடுக்குளத்தில் தற்போதுள்ள நீரைப் பயன்படுத்தி 900 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வே. ஆயகுலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், தற்போது நீரின் பயன்பாடும் பாதுகாப்பும் என்பது மிக முக்கியமானதொன்றாகும்.

அதாவது குடிப்பதற்கு எவ்வாறு நீர் பெற்றுக் கொள்ளப்படுவதோ அதேபோல விவசாயத்திற்கும் அளவுகளிலேயே நீர் பயன்படுத்தப்படுகின்றது.

விவசாயச்செய்கையோடு நீரையும் பாதுகாக்க வேண்டும். இதனை விவசாயிகள் சரியாகப் பின்பற்ற வேண்டும்.

கடந்த வருடத்தில் குளத்தில் நீரை வைத்துக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட சிறுபோகச் செய்கையில் மேலதிக விதைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அவ்வாறான பயிர்ச் செய்கைகள் சீர்செய்யப்பட்டன.

மாவட்டத்தில் விவசாயிகளால் தெரிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புக்கள் தங்களது நற்பெயரைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். சில அமைப்புக்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் ஏனைய தரப்புக்களால் முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன.

இதனால் சில அமைப்புக்களின் கணக்குகள் கணக்காய்வுகளுக்கு உட்படுத்தப்படுகின்றன.

நெற்செய்கையுடன் மட்டும் நின்று விடாது உழுந்து, பயறு, கௌபி, நிலக்கடலை போன்ற பயிர்களை பயிரிடுவதற்கு முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-315)

# 10 நிமிடங்களில் இரு விபத்துக்கள்

(குருமன்காடு)

வவுனியா புகையிரத நிலைய வீதியில் நேற்றுக் காலை 10 நிமிட இடைவெளியில் இரு வேறு விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இந்த விபத்துக்களில் இரு ஆசிரியர்கள் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா புகையிரத நிலைய வீதியில் இலங்கை வங்கிக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆசிரியை மீது பின்னால் பயணித்த ஆட்டோ மோதியுள்ளது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த சுந்தர்ராஜ் வைஜெயந்தி மாலா (வயது-55) என்ற தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த ஆசிரியை படுகாயமடைந்தார்.

விபத்தை ஏற்படுத்திய ஆட்டோ சாரதி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். இதனையடுத்து விபத்துக்குள்ளான ஆசிரியை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அடுத்த 10 நிமிடங்களில் புகையிரத நிலைய வீதியிலுள்ள பண்டாரிக்குளம் செல்லும் பிரதான சந்தியில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த ஆசிரியை மீது மோட்டார் சைக்கிள் மோதி விபத்து நேர்ந்துள்ளது.

இதன்போது துவிச்சக்கரவண்டியில் பயணித்த சந்திரன் வசந்தி எனும் (வயது-42) என்ற குருமன்காடைச் சேர்ந்த ஆசிரியை படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் இரு விபத்துக்கள் தொடர்பிலும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# கடந்த ஆண்டில் 66 மில்.ரூபாவில் 1,174 மலசலகூடங்கள் நிர்மாணிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2017ஆம் ஆண்டில் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் ஆயிரத்து 174 மலசலகூடங்கள் 66.33 மில்லியன் ரூபா நிதிசெலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்வின் பின்னரான காலத்தையடுத்து சுகாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களினூடாக மீள் குடியேறிய மக்களுக்கான மலசலகூடவசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கடந்த 2017 ஆம் ஆண்டில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் பல்வேறு திட்டங்களினூடாக ஆயிரத்து 174 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதாவது மாற்றுத்திறனாளிகளுக்கான ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான 19 மலசலகூடங்களும் 55 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆயிரத்து 155 மலசலகூடங்களும் இவ்வாறு 66.36 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளன. (2-315)

# அரசு செய்ய வேண்டியதை நான் செய்தேன்

## கலவர பூமியில் மகிந்த



(கொழும்பு)


நாட்டில் தற்போது இனங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைக்கு அரசாங்கம் செய்ய வேண்டிய கடமையை தான். நான் செய்தேன் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை கண்டிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட முன்னாள் ஜனாதிபதி, சர்வ மதத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். முஸ்லிம் மக்கள் தன்னிடம் வேண்டிக்கொண்டதால் தான் இந்த கலந்துரையாடலுக்கு வந்ததாகவும் ஒரு மத்தியஸ்தராகவே இங்கு செயற்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்கள் பொறுமையாக இருப்பதை போல் முஸ்லிம் மக்களும் பொறுமையாக இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை குறித்து அரசு பொறுப்புக் கூற வேண்டும் என்றும் அமைதியுடனும், பொறுமையுடனும் அனைத்து மக்களும் செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## மருமகனுடன் இணைந்து
## மகனை அடித்துக் கொன்ற தந்தை



(கொழும்பு)

பொகவந்தலாவ, பொகவனை தோட்டப்பகுதியில் தடியால்தாக்கி ஒருவர்கொலை செய்யப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இடம் பெற்றுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தைக்கும் மகனுக்கும் மதுபோதையில் ஏற்பட்ட வாய் தர்க்கம் மோதலாக மாறி தந்தையும்மருமகனும்இணைந்து தடியால் தாக்கியமை காரணமாக மகன் சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இருவர் இணைந்து குறித்த நபரை தலைப்பகுதியில் கடுமையாக தாக்கியமையால் அதிகமான இரத்தம் வெளியேறியமையின் காரணமாகவே குறித்த நபர் மரணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர் 37 வயதுடைய ஆறுமுகம் சிவசூரியன் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் இருவரும் பொகவந்தலாவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

கொலை செய்யப்பட்டவரின் சடலம் பொகவந்தலாவ வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு ஹற்றன் நீதிமன்ற நீதவானின் மரண விசாரணையின் பின்னர் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக சடலம் நாவலப்பிட்டிய மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுடன் இராணுவத் தளபதி மகேஷ் சந்திப்பு



(கண்டி)

கண்டி மாவட்டத்தில் திகன, அகுரன, ஹலகா, கடுகஸ்தொட, மெனிக்கின்ன, அபதென்ன, பூஜாபிட்டிய போன்ற இடங்களில் அண்மைக்காலங்களில் ஏற்பட்ட சம்பவங்கள் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கலவரம் நடைபெற்ற இடத்திற்கு இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க நேற்று முன்தினம் நேரடி விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இந்த விஜயத்தில் கண்டி பள்ளிவாசலின் மௌலவி மற்றும் அப்பிரதேச முஸ்லிம் மக்களை சந்தித்து உரையாடினார்.

சம்பவம் இடம்பெற்ற பிரதேசங்களில் உள்ள பொது மக்களுக்கோ அல்லது அவர்களது உடைமைகளுக்கோ சேதம் ஏற்படாதவாறு இலங்கை இராணுவத்தினர் கடமைகளை மேற்கொள்வார்கள் என்று இராணுவ தளபதி அப்பிரதேச மக்களுக்கு உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய சேதமாக்கப்பட்ட கட்டடங்கள் ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்குள் மீள நிர்மாணித்து தருவதாகவும் தெரிவித்தார்.


அத்துடன், கலவரம் நிமித்தம் பாதிக்கப்பட்டு பாடசாலைகளில் தங்கியிருக்கும் பொது மக்களையும் நேரில் சென்று பார்வையிட்டு அவர்களுடன் உரையாடியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அமைதியான முறையில் ஜும்மா தொழுகைகள்

நாட்டின் பல பகுதிகளிலும் நேற்று வெள்ளிக்கிழமை முஸ்லிம்களின் ஜும்மா தொழுகைகள் அமைதியான முறையில் நடைபெற்று முடிவடைந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அசம்பாவிதங்கள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை.

ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைகளில் ஜும்மா தொழுகைகள் அமைதியான முறையில் நடைபெற்று வருகின்ற போதும், கடந்த சில தினங்களாக நாட்டில் நிலவிய முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத சூழ்நிலையில்நேற்று ஜும்மா தொழுகை மக்கள் மத்தியில் விசேட கவனத்தைப் பெற்றிருந்தது.

இந்நிலையில் முஸ்லிம் மக்கள் தத்தமது கிராமங்களில் பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தியதுடன், இலங்கை பாதுகாப்புப் பிரிவும் நாடளாவிய ரீதியில் அனைத்துப் பள்ளிவாசல்களுக்கு பாதுகாப்பு வழங்கியது. அதிலும் பிரச்சினைகள் உருவாக்கலாம் எனக் கருதிய பள்ளிவாசல்களுக்கு விசேட பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன.



அதேவேளை அண்மைய இனவாத தாக்குதலுக்கு இலக்கான திகன பிரதேசத்தின் ஜும் ஆ தொழுகை சேதமடைந்த பள்ளிவாசலின் வெளிப்புறத்திலும், பாடசாலை மைதானத்திலும் நடைபெற்றது. (இ-7)

## கல்முனை மாநகர் தரவை விநாயகர் ஆலய வீதி தோரணத்திற்கு விசமிகளால் தீ வைப்பு





(கல்முனை)

கல்முனை மாநகரில் அமைந்துள்ள தரவை சித்தி விநாயகர் ஆலய வீதி தோரணத்திற்கு விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம் பெற்றுள்ளது. நடந்து முடிந்த வருடாந்த ஆலய உற்சவத்திற்காக அமைக்கப்பட்டிருந்த தோரணம் ஒன்றுக்கே தீ வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தையடுத்து விடயம் தொடர்பாக பொலிஸாருக்கும் உடனே அறிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணை செய்துள்ளனர். (இ-7)

## கசிப்புடன் கைதான பெண்களுக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு!

(கரணவாய்)

கசிப்புடன்கைதுசெய்யப்பட்ட இரண்டு பெண்களுக்கு தலா 25,000 ரூபா வீதம் தண்டம் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி. நளினி சுபாகரன் உத்தரவிட்டார். ஒருலீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்ட துன்னாலை கிழக்கைச் சேர்ந்த 26 வயதுப் பெண் ஒருவரையும், கசிப்பு வழக்கில் நீதிமன்றிற்கு முன்னிலையாகாமல் பிடிவிறாந்து பிடிக்கப்பட்ட 65 வயதுடைய பெண் ஒருவரையும் கைது செய்த நெல்லியடி பொலிஸார் இருவரையும் நேற்றுநீதிமன்றில்முற்படுத்திய போது குற்றத்தினை அவர்கள் ஏற்றும் கொண்டதையடுத்து இவ்வாறு தண்டம் விதித்து தீர்ப்பளித்தார். (இ-60)

## நெல்லியடியில் மாவாப் பாக்குடன் கைதானவர்களுக்கு நேற்று பிணை

(கரணவாய்)

மாவாப்பாக்குடன் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களை தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி. நளினி சுபாகரன் விடுவித்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நெல்லியடிப் பொலிஸாரால் மாவா பாக்குடன் கைது செய்யப்பட்ட தேவரையாளிப் பகுதியைச் சேர்ந்த இருவரை நேற்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போதே இருவரையும் பிணையில் நீதவான் விடுவித்தார். (இ-60)

# வன்முறைகள் குறித்து விசாரணை நடத்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழு வேண்டும்



## நாடாளுமன்றில் ஐ.தே.க. கோரிக்கை

(கொழும்பு)

அம்பாறை, கண்டி பகுதிகளில் அண்மைய நாட்களாக இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை அமைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றிய அக்கட்சியின் மூத்த உறுப்பினரும், தேசிய கொள்கை திட்டமிடல் இராஜாங்க அமைச்சருமான கலாநிதி ஹர்ஷ டி சில்வா இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இந்த வன்முறைகளுக்குப் பின்னால் தூண்டுதல்களை மேற்கொண்ட அத்தனை நபர்களையும் கைது செய்வதற்கான விசாரணையை ஜனாதிபதி ஆணைக்குழு முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இனவாதத்தை தூண்டும் வகையில் பொய்யான பிரசாரங்களை செய்து, எவரையும் தூண்டக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# கையூட்டல் சட்டக் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின், அது தொடர்பான சட்ட கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நிதி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், ஆணைக்குழுவின் பணிப்பாளரான ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 21 ஆண்டுகளாக கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு சட்டத்தில் எந்தவிதமான திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

தனியார் துறையினர் கையூட்டல் பெற்றால் இந்த நாட்டில் குற்றமில்லை.

இந்த நிலையில், தனியார் துறையினர் கையூட்டல் பெறுவதை குற்றமாக கருதுவது தொடர்பில் சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்வது குறித்து கவனம் செலுத்தப்படுவதாக பணிப்பாளர் தெரிவித்தார். இதேவேளை, ஊழல்களில் ஈடுபடும் பிரபலமானவர்களைச் சுற்றி, பல்வேறு தொழிற்றுறையினர் உள்ளனர்.

ஊழல்களில் ஈடுபட்டால், அதிலிருந்து தப்பிப்பதற்கு எந்த இடத்தை நாட வேண்டும் என அவர்கள் அறிந்து வைத்துள்ளனர் என்று ஆணைக்குழுவின் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மகளிர் தினத்தை முன்னிட்டு தென்னங்கன்று வழங்குதல்

(யாழ்ப்பாணம்)

தாவடி வடக்கில் தென்னை பயிர்ச் செய்கை சபையும் தாவடி வடக்கு கற்பக தரு சங்கமும் இணைந்து கற்பக தரு சங்க பெண்களுக்கான பெண்களின் மேம்பாடு தொடர்பான கலந்துரையாடலும் விழிப்புணர்வு நிகழ்வும் இடம்பெற்றது.





சங்க அங்கத்தவர்களுக்கு மகளிர் தினத்தை முன்னிட்டு 2 தென்னங்கன்றுகள் வீதம் தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் மூலம் வழங்கப்பட்டது.

இங்கு கருத்து தெரிவித்த பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன், கற்பகதரு சங்கங்களில் பெண்களின் பங்களிப்பு தொடர்பாகவும், தாவடி வடக்கு பெண்கள் கூலித் தொழிலுக்கு செல்வதனால் குறைந்தது 2 தென்னம்பிள்ளைகளையாவது வளர்த்து பக்கவருமானத்தை பெறுவதற்கும் தென்னைசார் கைத்தொழில்களை செய்து பயன்பெறுமாறும் கேட்டுக் கொண்டார். (இ-7)

# வன்முறைகளின் பின்னணியில் இருக்கும் 2 நாடாளுமன்ற உறுப்பினர்களும் யார்?

## ஜே.வி.பி. கேள்வி

(கொழும்பு)

வன்முறைச் சம்பவங்களுக்குக் காரணமானவர்கள் எனக் கூறப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார் என்பதனை வெளிப்படுத்த வேண்டும் என சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை நாடாளுமன்றில் குறித்த கோரிக்கையினை விடுத்துள்ளன.

கண்டி மாவட்டத்தில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களுக்கு முக்கிய ஆதரவாளர்களாகவும், முன்னின்று செயற்பட்டதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் யார் என்பதனை உடனடியாக வெளிப்படுத்த வேண்டுமெனவும் குறித்த கட்சிகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதேவேளை குறித்த வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய முக்கிய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்கு கொழும்பிற்கு அழைத்து வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இணையத்தளங்களை தடை செய்வதில் பயனில்லை

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

இணையத் தளங்களை தடை செய்வதில் பயனில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இணையதளங்கள், சமூக ஊடக வலையமைப்புக்களை தடை செய்வதன் மூலம் இனப் பிரச்சினைக்கு எந்த வகையிலும் தீர்வு காண முடியாது என அவர் தெரிவித்தார்.

வழக்கு விசாரணை ஒன்றுக்காக கொழும்பு உயர் நீதிமன்றிற்கு நேற்று சென்றிருந்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொய்ப் பிரசாரங்களை தடுக்கும் நோக்கில் இவ்வாறு சமூக ஊடக வலையமைப்புக்கள் தடை செய்யப்பட்ட போதிலும் அதில் பெரிய பயன் கிடையாது எனத் தெரிவித்தார்.

தடைகளை மீறி இணையத்தைப் பயன்படுத்தக்கூடிய மாற்று வழிகள் உண்டு என சுட்டிக்காட்டியுள்ள அவர் 2015ஆம் ஆண்டில் இந்தியாவும் இது போன்றதொரு முயற்சியை எடுத்த போதிலும் அதில் எவ்வித பயனும் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தார். (இ-7)

# ஒவ்வொரு பிரஜையையும் பாதுகாப்பது அரசாங்கத்தின் தலையாய கடமை

## இந்துமாமன்றம் இடித்துரைப்பு

(கொழும்பு)

இனவாதத்தையும், சிறுபான்மை மக்களுக்கெதிராகத் தூண்டப்படும் இனமதத் துவேச வன்முறைகளையும், முக்கியமாக சமீபத்தில் கண்டி மற்றும் ஏனைய பிரதேசங்களில் இஸ்லாமிய மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட மத வன்முறைகளையும் இந்நாட்டின் இந்து மன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கைப் பொறுப்புகளினதும் கூட்டமைப்பான அகில இலங்கை இந்து மாமன்றம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இன, மதத் துவேச பாரபட்சத்தில் எவரையும் ஈடுபட விடக்கூடாது. மதக்கலாசார வேறுபாடுகள் மதிக்கப்பட வேண்டியவைதான். ஆனால் பாரபட்சதுவேசம் காட்டுவதை அப்படியான வேறுபாடுகள் நியாயப்படுத்தமாட்டாது.

தனது நாட்டின் அரசாங்கத்திடம் இருந்து எந்த ஆபத்தோ பயமோ இல்லை என்று ஒவ்வொரு பிரஜையும் உணர வேண்டும். தனது நாட்டின் ஒவ்வொரு பிரஜையையும் பாதுகாப்பது அந்நாட்டின் தலையாய கடமையாகும.

நியாயமானதும் சரியானதுமான முறையில் தாங்கள் நடத்தப்பட வேண்டும் என்பதே சர்வதேச ரீதியில் சகல பிரஜைகளும் ஒவ்வோர் அரசாங்கத்திடமும் இருந்து (கிடைக்காவிட்டாலும்) ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

இன, மத, மொழி வேறுபாடு காட்டும் தீய எண்ணத்துடன் எவரையும் பாரபட்சமாக நடத்துவதற்கு எவரும் அரச அதிகாரத்தைப் பாவிக்க அனுமதிக்கப்படக்கூடாது.

இந்நாட்டின் அரசியலமைப்புச்சட்டம் 9ஆவது சரத்தில் புத்தமதத்திற்கு முன்னிடம் கொடுக்கப்பட்டாலும் எவரும் தாம் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை மேற்கொள்வதற்கான சுதந்திரத்தை ஏனைய சரத்துக்களான 10 மற்றும் 14ம் ஏனைய மதங்களுக்கும் தந்து உள்ளது என்பதை ஒவ்வொருவரும் அறிந்து உணர்தல் வேண்டும்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக அரசும் அரச அதிகாரிகளும் சிறுபான்மை மத மக்களின் சமய உரிமைகளை பாதுகாக்க வேண்டிய தங்களின் கடமைகளிலிருந்து தவறிவிட்டனர் என அகில இலங்கை இந்து மாமன்ற விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## புதையல் தோண்டிய மூன்று பேர் கைதாகினர்

(திருகோணமலை)

திருகோணமலை ஹொரவபொத்தானை பகுதியில் புதையல் தோண்டிக்கொண்டிருந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலை யில், அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# பாரதம்

## மாணவர்கள் அரசியல் அவதானிகளாக செயற்படவேண்டும்-மக்கள் மய்யத்தின் தலைவர் கமல் அறிவுரை



(சென்னை)

அரசியலில் மாற்றம் கொண்டுவருபவர்கள் மாணவர்கள் தான். எனவே அவர்கள் அரசியலை கூர்ந்து கவனிக்க வேண்டும் என மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

சென்னை காலவாக்கத்தில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில், நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற கலாசார நிகழ்வில் கலந்து கொண்டு கமல்ஹாசன், அங்கு உரையாற்றிய போதே மேற்படி தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

மாணவர்கள் அரசியலுக்கு வரவேண்டும் என்று அவசியம் இல்லை. ஆனால் தொடர்ந்தும் அவதானித்துக் கொண்டிருக்க வேண்டும்.

எப்படி கலையும், விளையாட்டும், அறிவும், அறிவியலும் உங்களை காப்பாற்றப் போகிறதோ அதே போன்று உங்கள் வாழ்வை மாற்றியமைக்கும் ஒரு சக்தியாக அரசியல் இருக்கும். நீங்கள் அனைவரும் அரசியலில் ஈடுபட வேண்டும் என நான் சொல்லவில்லை ஆனால்அவதானிக்க வேண்டும்.

எனது தலைமுறையில் இருந்த மாணவர்கள் அரசியல் குறித்து அவதானிக்காமல் இருந்தமை தான் இன்றைய நிலைமையில் அரசியல் இவ்வாறிருக்க காரணம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

## துருக்கி ஆட்சி கவிழ்ப்புடன் தொடர்பு!

## ஊடகவியலாளர்களுக்கு 7 ஆண்டு சிறைத்தண்டனை

(இஸ்தான்புல்)

துருக்கியில் கடந்த 2016ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆட்சி கவிழ்ப்பில் அங்குள்ள ஊடகவியலாளர்களுக்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டது.

இந்த வழக்கில் இஸ்தான்புல் நீதிமன்றம் நேற்று 25 ஊடகவியலாளர்களுக்கு ஏழு ஆண்டுசிறைத்தண்டனை வழங்கியுள்ளது.

ஊடகவியலாளர்கள் 23 பேர் ஆயுதமேந்திய தீவிரவாதக் குழு உறுப்பினர்கள் என குற்றஞ்சாட்டப்பட்டனர். மேலும் இரண்டு பேர் சில குற்றச்சாட்டுக்களில் தொடர்பு இருப்பதாக டோக்கன் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அனைத்து ஊடகவியலாளர்களும் அமெரிக்காவைச் சேர்ந்த போதகர் பெத்துலா குலென், குழுவுக்கு நெருக்கமான ஊடகங்களுக்குவேலைசெய்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## ஊழியர்களின் ஆறு கோடி சம்பள இழுபறி மல்லையாவின் சொகுசு கப்பல் பறிமுதல்

(லண்டன்)

ஊழியர்களின் சம்பள மீதிக்காக விஜய் மல்லையாவின் சொகுசு கப்பலை மால்டா அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

தொழில் அதிபர் விஜய் மல்லையா, வங்கிகளில் ரூ.9 ஆயிரம் கோடி கடன் வாங்கி விட்டு திருப்பி செலுத்தாமல் லண்டனுக்கு தப்பிச் சென்றுவிட்டார். அவரை இந்தியாவுக்கு கொண்டு வர மத்திய அரசு தீவிர முயற்சி செய்து வருகிறது.

மத்திய தரைக்கடல் பகுதியில் உள்ள மால்டாதீவு



நாட்டில் மல்லையாவுக்கு சொந்தமான 'இந்தியன் எம்ப்ரஸ்' என்ற சொகுசு கப்பல் நிறுத்தப்பட்டுள்ளது.

அதில் பணிபுரியும் 40-க்கும் அதிகமான ஊழியர்களுக்கு கடந்த 4 மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை. ரூ.6 கோடிக்கும் மேல் சம்பள மீதி வைத்திருப்பதால் மல்லையாவு டன் இது தொடர்பாக பேச்சு வார்த்தை நடந்த போதிலும் எந்த பலனும் இல்லை.

இதைத் தொடர்ந்து, மால்டா அதிகாரிகள் மல்லையாவின் கப்பலை பறிமுதல் செய்துள்ளனர். நீதிமன்றம் மூலம் ஊழியர்களின் சம்பள மீதி உள்ளிட்ட தொகைகளை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அங்குள்ள தொழிற்சங்கம் தெரிவித்து உள்ளது. (10)

## கிழக்கு கௌட்டாவில் சிறுவர்கள் பாதிப்பு உதவிக்கு யுனிசெப் வலியுறுத்து

(கௌட்டா)

சிரியாவின் கிழக்கு கௌட்டாவில் மோதலினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு அவசர மனிதாபிமான உதவிகள் தேவைப்படுவதாக, யுனிசெப் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் HENRIETTA FORE தெரிவித்துள்ளார்.

சிரியாவில் வன் முறையால் பாதிக்கப்பட்டுள்ள அகதிகள் பலர், லெபனானில் தற்காலிக முகாமொன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், அம்முகாமுக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை சென்று அகதிகளைப் பார்வையிட்ட பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கிழக்கு கௌட்டாவின் தற்போதைய நிலைமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அவர், 'கிழக்கு கௌட்டாவில் மோதலினால் சிறுவர்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு மனிதாபிமான உதவிகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன. சிறுவர்கள் உணவு மற்றும் குடிநீர் பற்றாக்குறையை எதிர்நோக்குவதுடன், இவர்கள் மத்தியில் தொற்று நோய்களும்பரவ ஆரம்பித்துள்ளன.

'இந்தச் சிறுவர்களின் மனிதாபிமான நிலைமையைக் கவனத்திற்கொண்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளை நாம் வழங்க வேண்டும்' எனவும் அவர் கூறியுள்ளார்.

கிழக்கு கௌட்டாவில் போராளிக் குழுவினருக்கும் அரசாங்கப் படையினருக்குமிடையில் கடந்த பெப்ரவரி 18ஆம் திகதி மோதல் ஆரம்பித்ததிலிருந்து இதுவரையில் சிறுவர்கள் உட்பட 900 பேர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்காக ஐ.நா. உதவி முகவரகம் நிவாரணப் பொருட்களை கடந்த 5ஆம் திகதி கொண்டு சென்றமை குறிப்பிடத்தக்கது. (10)

## குக்கரில் போட்டியிட்டு இரட்டை இலையை மீட்பேன்- தினகரன் உறுதி

(டில்லி)

தினகரனுக்கு குக்கர் சின்னம் மற்றும்அ.தி.மு.க. அம்மா என்ற பெயரை வழங்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையத்திற்கு டில்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆர்.கே.நகர் இடைத் தேர்தலில் தினகரன் குக்கர் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதையடுத்து வர இருக்கும் உள்ளாட்சித் தேர்தலிலும்தங்கள் அணிக்கு குக்கர் சின்னத்தையே ஒதுக்க வேண்டும்.மேலும் அ.தி.மு.க. அம்மா என்ற பெயரை வழங்க உத்தரவிடக்கோரி டில்லி உயர் நீதிமன்றில் தினகரன் அணி சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த டில்லி உயர்நீதிமன்றம் தேர்தல் ஆணையத்தை பதில்மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டது.

டில்லி உயர்நீதிமன்றில் இந்திய தேர்தல் ஆணையம் சார்பில் தினகரன் அணி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி கிடையாது. தினகரன் அணிக்கு கட்சி பெயரை வழங்க இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட முடியாது.

உள்ளாட்சி தேர்தலில் எங்கள் வேட்பாளர்கள் வெவ்வேறு சின்னத்தில் போட்டியிட முடியாது என்பதால், பொதுவாக குக்கர் சின்னத்தை கேட்டுள்ளோம் என்று இரட்டை இலை சின்னம் தொடர்பான வழக்கில் டில்லி உயர்நீதிமன்றில் தினகரன் மனு தாக்கல் செய்தார். உள்ளாட்சி தேர்தலில் பிளவுபட்ட அமைப்புகளுக்கு தனிப்பட்ட பொது சின்னம் வழங்க சட்டம் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டு இருந்தார்.

அனைத்திந்திய அம்மா திராவிட முன்னேற்ற கழகம், எம்.ஜி.ஆர். அம்மா முன்னேற்ற கழகம், அம்மா எம்.ஜிஆர் முன்னேற்ற கழகம் என மூன்று பெயர்களை டி.டி.வி. தினகரன் டில்லி உயர் நீதிமன்றில் பரிந்துரைத்துள்ளார். இந்த பெயர்களில் ஏதாவது ஒன்றை தங்கள் அணிக்கு வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

இந்த மனு மீதான விசாரணை நேற்று டில்லி உயர் நீதிமன்றில் நடைபெற்றது. இந்த விசாரணையின் போது தினகரனுக்கு குக்கர் சின்னம் மற்றும் அ.தி.மு.க. அம்மா என்றபெயரை வழங்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையத்திற்கு டில்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஆர்.கே. நகர் தொகுதி எம்.எல்.ஏ. ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

வரும் உள்ளாட்சித் தேர்தலில் குக்கர் சின்னத்தில் போட்டியிட்டு இரட்டை இலைச்சின்னத்தை மீட்டெடுப்பேன் என உறுதியளித்தார். (10)

## பா.ஜ.கவினரின் கர்நாடகாவிற்

(கர்நாடகா)

பா.ஜ.கவின் கடும் எதிர்ப்பையும் மீறி மாநிலத்துக்கான தனிக் கொடியை முத சித்தராமையா நேற்று முன்தினம் பெங்க அறிமுகம் செய்து வைத்தார்.

கடந்த சில ஆண்டுகளாக கர்நாடக அர மான நவம்பர் 1 ஆம் திகதி அரச நிகழ் மஞ்சள், சிவப்புக் கொடியை பயன்படுத்



இதையடுத்து கன்னட அமைப்பினர் இந்தக் கர்நாடக மாநிலத்தின் கொடியாக அறிவிக் டும் என கோரி வந்தனர்.

கர்நாடக முதலமைச்சர் சித்தராமைய துக்கு தனியாக கொடியை வடிவமைப்பதற் கொண்ட வல்லுநர் குழுவை உருவாக்கி


இந்தக் குழு கர்நாடக மாநில கொடி வாக்கி, இது தொடர்பான பரிந்துரை அறி

## தீக்கிரையால் மூவர் பலி;

(மும்பை)

மராட்டிய மாநிலத்தில் உள்ள தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் சி பலியாகினர்.

மகாராஷ்டிரா மாநிலத் தலைநகர் மு இருந்து 150 கி.மீற்றர் தொலைவில் உள்ள அணுசக்தி மையம் உள்ளிட்டவை இய



கிறது. இதன் அருகில் பொய்சர் - தாராப்பு பேட்டையும் இந்த தொழிற்பேட்டையில் நிறுவனங்களும் செயற்பட்டு வருகின்றன.

இந்நிலையில், அங்குள்ள தனியார் கம்பனியில் நேற்று முன்தினம் இரவு தீப்பிடித்தது. கம்பனியில் பரவிய தீ அ ஏனைய கம்பனிகளுக்கும் பரவியது. இ மணியளவில் திடீரென பயங்கர வெடி கேட்டது. சுமார் 10 கி.மீற்றர் தொலைவு

# வெளிநாடு

## னரின் கடும் எதிர்ப்பையும் மீறி விற்கு மூவர்ண தனிக்கொடி


பையும் மீறி, கர்நாடக
டியை முதலமைச்சர்
தினம் பெங்களூருவில்

கர்நாடக அரசு, உதய
அரச நிகழ்ச்சிகளில்
பயன்படுத்தி வந்தது.

கடந்த மாதம் கர்நாடக அரசின் கன்னட கலாசாரத் துறையிடம் சமர்ப்பித்தது.

இதற்கு எதிர்க்கட்சியான பா.ஜ.க, 'நாட்டில் மாநிலங்களுக்காக தனிக் கொடி உருவாக்க தேவை இல்லை. இது தேசிய ஒற்றுமைக்கு பாதிப்பை ஏற்படுத்தும்' என எதிர்ப்பு தெரிவித்தது.

கர்நாடக மாநிலத்தின் தனிக் கொடியை சித்தராமையா நேற்று முன்தினம் அறிமுகம் செய்தார். இந்த



பினர் இந்தக் கொடியை
பாக அறிவிக்க வேண்

சித்தராமையா மாநிலத்
வமைப்பதற்காக 9 பேர்
உருவாக்கினார்.
மாநில கொடியை உரு
ிந்துரை அறிக்கையை

கொடியின் மேல் பகுதி மஞ்சள், நடுவில் வெள்ளை, கீழே சிவப்பு நிறத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. நடுவில் உள்ள வெள்ளைப் பகுதியில் கர்நாடக அரசின் முத்திரை உள்ளது.

இந்த கொடி குறித்து தகவலை மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்துக்கு உடனடியாக அனுப்பி வைத்து, உரிய ஒப்புதலுடன் பயன்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. (10)

## முட்டி மோதிக்கொள்ளும் இரு துருவங்கள் மே மாதத்திற்குள் சந்திக்கும் வாய்ப்பு

(சியோல்)

கிம்ஜாங்உன்-டொனால்ட் ட்ரம்ப் இடையேயான சந்திப்பு வரும் மே மாதத்திற்குள் நடைபெற உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலக நாடுகளின் கடும் எதிர்ப்புகளையும் மீறி அணு ஆயுத சோதனை, கண்டம் விட்டு கண்டம் பாயக்கூடிய ஏவுகணை சோதனை உள்ளிட்டவைகளை நடத்தி உலக அரங்கில் அதிர்வலைகளை வடகொரியா ஏற்படுத்தி வருகிறது.

வடகொரியாவின் அத்துமீறிய நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் ஐ.நா. பல்வேறு பொருளாதார தடைகளை அந்நாட்டுக்கு எதிராக விதித்துள்ளது.

அதேபோல், அமெரிக்காவும் வடகொரியாவின் அடாவடி செயலுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருவதோடு பல்வேறு நடவடிக்கைகளை வடகொரியாவுக்கு எதிராக எடுத்து வருகிறது.



இந்நிலையில், வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சந்திக்க ஆர்வம் தெரிவித்து இருந்ததாகவும், வடகொரிய ஜனாதிபதியின் கோரிக்கைக்கு டொனால்ட் ட்ரம்ப் ஒப்புதல் தெரிவித்து இருப்பதாகவும் தென்கொரிய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சங் யூயி யோங், வெள்ளை மாளிகையில் ஊடகவியலாளருக்கு கருத்து தெரவிக்கையில் தெரிவித்தார். அமெரிக்க ஜனாதிபதியை சந்தித்து அழைப்பு விடுத்த பிறகு இந்த தகவலை யோங் வெளியிட்டார். வரும் மே மாதத்திற்குள் இரு தலைவர்களின் சந்திப்பு நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது. வரலாற்று சிறப்புமிக்க இந்த சந்திப்பு எங்கு நடைபெறும் என்ற தகவல் வெளியாகவில்லை.

அண்மையில், தென் கொரியா பிரநிதிகள் வடகொரிய ஜனாதிபதியை நேரில் சந்தித்து ஆலோசனை நடத்தியது. வடகொரியாவின் அணு ஆயுத சோதனைகளால், அமெரிக்கா மற்றும் வடகொரியா இடையே பல மாதங்கள் நீடித்த தொடர்ச்சியான பரஸ்பர அச்சுறுத்தல்களுக்கு பிறகு இந்த சந்திப்பு நடக்கவிருப்பது முக்கிய நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக ட்ரம்ப் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில்,

அணு ஆயுத நீக்கம் பற்றி தென்கொரியப் பிரதிநிதிகளுடன் கிம் பேசியுள்ளார். அது வெறும் நிறுத்திவைப்பு மட்டுமல்ல. இந்த காலகட்டத்தில் வடகொரியா ஏவுகணைச் சோதனைகளைக்கூட நடத்தாது. நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால் ஒப்பந்தம் எட்டப்படும் வரை தடைகள் நீடிக்கும் சந்திப்பு திட்டமிடப்படுகிறது, என்று குறிப்பிட்டுள்ளார்.

இரு நாட்டு தலைவர்களின் சந்திப்பிற்கு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வ தேச நாடுகள் ஏகோபித்த வரவேற்பை தெரிவித்துள்ளன. (10)

## தலிபான் தீவிரவாதிகளை இலக்கு வைத்து அமெரிக்க ஆளில்லா விமானம் குண்டுமழை

## 21 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் 21 தலிபான் தீவிரவாதிகள் பலியாகியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில்குனார் மாகாணம், பாகிஸ்தானின் எல்லையையொட்டி அமைந்துள்ளது. அங்கு தடை செய்யப்பட்ட தலிபான் உள்ளிட்ட இயக்கங்களின் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் அங்கு தலிபான் தீவிரவாத அமைப்பின் முக்கிய தலைவர்களுள் ஒருவரான முல்லா பஸ்லுல்லாவுக்கு சொந்தமான இடத்தை இலக்காக வைத்து அமெரிக்காவின் ஆளில்லா விமானம் கடந்த புதன்கிழமை தாக்குதல் நடத்தியது.

இந்த தாக்குதலில் 21 தலிபான் தீவிரவாதிகள் பலியாகினர். தாக்குதலில் முல்லா பஸ்லுல்லா அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளார்.

அவரது மகன் கொல்லப்பட்டதாகவும் அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. இந்த தகவலை தலிபான் தளபதிகளும் பாகிஸ்தான் அரசினரும் உறுதி செய்துள்ளனர். (10)

## யான இரசாயன ஆலை லி;14 பேர் படுகாயம்

### மகாராஷ்டிராவில் சம்பவம்

உள்ள இரசாயன
விபத்தில் சிக்கி 3 பேர்

மும்பையில்
தாராப்பூர்
வரு

சத்தம் கேட்டதாக கூறப்படுகிறது. இந்த அசாதாரண சத்தத்துடன் வீடுகளும் அதிர்ந்ததால் மக்கள் பீதி அடைந்தனர். நிலநடுக்கம் ஏற்பட்டதாக கருதி, நள்ளிரவு வேளையில் சில இடங்களில் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். இந்த தீ விபத்து குறித்து தகவல்



- தாராப்பூர் தொழிற்
பேட்டையில் பல்வேறு
ருகின்றன.
தனியார் இரசாயன
ம் இரவு திடீரென
விய தீ அருகிலுள்ள
ரவியது. இரவு 11.15
ங்கர வெடிச்சத்தமும்
தொலைவுக்கு இந்த

அறிந்து விரைந்து சென்ற தீ அணைப்பு படையினர் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்த தீ விபத்தில் சிக்கிய 3 பேர் உயிரிழந்துள்ளதுடன் 14 பேர் படுகாயமடைந்து அருகாமையில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரசாயன ஆலையின் பாய்லர் பிரிவில் தீ முதலில் பற்றியிருக்கலாம் என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (10)

## புல்வெளியில் விழுந்து தீப்பிடித்த விமானம் மூன்று பேர் உடல் கருகி உயிரிழப்பு

(டெக்சாஸ்)

டெக்சாஸ் மாநிலத்தில் விமான நிலையத்தில் இயந்திரக் கோளாறால் அவசரமாக தரையிறங்கிய விமானம் விழுந்து நொறுங்கியதில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலம், லாரெடோ சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை பைப்பர்-31 என்ற சிறு விமானம் புறப்பட்டு உயரப் பறந்த சிறிது நேரத்தில் இயந்திர கோளாறு ஏற்பட்டதை விமானி கண்டுபிடித்தார். இதையடுத்து உடனடியாக லாரெடோ விமான நிலையத்திற்கே விமானத்தை திருப்பினார்.

ஆனால் ஓடுபாதையில் தரையிறக்க முயற்சித்தபோது விமானம் கட்டுப்பாட்டை இழந்தது, புல்வெளியில் விழுந்து வெடித்து தீப்பிடித்தது.



உடனடியாக மீட்புக்குழுவினர் விரைந்து சென்று விமானத்தில் பற்றிய தீயை அணைத்தனர். இந்த விபத்தில், விமானத்தில் பயணித்த 3 பேர் உயிரிழந்தனர்.

குறித்த விமானம் மார்ஷல் விமான நிறுவனத்தின் சிஇஓ ராபர்ட் மார்ஷல் என்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதில் பயணித்தவர்களின் உடல்களை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருகிறது. விமான விபத்தால் லாரெடோ விமான நிலையத்தில் விமான சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை அந்நாட்டு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (10)

# கண்டி வன்முறைச் சம்பவங்களுடன் அரசியல்வாதிகளுக்குத் தொடர்பா?

## தகவல் இல்லை என்கிறார் மத்தும பண்டார



(கொழும்பு)

அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் அரசியல்வாதிகளுக்கு தொடர்பு உண்டு என்பது பற்றிய தகவல்கள் எதுவும் கிடையாது என புதிய சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

வன்முறைகளுடன் அரசியல்வாதிகளுக்கு தொடர்பு உண்டு என சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு குறித்து கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போது அவர் இதனைக் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

கண்டியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களின் பின்னணியில் அரசியல்வாதிகள் செயற்பட்டனர் என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை.

இந்த சம்பவங்கள் தொடர்பில் தற்போது கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த சம்பவங்களின் பின்னணியில் யார் செயற்பட்டுள்ளார்கள் என்பது பற்றி விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறான சம்பவங்களின் மூலம் நாட்டை பின்னோக்கி நகர்த்துவதற்கு இடமளிக்கப்பட முடியாது.

இந்த சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு சிலர் போலிப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக உரிய முறையில் சட்டம் அமுல்படுத்தப்படும் என அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இஸ்லாமிய நாடுகளின் இராஜதந்திரிகளை அவசரமாகச் சந்தித்த மகிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று இஸ்லாமிய நாடுகள் சிலவற்றின் தூதரகங்களின், இராஜதந்திரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார் என்று தகவல்கள்வெளியாகியுள்ளன.

முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்ட நிலையிலேயே, இதுகுறித்து விளக்கமளிப்பதற்காகவே மகிந்த ராஜபக்ஷ இஸ்லாமிய நாடுகளின் தூதுவர்களை அவசரமாகச் சந்தித்துள்ளார்.

எனினும், இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை.

கண்டியில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டதன் பின்னணியில், மகிந்த ராஜபக்ஷ ஆதரவு அணியினர் இருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பள்ளிவாசல் மீது தாக்குதல்





(கொழும்பு)

இன வன்முறைகளால் பாதிக்கப்பட்ட கண்டி மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஒரு சிறிய தாக்குதல் சம்பவம் மாத்திரமே இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

"நேற்று முன்தினம் காலை ஒரே ஒரு வன்முறைச் சம்பவம் மாத்திரம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த சிலர், பள்ளிவாசல் மீது கற்களை வீசினர்.

பொலிஸார் அங்கு சென்றதும், அவர்கள் ஒரு மோட்டார் சைக்கிளையும் கைவிட்டு தப்பியோடி விட்டனர்.

மோட்டார் சைக்கிளின் உரிமையாளரை அடையாளம் கண்டு, இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் இருவர் கரந்தெனியவையும், ஒருவர், மீரிகமவையும் சேர்ந்தவர்கள்.

கொழும்பிலுள்ள நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வருகின்றனர்.

கண்டியில் 3000 பொலிஸாரும் 750 சிறப்பு அதிரடிப்படையினரும் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கண்டியில் வன்முறைகளில் ஈடுபட்டதாக, இதுவரை 81 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, வன்முறைகளினால், 7 பள்ளிவாசல்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் சேதமாக்கப்பட்டமை தொடர்பான 45 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. பல்லேகமவில் 16 சம்பவங்கள் குறித்தும், தெல்தெனியவில் 18 சம்பவங்கள் குறித்தும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 11 வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

வன்முறைகளில் 2 பேர் கொல்லப்பட்டனர். 11 பேர் காயமடைந்தனர். மேலும், பூஜாபிட்டியவில் குண்டு ஒன்றைக் கொண்டு சென்ற ஒருவர் அது வெடித்து மரணமாகியுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### ஒரே கேள்வியில் நிதானம் இழப்பதா?

இரவு மணி 11.15 வீட்டிற்குள் கணவன் அலுத்துக் களைத்து நுழைகிறான். மனைவிக்கு கோபம் என்றால் அப்படி ஒரு கோபம்.

மணி என்ன இப்போது? என்கிறாள். ''சரிதாண்டி ரொம்பத்தான் மிரட்டாதே!'' என்று ஆரம்பித்து அவனும் பேச கடா புடா சத்தங்களுடன் உணவு முடிய முதுகைத் திருப்பிய படி படுத்துக் கொள்கின்றான்.

ஒன்று வைத்துக் கொள்ளுங்கள். கணவன்-மனைவி இருவரும் ஒரே நேரத்தில் கோபப்படக் கூடாது. கோபப்பட நியாயம் இருப்பவர் குரலை உயர்த்தும் போது மற்றவர் தொடர்ந்து பொறுமையாகப் பதில் சொன்னால் விவகாரம் முற்றாது. ஒருவர் கோபப்பட்டால் அந்தக் கோபத்தில் நியாயம் இல்லாத நிலையில் புரியாமல் கத்தினால் கூட அவர்களுக்காக இரக்கப்பட்டும் , உள்ளுக்குள் சிரித்துக் கொண்டும் பொறுமையாகப் பதில் சொல்வது நல்லது.

ஒருவர் வீட்டில் மரணம் நிகழ்ந்தது. அவர்களின் உறவினர் 6 மாதம் கழித்துத் துக்கம் விசாரிக்க வந்தார். வீட்டிலிருந்தவர் சும்மா இருக்காமல் இப்பத்தான் வழி தெரிஞ்சுதாக்கும்? என்று கேட்கப் போக வந்தவருக்கு ஏகக் கோபம். கத்தித் தீர்த்து விட்டார். ஆமாய்யா என் புள்ள இறந்த போது எங்கய்யா போனீங்க? உங்களை மதிச்சுக் கேக்க வந்தேன் பாரு.... என்கிற போக்கில் அவரது வாதம் தொடர்ந்தது.

எல்லாம் அந்த ஒரு கேள்வியால் வந்த வினை. ஒவ்வொருவருக்கும் மனத்தில் ஆயிரமாயிரம் புழுக்கங்கள். நம்மீது ஏகப்பட்ட மனத்தாங்கல்கள். அவற்றையெல்லாம் ஒன்று திரட்டி ஒரு கேள்வியையேனும் சூடாகக் கேட்கத் தான் செய்வார்கள்.

அந்தக் கேள்வியில் உள்ள ஆதங்கத்தையும், நம்மிடம் உள்ள தவறையும் நாம் உணர்ந்து கொண்டு பொறுமையாகப் பதில் சொன்னால் ஏன்தான் அந்தக் கேள்வியைக் கேட்டோமோ என்கிற நிலைக்கு அவர்களைத் தள்ளிவிடலாம்.

அதையடுத்து நாமும் பொறுமையை இழந்து பேசினால் அப்புறம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்வதைக் கூடத் தவிர்க்கும் படி ஆகிவிடும்.

''அறிவிருக்கா உனக்கு?'' உனக்கு கண் இல்லை? மேல வந்து எருமைமாடு மாதிரி விழறியே? என்றெல்லாம் எதிராளி ஆரம்பித்தால் தப்புத்தான் கோபப்படாதீங்க என்று சொன்னால் போயிற்று. இது கௌரவக் குறைவா என்ன? இதைச் சொன்னதும் எதிராளி எப்படிச் சுருதியிறங்கிப் பேசுகிறார் பாருங்கள்.

சேற்றிலும் சாக்கடையிலும் இருந்து கொண்டு நம்மை அவற்றிற்குள் இழுத்துப் போடப் பார்க்கிறவர்களுக்கு நாம் இடம் தந்துவிடக் கூடாது. கொடுத்தால் வெற்றி அவர்களுக்கு.

மாறாக உன்னளவுக்கு என்னால் இறங்கவர முடியாது. என் உடை சுத்தம். நான் பண்பாட்டின் மொத்த உருவம் என்பது போல் நடந்து கொண்டால் எதிராளி சேற்றை உதறிவிட்டு மேல வருவான்.

இது சாத்தியமானால் வெற்றி நமக்கு. நாம் ஏன் நம் எதிராளிகளுக்கு வெற்றிக் கேடயத்தைப் பரிசாக அளிக்க வேண்டும்?

**லேனா தமிழ்வாணன்**

# வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக பாரபட்சமின்றி நடவடிக்கை

## சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

(கொழும்பு)

சட்டத்தை மீறி இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவித்து வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக இன,மத மற்றும் மொழி என்ற வேறுபாடுகளுக்கு அப்பால் எவ்வித பாரபட்சமுமின்றி உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் யூ.ஆர். டி. சில்வா கோரிக்கை விடுத்தார்.

குறுகிய நோக்கங்களுக்காக வன்முறைகளில் ஈடுபட்டு உயிர் மற்றும் உடைமைகளுக்கு சேதம் விளைவித்து நாட்டு மக்கள் சகலரினதும் பாதுகாப்பையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ள சம்பவத்தை தமது சங்கம் வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சட்டத்தரணிகள் சங்கத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அசாதாரண சூழ்நிலையினை ஏற்படுத்தி இனங்களுக்கிடையிலான ஒற்றுமையினை சீர்குலைத்து குழப்பங்களை ஏற்படுத்துவோருக்கு எதிராகவும் அவ்வாறான செயற்பாடுகளுக்கு தூண்டுகோலாக இருப்பவர்களுக்கு எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று இனங்களுக்கிடையில் குரோதத்தையும் ஆவேசத்தையும் ஏற்படுத்தும் வகையிலான பொய்யான கருத்துக்களை ஊடகங்கள் வாயிலாகவும் சமூக வலைத்தளங்களின் ஊடாகவும் பரப்பும் நபர்கள் மற்றும் குழுக்களுக்கு எதிராகவும் உரிய சட்ட நடவடிக்கை எடுத்து அவ்வாறான செயற்பாடுகளை தடுக்க வேண்டும்.

கடந்த இரு வாரங்களாக நாட்டில் நிலவும் அசாதாரண சூழல் மிகவும் கவலைக்குரிய ஒன்றாகும். இந்த பாரதூர நிலைமையினை கருத்திற் கொண்டே நாட்டில் அவசர கால சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கலாம்.

எனவே இதனை உணர்ந்து மக்களும் நிதானமாகவும் அவதானமாகவும் இருக்க வேண்டும்.

இவ்வாறான அசாதாரண சூழ்நிலைகளால் நாட்டை 83 மற்றும் 89 காலகட்டத்தை போன்று பின்நோக்கிக் கொண்டு செல்லும் வகையில் செயற்படக் கூடாது. நாட்டின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு அரசாங்கமும் பொலிஸாரும் குறிப்பாக முப்படையினரும் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அதேபோன்று பொதுமக்களும் இந்த விடயத்தில் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# சு.க. தலைமையகத்தில் டெங்குக் குடம்பிகள்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, அண்மைக்காலமாக அதிகரித்து வரும் டெங்கு நோய் தொடர்பில், நாட்டு மக்களுக்கு பல்வேறு அறிவுரைகளையும் டெங்கு ஒழிப்புக்கான வேலைத்திட்டங்களையும், பரந்தளவில் மேற்கொண்டு வருகின்ற நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் உள்ள குடிநீர்ப் போத்தலில், அதிகளவிலான டெங்குக் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில், நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டின்போது, ஊடகவியலாளர்களுக்கு நெஸ்கபே குடிப்பதற்காக பொருத்தப்பட்டிருந்த நெஸ்கபே இயந்திரத்தின் மேல் வைக்கப்படிருந்த குடிநீரிலேயே, இவ்வாறு டெங்குக் குடம்பிகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

டெங்குக் குடம்பிகள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு, பல ஊடகவியலாளர்கள் நெஸ்கபே குடித்திருந்தார்கள். பின்னர், ஒரு ஊடகவியலாளர் குடிநீர் போத்தலில் டெங்குக் குடம்பிகள் இருப்பதைக் கண்டு, அனைவருக்கும் தெரியப்படுத்தியுள்ளார்.

இது குறித்து, அங்கிருந்த அதிகாரிகளிடம் ஊடகவியலாளர்கள் வினவிய போது, நீண்டகாலமாக ஊடகவியலாளர் மாநாடு நடைபெறாதிருந்தமையால், டெங்குக் குடம்பிகள் பரவியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# மோ.சைக்கிள் மின்சார கம்பத்துடன் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு!



(ஏறாவூர்)

வாரியபொல, பாதெனிய பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குருநாகலில் இருந்து பாதெனிய நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று பாதையை விட்டு விலகி மின் கம்பம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிள் சாரதி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு வேளையில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு உயிரிழந்தவர் மஹாவ, எல்ல பிரதேசத்தை சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (இ-7)

# மைத்திரியும் ரணிலும் இணைந்த வடக்கு-கிழக்கை ஏற்றுக் கொண்டார்களா?

## த.தே.கூட்டமைப்பிடம் புலிகள் கட்சி கேள்வி

(ஏறாவூர்)

நல்லாட்சி அரசுக்கு த.தே. கூட்டமைப்பு ஆதரவு வழங்குகின்ற போதும் எப்போதாவது இணைந்த வடக்கு - கிழக்கை ஜனாதிபதி மைத்திரி அல்லது பிரதமர் ரணில் ஏற்றுக்கொண்டுள்ளதாக குறிப்பிட்டிருக்கிறார்களா? என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி பொதுச் செயலாளர் பு. பிரசாந்தன் கேள்வியெழுப்பியுள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிர் அணி தலைவி செல்வி மனோகரின் தலைமையின் சர்வதேச மகளிர் தின நிகழ்வு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் நாம் என்று கூறிக் கொண்டு ஒட்டுமொத்த கிழக்கு தமிழரின் இருப்பையும் கேள்விக்குறியாக்கும் செயற்பாடுகளையே தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்னெடுத்து வருகின்றது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மாத்திரம் தான் வடக்கு, கிழக்கு இணைப்புக்கும் தமிழ் தேசிய கொள்கைக்கும் எதிராக நிற்கின்றது என்ற போலிப்பிரசாரத்தினை முன்னெடுக்கும் இவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

1976ஆம் ஆண்டு தங்களின் அரசியல் இலாபத்திற்காக மாத்திரம் மையப்படுத்தியே வட்டுக்கோட்டையில் தமிழீழ பிரகடனத்தினை முன்வைத்தார்கள்.

அதனை கண்மூடித்தனமாக நம்பியே இளைஞர்கள் கையில் ஆயுதம் ஏந்தினார்கள். அந்த வழியில் தமிழரின் மண் மீட்பிற்காக ஆயுதம் ஏந்தியவர்களே எமது கட்சியின் தலைவர் சி.சந்திரகாந்தன் உள்ளிட்ட எமது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மூத்த தலைவர்கள்.

இவர்களே பல இராணுவ வெற்றிகளுக்கு காரணமாக இருந்தனர். அந்த வேளையில் வேடிக்கை பார்த்தவர்கள் இன்று அரசியலுக்காக வெற்றுக்கோஷம் இட்டு மக்களை ஏய்த்துக் கொண்டிருப்பது தமிழ் சமூகத்தினை மேலும் பாதாளத்திலேயே தள்ளிவிடும்.

கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிடம் முதலமைச்சை தாரை வார்த்துக் கொடுத்து இணக்க ஆட்சி நடத்த முன்வந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முன்னை வெளிப்படுத்தவேண்டும்.

நூற்றுக்கணக்கான பிரேரணைகளை நிறைவேற்றிய கிழக்கு மாகாணசபை வடக்கு, கிழக்கு இணைந்த தமிழ் தாயகத்தினை நாம் ஏற்றுக் கொள்கின்றோம் என்ற பிரேரணையை நிறைவேற்றியுள்ளதா?

அல்லது நல்லாட்சி அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குகின்றார்களே, வடக்கு, கிழக்கு இணைந்த தாயகக் கோட்பாட்டினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ எப்போதாவது ஏற்றுக் கொண்டுள்ளோம் என குறிப்பிட்டிருக்கிறார்களா? என வினவியுள்ளார். (இ-7)

# இரு கைக்குண்டுகள் மீட்பு



(ஏறாவூர்)

மட்டக்களப்பு சந்திவெளி துறைமுகப் பகுதியில் இரண்டு கைக்குண்டுகள் நேற்று வெள்ளிக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசத்தின் விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைக்காக துப்புரவு பணியில் ஈடுபட்ட போது மர்மப் பொருள் ஒன்றை அவதானித்த நிலையில், பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

பொலிஸார் குறித்த இடத்திற்கு வருகை தந்து அவை கைக்குண்டுகள் என அடையாளம் கண்டு அவற்றினை குறித்த பிரதேசத்தில் இருந்து அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# சூழ்ச்சிக்காரர்கள் அரசில் தான் உள்ளனர்

## ஜே.என்.பி. தகவல்



(கொழும்பு)

சூழ்ச்சிக்காரர்கள் அரசாங்கத்திலேயே உள்ளதாக ஜே.என்.பி. கட்சி தெரிவித்துள்ளது. அரசாங்கத்தின் ஆதரவுடனான கும்பல்களே வன்முறைகளில் ஈடுபட்டதாக ஜே.என்.பி கட்சியின் தேசிய அமைப்பாளர் ஜெயந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவி வரும் அரசியல் பொருளாதார ஸ்திரமற்ற தன்மையை திசை திருப்பும் நோக்கில் இவ்வாறு கலகங்கள் விளைவிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த வன்முறைகள் தொடர்பில் விசேட பாராளுமன்ற விவாதம் நடத்தப்பட்டால் அது குறித்து அம்பலப்படுத்த முடியும் என அவர் தெரிவித்தார்.

வெளிநாடுகளின் தேவைக்கு ஏற்ப அரசாங்கம் செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். காணாமல் போனவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க போதுமான சட்டங்கள் இருந்த போதிலும், புலம்பெயர் தமிழர்களின் தேவைக்கு அமைய புதிய சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (இ-7)

# மாத்திரை உணவோடு கலக்கப்பட்டது விஞ்ஞான ரீதியாக சாத்தியமற்றது

## உலக சுகாதார ஸ்தாபனம், ஐ.நா.சனத்தொகை நிதியம் அறிக்கை

(அம்பாறை)

அம்பாறையில் நிரந்தர ஆண்மைக் குறைவு மாத்திரை அல்லது நிரந்தர மலடாக்கல் மாத்திரை உணவோடு கலக்கப்பட்டது என்ற கருத்தே அடிப்படையற்றதும், விஞ்ஞான ரீதியாக சாத்தியமற்றதுமாகும் என்று உலக சுகாதார ஸ்தாபனமும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியமும் அறிவித்துள்ளன.

இது தொடர்பில் உலக சுகாதார அமைப்பும் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியமும் இணைந்து விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் அண்மைக்காலமாக இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை உலக சுகாதார ஸ்தாபனமும் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியமும் வன்மையாகக் கண்டிக்கின்றன.

விசேடமாக இனப்பெருக்கம் சுகாதாரம் தவறான தகவல் ஒன்றினால் இடம்பெற்ற அம்பாறை சம்பவம் தொடர்பான தவறான எண்ணப்பாட்டை நீக்கும் பொருட்டே எமது இரண்டு நிறுவனங்களாலும் இந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது. ஒரு மனிதனை நிரந்தரமாக இனவிருத்தி செய்ய முடியாதவராக்கக்கூடியதான மருந்து என்ற ஒன்றே இல்லை அல்லது அறியப்படவில்லை.

ஆகவே நிரந்தர ஆண்மைக் குறைவு மாத்திரை அல்லது நிரந்தர மலடாக்கல் மாத்திரை உணவோடு கலக்கப்பட்டது என்ற கருத்தே அடிப்படையற்றதும், விஞ்ஞான ரீதியாக சாத்தியமற்றதுமாகும். சரியான இனப்பெருக்க சுகாதார தகவல்கள் மக்களுக்கு கிடைக்க வேண்டியதன் அவசியம், அதிலும் குறிப்பாக இளைஞர்களை சென்றடைய வேண்டியதன் அவசியம் இதன்மூலம் தெளிவாகத் தெரிகின்றது.

இனப்பெருக்க சுகாதாரம் குறித்த தவறான தகவல்கள் இனங்களுக்கிடையே வெறுப்பையும் பதற்றத்தையும் உருவாக்க பயன்படுத்தப்படுகின்றன. இது நடைபெறவே கூடாது. உலக சுகாதார ஸ்தாபனமும் உலக சனத்தொகை நிதியமும் அனைத்து இலங்கையினரதும் சிறந்த ஆரோக்கியம் நல்வாழ்வுக்காக பணிபுரியும் இரண்டு நிறுவனங்களாகும்.

எனவே நாமும் ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்துமாறும், மனித உரிமைகளையும் அனைவருக்குமான பாதுகாப்பு உறுதி செய்யுமாறும், அதிகார தரப்பினரையும் பொதுமக்களையும் வேண்டி நிற்கின்றோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஆசிரியர் போட்டிப் பரீட்சையை பிற்போடுமாறு கோரிக்கை

(கொழும்பு)

ஆசிரியர் நியமனத்துக்கான போட்டிப் பரீட்சையை இன்று கொழும்பில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள நிலையில், நாட்டின் அவசர கால நிலையைக் கருத்திற்கொண்டு பரீட்சையை பிற்போட நடவடிக்கை எடுக்குமாறு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் பரீட்சைகள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினை சூழலில் பரீட்சை நடத்துவதில் உள்ள நடைமுறை சிக்கல்கள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் பரீட்சைகள் ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளார்.

இதனடிப்படையில் குறித்த பரீட்சையினை பிற்போடுவது சம்பந்தமாக ஆராயப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

இந்தப் பரீட்சையில் தோற்றுவதற்காக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பரீட்சார்த்திகள் வர வேண்டியுள்ளது. எனினும் நாட்டின் மத்திய மாகாணம் உள்ளிட்ட சில பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள அமைதியின்மையால் பரீட்சார்த்திகள் போக்குவரத்து, பாதுகாப்பு உள்ளிட்ட ஏராளமான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ளனர்.

இந்த விடயம் சம்பந்தமாக இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் பரீட்சைகள் ஆணையாளருடன் தொலைபேசியில் உரையாடியுள்ளதுடன், இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோரிக்கையொன்றினையும் விடுத்துள்ளார். (இ-7)

# சட்டவிரோத செயலிகள் மூலம் பேஸ்புக், வட்ஸ்அப் பாவனை!

## நடவடிக்கை எடுக்கப்படும் - ஹரின்



(கொழும்பு)

இலங்கையில் பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் சட்டவிரோத செயலிகள் மூலம் பயன்படுத்தப்படுவது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.


இது குறித்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

'சமூக வலைத்தளங்கள் மீதான அரசாங்கத்தின் தடையையும் மீறி இலங்கையில் பேஸ்புக், வட்ஸ்அப் மற்றும் வைபர் போன்ற செயலிகள் பயன்படுத்தப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. சட்டவிரோதமாகக் குறித்த செயலிகள் பயன்படுத்துவதனை மிகவும் இலகுவாகக் கண்டுபிடிக்க முடியும் என்பதால் மிகவும் அவதானமாக இருக்குமாறு மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன், சட்டவிரோதமான முறையில் பயன்படுத்திப் போலித் தகவல்களைப் பரப்புவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். குறித்த சமூக வலைத்தளங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையினை விரைவில் நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்' என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# நாட்டுக்கு நெருப்பு வைத்து குளிர்காய வேண்டிய தேவை சுதந்திரக்கட்சிக்கு இல்லை

## அமைச்சர் துமிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் எல்லாவிதமான அசம்பாவிதங்களும் கடந்த சில நாட்களில் நடந்து முடிந்திருக்கின்ற நிலையில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நாட்டில் அமைதி நிலவுவதற்கு, தன்னால் முடிந்த ஒத்துழைப்புக்களை வழங்குவதாகக் கூறியிருப்பது வேடிக்கையானதெனக் கூறிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க, ஒத்துழைப்பு வழங்குவதாகக் கூறுகின்ற இவர்களின் அண்மைக் கால கருத்துக்களைத் திருப்பிப் பார்த்தால், நாட்டில் ஏற்பட்டிருக்கும் இனவன்முறைகளுக்குப் பின்னால், எவர் இருக்கிறார்கள் என்பது தெளிவாகுமென்றும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டின் கடந்தகால வரலாற்றில், இனவாதம் தலைதூக்கியிருந்த தாம், எமது பெற்றோர்களும் நாமும், பெரும் துயரமடைந்திருந்தோம்.

நாம் அனுபவித்த கஷ்டங்கள், எமது நாட்டின் வருங்காலச் சந்ததியினருக்கு ஏற்பட்டுவிடக்கூடாது. இதற்காக, நாட்டில் உள்ள எல்லா மக்களும், இன, மத பேதமின்றி, ஒற்றுமையாக நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு, ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

"நாட்டுக்கு நெருப்பு வைத்து, அதில் குளிர்காய வேண்டிய தேவை, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குக் கிடையாது.

ஆனால், தாங்களது தனிப்பட்ட அரசியலுக்காக சிலர், நாட்டில் இனவாதத்தை விதைக்கிறார்கள். எனினும், நாட்டில் ஏற்பட்டிருக்கும் இன வன்முறைகளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவுக்கு அமைய, முப்படையினர் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறார்கள்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மயிரிழையில் உயிர் தப்பிய பயணிகள்!

## சாதுர்யமாக செயற்பட்ட இ.போ.ச. சாரதி



(ஹற்றன்)

ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா பகுதியில், கதிர்காமத்திலிருந்து நல்லதண்ணி நோக்கி சென்ற இ.போ.ச. பேருந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுக்காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற இ.போ.ச பேருந்து எதிரே வந்த கனரக வாகனமொன்றிற்கு இடம்கொடுக்க முற்பட்டபோதே பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சாரதியின் சாமர்த்தியத்தினால் உயிர் ஆபத்துக்கள் ஏற்படாமல் பயணிகள் பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இதேவேளை, விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# ஹர்த்தால், கடையடைப்பில் ஈடுபட வேண்டாம் அம்பாறையில் முஸ்லிம்களிடம் வேண்டுகோள்

(அம்பாறை)

ஏனைய சமூகங்களிடையே சமாதானம், சகோதரத்துவம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும், அம்பாறை மாவட்டத்திற்கு வெளியே வாழ்ந்து வரும் முஸ்லிம்களின் பாதுகாப்பு நலன் கருதியும் நேற்று வெள்ளிக்கிழமை எந்தவித ஹர்த்தால் கடையடைப்பு செயற்பாடுகளிலும் அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் ஈடுபட வேண்டாம் என அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம் மற்றும் அம்பாறை மாவட்ட ஜம்மியதுல் உலமா சபை இணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம் மற்றும் அம்பாறை மாவட்ட ஜம்மியத்துல் உலமா சபை என்பன இணைந்து அட்டாளைச்சேனை கலாசார மண்டபத்தில் நடத்திய கூட்டத்தின் போதே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்களின் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ. அஸீஸ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அம்பாறை மாவட்ட ஜம்மியதுல் உலமா சபையின் பதில் தலைவர் மௌலவி ஐ.எல்.ஏ. காஷிம் ஸூரி மற்றும் பள்ளிவாசல்களின் தலைவர்கள், உலமாக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்களின் சம்மேளனம் மற்றும் அம்பாறை மாவட்ட ஜம்மியதுல் உலமா சபையினால் பல தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.


அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிவாசல்களிலும் வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஜும்ஆ பிரசங்கத்தினை சமாதானம், சகோதரத்துவம் சகவாழ்வு நல்லிணக்கத்தை வலியுறுத்தும் விடயங்களை உள்ளடக்கியதாக அமைய வேண்டும் என்பதுடன் இக்குத்பா பிரசங்கத்தை ஒரு மணியுடன் முடித்துக் கொள்ள வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகல இனங்களும் சமாதானமாகவும், நல்லிணக்கத்துடனும், சகோதரத்துவத்துடனும் வாழ வேண்டும் என்ற விடயத்தை முன்னிறுத்தி உருக்கமாக துஆ பிரார்த்தனையை மேற்கொள்வதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)

# கொக்குவிலில் நேற்றுப் பதற்றம்

# விற்பனை நிலையத்திற்குள் நுழைந்து 12பேர் கொண்ட குழு தாக்குதல்

## பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் சேதம்



(யாழ்ப்பாணம்)

கொக்குவில்சந்தியில் அமைந்துள்ள கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையத்தின் மீது 12 பேர் கொண்ட குழுவினர் தாக்குதல் மேற்கொண்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இந்நிலையில் களநிலவரத்தை வேவு பார்க்க வந்த ஒருவர் அப்பகுதி இளைஞர்களால் மடக்கி பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை கொக்குவில் சந்தி பகுதியில் அமைந்துள்ள கட்டட விற்பனை நிலையத்துக்கு 10 மோட்டார் சைக்கிள்களில் வந்த 12 பேர் கொண்ட இளைஞர் குழுவினர், விற்பனை நிலையத்தினுள் புகுந்து அங்கு நின்றிருந்த இளைஞர்களை தாக்கியுள்ளனர்.

பின்னர் அங்கிருந்த பொருட்களை சேதப்படுத்தியதுடன் கண்ணாடிகதவுகளை பொல்லுகளால் அடித்து சேதப்படுத்தியுள்ளனர். பின்னர் அப்பகுதியில் நின்றிருந்த வாகனங்களை அடித்து நொருக்கிவிட்டு அவ்விடத்தில் இருந்து தப்பிச்சென்றுள்ளனர்.

இத் தாக்குதல் சம்பவத்தில் பலலட்சம்ரூபாய்பெறுமதியான பொருட்கள் சேதமாக்கப்பட்டுள்ளதுடன் காயமடைந்த ஒரு இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு பொலிஸார் வருகைதந்து விசாரணைகளை மேற்கொண்டிருந்த நேரம் அப்பகுதிக்கு வேவு பார்ப்பதற்காக வந்திருந்த இளைஞர் ஒருவரை அப்பகுதியில் உள்ள இளைஞர்கள் சிலர் மடக்கி பிடித்து மேற்குறித்த குழுவுடன் தொடர்புடையவர் என கூறி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் மீது அப்பகுதியில் நின்ற இளைஞர்கள் தாக்குதலை மேற்கொண்டு செய்திசேகரிப்பதற்கு இடையூறு விளைவித்தனர்.

இந்த சம்பவம் இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதல் என்றும் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-9)

# ரணில் வகித்த அமைச்சர் பதவியை பறித்தார் மைத்திரி -இந்திய ஊடகங்கள்

(சென்னை)

இலங்கையில் சட்டம், ஒழுங்கு அமைச்சை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து ஜனாதிபதி மைத்திபால சிறிசேன பறித்துள்ளார் என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் கண்டியில் கடந்த வாரம் சிங்களம் மற்றும் முஸ்லிம்மதத்தினரிடையே ஏற்பட்ட மோதல் கலவரமாக வெடித்தது. இதனால் இலங்கையில் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் கலவரத்தை ஒடுக்க மேற்கொண்ட நடவடிக்கை திருப்தியில்லாத நிலையில் அதிருப்தியடைந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வசம் இருந்த சட்டம் ஒழுங்கு பொறுப்பை பறித்தார்.

தற்போது சட்டம் ஒழுங்கு அமைச்சு ரஞ்சித் மத்துமபண்டாரவிடம் கொடுக்கப்பட்டது.

முன்னதாக நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் கட்சிக்கு பின்னடைவு ஏற்பட்ட நிலையில் அமைச்சரவையில் மாற்றம் கொண்டுவரப்பட்டு சட்டம் ஒழுங்கு அமைச்சு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கடந்த வாரம் வழங்கினார் எனவும் அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# சிவனொளிபாதமலையை சுத்திகரிக்கும் வேலைத்திட்டத்தில் விமானப்படையினர்



(ஹற்றன்)

இலங்கை விமானப் படையின் 67 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு சிவனொளிபாதமலையை சுத்திகரிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் கபில் ஜயம்பதியின் பணிப்புரைக்கு அமைவாக விமானப் படையினர் இந்த சுத்திகரிப்பு பணியில் ஈடுபட்டனர். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1352

Search for people, places and things — Nagendram Home

### கர்ணன்

சும்மா இருக்கும் போது ஒரு போன் வராது எப்போ



சாப்பாடுல கைய வைக்கும் போது கரக்ட்டா போன் வருது... எப்படிதான் தெரியுமோ..

### சீதா

படிப்ப விட அப்பா அம்மா உசத்திதான்...



அதனாலதான் இன்சியல முதல்லயும் படிப்ப கடைசியிலும் எழுதுறோம்....!

### சிறி

எவரையும் முழுவதும் நம்பியிருக்க வேண்டாம்...



இருட்டில் நிழல்கூட நம்முடன் இருப்பது கிடையாது

### லக்ஷி

சாப்பிட உட்காரும் போது கை கழுவ மறந்தவன் எவனோ தான்



வாழை இலையில் தண்ணீர் தெளிக்கும் பழக்கத்தை கண்டுபிடிச்சிருக்கனும்

### ராமன்

அம்மா துருவி வைத்த தேங்காய் துருவலை ஆட்டைய போட்டு சாப்பிட்ட அனுபவம் இருக்கா...?



### சுபாஷ்

தெருவில் குப்பைகளை அள்ளுபவன் அல்ல குப்பைக்காரன்...



குப்பைகளைப் போடுபவனே குப்பைக்காரன்...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# எட்கா உடன்படிக்கையை உடன் கைவிட வேண்டும்

## பந்துல குணவர்த்தன மீண்டும் போர்க்கொடி



(கொழும்பு)

நாட்டின் தேசிய தொழிற்றுறையினை பாதுகாக்க வேண்டுமாயின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியாவுடன் மேற்கொள்ளவுள்ள எட்கா உடன்படிக்கையை உடனடியாக கைவிட வேண்டும் என கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் மக்கள் மத்தியில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி அடுத்த கட்ட தேர்தலில் வெற்றிபெற அரசியல் காய் நகர்த்துகின்றது.

ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி கூட்டிணைந்து அரசியல் ரீதியாக நாடகங்களை அரங்கேற்றி வருகின்றன. தற்போது நாட்டின் முக்கியமான வளங்கள் பெருமளவிற்கு சீனா மற்றும் இந்தியாவிற்கு கொடுக்கப்பட்டதால் தேசிய உற்பத்தியாளர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கல்வி அமைச்சினால் இலவசமாக வழங்கப்படும் பாதணிகளுக்கான உற்பத்தி ஒப்பந்தம் இந்தியாவிற்கு வழங்கப்பட்டமையின் காரணமாக தேசிய பாதணி உற்பத்தியாளர்கள் கடந்த காலத்தில் பெருமளவிற்கு பாதிக்கப்பட்டனர்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலின் பின்னர் நாட்டில் அரசியல் நெருக்கடி மற்றும் சமூகப் பிரச்சினைகள் அதிகரித்தே காணப்படுகின்றன.

தற்போது இடம் பெற்றுள்ள இனக்கலவரத்திற்கு தேசிய அரசாங்கமே முழு பொறுப்பினையும் ஏற்க வேண்டும். அரசாங்கத்தின் பொறுப்பற்ற தன்மையும், தகவலறியும் சட்டம் பின்பற்றாமையும் பிரதான காரணியாக காணப்படுகின்றது.

மலிக் விக்ரமசிங்கவின் தலைமையில் கைச்சாத்திடவுள்ள எட்கா உடன்படிக்கையினை உடனடியாக கைவிட வேண்டும். இல்லாவிடின் கூட்டு எதிர்க்கட்சி பாரிய எதிர்ப்பினை வெளிப்படுத்தும் எனத் தெரிவித்தார். (இ-7)

# அலோசியஸ், பலிசேனவின் பிணை மனு நிராகரிப்பு



(கொழும்பு)

அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன ஆகியோர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிணை தொடர்பான மீள்பரிசீலனை மனுவை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது. பெர்பெச்சுவல் ட்ரெசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அந்த நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தமது பிணை தொடர்பான மீள்பரிசீலனை மனு ஒன்றை பெப்ரவரி 26 ஆம் திகதி தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இனவாதத்தைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை

## முஜிபுர் ஆவேசம்



(கொழும்பு)

இனவாதத்தை தடுப்பதற்கு நல்லாட்சி அரசாங்கம் துளியளவேனும் நடவடிக்கை எடுக்காதபடியினால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் வெட்கப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தை நிறைவுக்கு கொண்டுவர பல விடயங்களைத் தேடிப்பிடித்த இலங்கைப் புலனாய்வுப் பிரிவுக்கு கண்டியில் வன்முறைகளைத் தூண்டிய நபர்களை இனங்காண முடியாமற்போனது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றிய போதே அவர் இந்தக் கேள்வியை சபையில் எழுப்பினார்.


ஒருசிலர் முஸ்லிம்கள் இனவாதிகள் எனக் கூறுவதை வன்மையாக கண்டிப்பதாக தெரிவித்த முஜிபுர் ரஹ்மான், அப்படியானால் நாடாளுமன்றத்தில் உள்ள அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன் உள்ளிட்டோரும் இனவாதிகளா? என்று அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஒருசில தேசிய பத்திரிகைகள் இனவாதத்தை இலக்காகக் கொண்டு செய்திகளை வெளியிடுவது மிகவும் ஆபத்தான விடயமாகும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் எச்சரித்தார். (இ-7)

# எச்சரிக்கையாகவும் பொறுமையாகவும் தமிழ் மக்கள் இருக்கவேண்டும்

(கொழும்பு)

கண்டி திகன பிரதேசத்தில் இடம்பெற்ற அசம்பாவிதத்தை தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக வன்முறைகளை திசைதிருப்பி, நாட்டில் ஸ்திரத்தன்மையற்ற நிலையை ஏற்படுத்த சில குழுக்கள் முயன்று வருவதாக இந்து சம்மேளனத்தின் தலைவர் அருன்காந் நாராயணசாமி தெரிவித்தார்.



எனவே, தமிழ் மக்கள் மிகவும் எச்சரிக்கையாகவும் பொறுமையாக இருக்குமாறு இந்து சம்மேளனம் மக்களை கேட்டுக்கொள்வதாக சம்மேளனத்தின் தலைவர் அருன்காந் நாராயணசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் தற்போது இடம்பெற்று வரும் சம்பவங்களினால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் தமிழ் மக்களின் பாதுகாப்பு தொடர்பாக ஊடக அறிக்கை ஒன்றை நேற்று இந்து சம்மேளனம் விடுத்துள்ளது.

கண்டியில் இடம்பெற்று வரும் அசம்பாவிதத்தை அடுத்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடந்த 2 தினங்களாக சில இடங்களில் கல்வீச்சு மற்றும் டயர் எரிப்பு சம்பவங்களும் இடம்பெற்றன.

இது தொடர்பாக எமது பிரதிநிதிகள் எமது அமைப்பிடம் முறையிட்டன. கிழக்கு மாகாணத்தை பொறுத்தமட்டில் பிரதான பாதைகளில் மட்டுமே முப்படையினரும் பொலிஸாரும் பாதுகாப்பை வழங்கி வருவதாகவும் ஏனைய உட்புற பாதைகள், கிராமங்களில் பாதுகாப்பற்ற நிலை காணப்படுவதாகவும் எமது அமைப்பாளர்கள் சுட்டிக்காட்டினர்.

அதனைத் தொடர்ந்து இது தொடர்பாக பிடிகேடியர், பொலிஸ் திணைக்களம், ஜனாதிபதியின் காரியாலய இணைப்பதிகாரியுடனும் தொடர்பு கொண்டு உட்புற பாதைகள் கிராமங்களில் சந்திகளில் பொலிஸாரின் ரோந்து பணிகளை செய்யுமாறு வேண்டியிருந்தேன். அதன்படி அவர்கள் சம்பந்தப்பட்ட இடங்களில் அந்த ரோந்து நடவடிக்கைகளில் சிறப்பாக ஈடுபட்டு பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளனர்.

எமது வழிகாட்டலில் இளைஞர்கள் பொறுப்புடனும் பொறுமையுடனும் நடந்து கொண்டுள்ளனர்.

எனவே எதிர்வரும் நாட்களில் தமிழ் மக்கள் எச்சரிக்கையாகவும் பொறுமையாக இருக்குமாறு கேட்டுக்கொள்வதோடு, பொலிஸ்மா அதிபர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், ஜனாதிபதி, பிரதமர் அலுவலக அதிகாரிகளுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# சட்டம் தனது கடமைகளை செய்திருந்தால் இன்று இந்த நிலை வந்திருக்காது - ராஜா

(கண்டி)

கண்டி - தெல்தெனிய வில் இளைஞன் ஒருவர் உயிரிழந்த விடயத்தில் சட்டம் தனது கடமைகளைச் சரியாக செய்திருந்தால் இன்று பாரதூரமான பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது என சோசலிச ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் ராஜா கொல்லுரே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற பேதம் பார்க்காமல் நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெற்று ஒரு மாதம் கூட நிறைவடையாத நிலையிலேயே இவ்வாறான வன்முறைகள் இடம்பெற்றுள்ளன.

இந்த சம்பவங்களுக்கு காரணம் உள்ளூராட்சி சபைகளில் வெற்றி பெற்றவர்களாலேயே முன்னெடுக்கப்படுவதாக கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.



இந்த சம்பவத்தை ஆங்கிலத்தில் "Play Politic" என கூறுவார்கள். இந்த சம்பவத்தை வைத்துக் கொண்டு அரசியல் செய்வதாகவும் குற்றம்சுமத்தியுள்ளார்.

ஆகவே தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுத்து மீண்டும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாத வகையில் பாதுகாக்க வேண்டும்.

கண்டி மாவட்டம் என்பது இலங்கையில் முக்கியமான ஒரு இடம். மூவின மக்களும் ஒன்றாக வாழும் மாவட்டம்.

ஆகவே மீண்டும் அங்கு பிரச்சினைகள் ஏற்படாத வாறு பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்றும் சோசலிச ஜனநாயக கட்சியின் பொதுச்செயலாளர் ராஜா கொல்லுரே தெரிவித்துள்ளார். (இ-7)

# கண்டி வன்முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் நேற்றுக் கடையடைப்பு

(கொழும்பு)

கொழும்பில் உள்ள முஸ்லிம் வர்த்தகர்களின் கடைகள் மூடப்பட்டு நேற்றுக் கடையடைப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கண்டியில் இடம்பெற்ற வன்செயல்களைக் கண்டித்து நேற்று பெரும்பாலான கடைகள் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை, சில தமிழ் வர்த்தகர்கள் மாத்திரம் வழமை போன்று கடைகளை திறந்து வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சமாதானத்தை ஏற்படுத்த பிக்குவின் புதிய முயற்சி

(கொழும்பு)

இலங்கை முழுவதும் வாழும் மக்கள் அண்மைக் காலங்களில் ஒருவிதமான அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றார்கள்.

அம்பாறை, கண்டி போன்ற மாவட்டங்களில் முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள மோதல்களே இதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

இதில் இரு தரப்பினருக்கும் உயிரச் சேதங்களும், பொருட்சேதங்களும் ஏற்பட்டிருந்ததுடன், இலங்கை முழுவதும் அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

சமூக வலைத்தளங்கள் மூலமும் இனவாத கருத்துக்கள் பரப்பப்பட்டு வந்த நிலையில் இலங்கையில் சமூகவலைத்தளங்கள் அனைத்தும் முடக்கப்பட்டு, இந்த சம்பவத்தின் சந்தேகநபர்கள் சிலரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், அனைத்து தரப்பினரும் குறித்த மோதல்களை தடுப்பதற்கு பல பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தனர்.

அந்த வகையில், நாட்டில் சாந்தி, சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு வண. கல்கந்தே தம்மாநந்த தேரர் காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த காணொலியில் இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையை கைவிடுமாறும், அனைவரும் ஒன்றாக சமாதானத்துடன் இருக்குமாறும் அனைவரிடமும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# ஐ.தே.கவுக்கு புதிய தலைமை பிரதமர் ரணில் தீர்மானம்

(கொழும்பு)



இருபத்து நான்கு ஆண்டுகளுக்கு பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை பொறுப்பை வேறொருவரிடம் கையளிக்க, கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரதமரின் பிறந்த தினமான மார்ச் 24ஆம் திகதி இது தொடர்பான அறிவிப்பை பிரதமர் வெளியிடுவார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அதன்படி, கட்சியின் தலைமை பொறுப்பு சஜித் பிரேமதாஸவிடம் ஒப்படைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தனது பிரதமர் பதவியை தக்கவைத்துக் கொள்ளும் வகையிலேயே பிரதமர் ரணில், கட்சி தலைமை பொறுப்பை சஜித்திடம் ஒப்படைக்க போவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பிரதமருக்கு எதிராக கட்சிக்குள்ளேயே நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வர தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அந்த நிலைமைய சமாளிக்கும் வகையிலேயே கட்சி தலைமையை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# துப்பாக்கிச் சூடு மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் கைது

(கொழும்பு)

கொழும்பு, வாழைத்தோட்டம் நீதிமன்ற வளாகத்தை அண்மித்த பகுதியில் நபர் ஒருவரை சுட்டுக் கொலை செய்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவரை நேற்றுக் கைது செய்துள்ளதாக விசேட பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபரை ஏற்றிவந்த மோட்டார் சைக்கிளை செலுத்திய நபரே மிரிஹான பகுதியில் வைத்து விசேட பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அங்கொடை, புத்கமுவ பகுதியை சேர்ந்த 22 வயதுடைய நபரென விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி குறித்த துப்பாக்கி பிரயோக சம்பவம் இடம்பெற்ற நிலையில், சம்பவத்தில் 39 வயதான வாழைத்தோட்டத்தை சேர்ந்த நபரொருவர் உயிரிழந்த நிலையில் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்ட நபர், பொது மக்களின் தாக்குதலுக்குள்ளாகிய நிலையில் உயிரிழந்தார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை புதுக்கடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (10)

# மின்னுயர்த்தி செயலிழந்ததில் ஒருவர் மரணம்

## வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

மின்னுயர்த்தி செயலிழந்ததால் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தையடுத்து, கம்பஹா வைத்தியசாலையின் வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட அனைவரும் நேற்று வெள்ளிக்கிழமை பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளனர்.

இந்த வைத்தியசாலையில், அடிக்கடி தொழில்நுட்பக் கோளாறுகள் ஏற்படுவதாகத் தெரிவித்த வைத்தியசாலையின் வைத்தியர் ருக்மால் ரூபரத்ன தொழில்நுட்பக் கோளாறுகள் சீர்செய்யப்படுவது இல்லை என்றும் தெரிவித்தார்.

கம்பஹா வைத்தியசாலையின் மின்னுயர்த்தியொன்று செயலிழந்ததால், மின்னுயர்த்தியிலிருந்து வெளியே வரமுயற்சித்த 33 வயது நபரொருவர் 5ஆம் மாடியிலிருந்து கீழே விழுந்து உயிரிழந்தார். இச்சம்பவத்தைக் கண்டித்தே, கம்பஹா வைத்தியசாலையின் வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

பயணிகளுடன் வைத்தியசாலையின் மேல் மாடிகளுக்குப் பயணித்த மின்னுயர்த்தி, இடையில் செயலிழந்து நின்றதாகத் தெரிவித்த பொலிஸார், பின்னர் மின்னுயர்த்தியின் கதவுகள் தானாகத் திறந்துகொண்டதெனவும், அதிலிருந்த பயணிகளை மிகவும் பிரயத்தனத்தின் மத்தியில் வெளியில் எடுத்ததாகவும் தெரிவித்தனர்.

எனினும், இச்சம்பவத்தில் உயிரிழந்த நபர், மின்னுயர்த்தியிலிருந்து வெளியே பாய்ந்தபோது, மேல் மாடியிலிருந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். மின்னுயர்த்தி செயலிழந்து நிற்பது தொடர்பில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலமுறை அறிவித்த போதிலும் அதிகாரிகள் அசமந்தப் போக்குடன் செயற்பட்டனர் என்று,வைத்தியர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (இ-7)

# முஸ்லிம்கள் மீதான தாக்குதலுக்கு தென்கிழக்கு பல்கலை. கண்டனம்

(ஏறாவூர்)

முஸ்லிம்களுக்கு எதிராக கடந்த சில நாட்களாக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறையினை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என தென்கிழக்கு பல்கலைக்கழக சமூகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

முஸ்லிம்களுக்கு எதிராக அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் வன்முறைகள் தொடர்பாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போது வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்வறிக்கையில், "மூவின சமூகங்களின் நல்லுறவை அழிக்கும் திட்டமிட்ட செயற்பாடாக இடம்பெற்ற வன்முறைகளைக் கண்டிக்கின்றோம். இவ்வன்முறையின் மூலம், முஸ்லிம்களை அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக பலவீனமடையச் செய்ய முடியும் எனத் தாக்குதலுக்குக் காரணமான குழுக்கள் நம்புகின்றன.

இனவாத அடிப்படையில் செயற்படுகின்ற குழுக்கள், முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவது கவனிக்கத்தக்கது. முஸ்லிம் வழிபாட்டுத் தலங்கள், கலாசார அடையாளங்கள், வியாபாரத் தலங்கள் போன்றன இக்குழுக்களின் பிரதான இலக்காக உள்ளன.

முஸ்லிம்களுக்கு எதிரான கலகங்களுக்கும் வன்முறைகளுக்குமான நியாயங்களாக முன்வைக்கப்படும் கருத்துக்களை, அரசியல் ரீதியான உந்துதல்களுடன் இளைஞர்களை ஒன்றுதிரட்டுவதற்கான முயற்சியின் ஓர் அங்கமாகவே பார்க்க வேண்டியுள்ளது.

சிங்கள - முஸ்லிம் முரண்பாடுகளின் பின்புலமாக அமைந்துள்ள உண்மைக்குப் புறம்பான பிரசாரங்களை முறியடிப்பதற்கு, மதத்தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், புத்திஜீவிகள், சிவில் சமூக அமைப்புக்கள், ஊடகவியலாளர்கள், நாடு கடந்த அமைப்புக்கள் மற்றும் சர்வதேச சமூகம் உள்ளிட்ட பலரும் முன்னெடுக்க முடியும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஆப்கானிஸ்தான் ராணுவ முகாமில் தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல்

## 10 பொலிஸார் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தக்கார் மாகாணத்தின் குவஜா கார் மாவட்டத்தில் உள்ள இராணுவ முகாமை குறிவைத்து தீவிரவாதிகள் நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் 10 பொலிஸார் உயிரிழந்ததுடன் மேலும் 9 பேர் படுகாயமடைந்தனர்.

பொலிஸார் முகாமில் உள்ள இராணுவ வீரர்களுக்கு உதவியாக கண்காணிப்பு பணியில் ஈடுபட சென்ற போது தீவிரவாதிகள் இந்த தாக்குதலை நடத்தியதாக அம்மாகாண பொலிஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

தாக்குதலில் இராணுவ வீரர்கள் யாரும் உயிரிழக்கவில்லை.

தாக்குதலுக்கு தலிபான் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை குனார் மாகாணத்தில் தலிபான் தீவிரவாதிகளின் நடமாட்டத்தை கண்காணித்து வந்த அமெரிக்கா, ஆளில்லா விமானம் மூலம் நடத்திய தாக்குதலில் 21 தீவிரவாதிகள் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. (10)

# வங்கியில் வைப்பிலிட வழங்கப்பட பணத்தில் ஆயிரம் ரூபா கள்ளநோட்டு

## பொது மக்கள் விழிப்புடன் இருக்குமாறு எச்சரிக்கை

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவிலுள்ள விசுவமடு நகரப் பகுதி இலங்கை வங்கியில் உடையார்கட்டு கிராமத்தைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் வைப்புச் செய்வதற்காக கொண்டு சென்ற பணத்தில் ஆயிரம் ரூபா கள்ள நோட்டு ஒன்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் பணக் கொடுக்கல்-வாங்கல்களைச் செய்யும் போது விழிப்புடன் இருக்குமாறு வங்கி அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடை பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பிரஸ்தாப வயோதிபர் ஒருவர் உடையார்கட்டு நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் 5 ஆயிரம் ரூபா தாள் பணத்தை கொடுத்து பொருட்களை கொள்வனவு செய்துள்ளார்.

இதன் போது, அந்த வர்த்தக நிலையத்தில் வழங்கப்பட்ட மீதிப் பணத்தை நேற்றைய தினம் விசுவமடுவில் உள்ள இலங்கை வங்கியின் ஊடாக பணத்தை வைப்புச் செய்வதற்காக வழங்கிய போதே இந்த கள்ள நோட்டு வங்கி அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வங்கி அதிகாரிகள் வயோதிபரிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், பொது மக்களையும் கள்ள நோட்டு தொடர்பில் விழிப்புடன் இருக்குமாறு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, கடந்த வருடம் புதுக்குடியிருப்பு பொது சந்தையில் வைத்து ஆயிரம் ரூபா கள்ள நோட்டு 3 கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதும். (2-15)



# சிறுவர் அரங்கம்


## குள்ளநரியும் சிங்கராஜாவும்

காட்டில் குள்ளநரி ஒன்று வசித்து வந்தது. அது எப்போதும் மூக்கால் மண்ணை மோப்பம் பிடித்துக் கொண்டே போகும். எங்கேனும் வளையில் எலியோ நண்டோ இருந்தால், அதன் வாசனையைக் குள்ளநரி கண்டுபிடித்து விடும்.

வளையினுள் எலி இருந்தால், குள்ளநரி தன் கால் விரல் நகங்களால் மண்ணைத் தோண்டி எலியைப் பிடித்து சாப்பிடும். வளைக்குள் நண்டு இருந்தால், குள்ளநரி வளைக்குள் தன் ரோமம் அடர்ந்த வாலைத் திணித்து வைத்துக் கொண்டு காத்திருக்கும். நண்டு குள்ளநரியின் வாலைப் பிடித்துக் கொள்ளும்போது சட்டென்று வாலை வளையிலிருந்து வெளியே இழுத்து நண்டைப் பிடித்து சாப்பிடும்.

இப்படியே குள்ளநரி தன் பசியைத் தீர்த்துக்கொண்டது.

ஒருநாள், ஒரு குறுகிய பாதை வழியே அந்தப் புத்தி



சாலி குள்ளநரி போய்க்கொண்டிருந்தது. பாதையின் இரு பக்கமும் செங்குத்தான உயரமான பாறைகள் இருந்தன.

உற்சாகமாக ஓடிக்கொண்டிருந்த குள்ளநரி திடீரென்று தன் எதிரில் தோன்றிய உருவத்தைப் பார்த்து அதிர்ச்சியில் அப்படியே நின்று விட்டது. ஆமாம்! குள்ளநரி சற்றும் எதிர்பார்க்காதபடி, அந்த குறுகிய பாதையில் சிங்கம் ஒன்று குள்ளநரியை நோக்கி வந்துகொண்டிருந்தது.

சிங்கத்தைக் கண்டதும் பயத்தால் குள்ளநரியின் உடல் நடுங்கியது. இதயம் வேகமாகத் துடிக்கத் தொடங்கியது. குள்ளநரிக்கு ஏற்கெனவே அந்த சிங்கத்திடம் அறிமுகம் உண்டு. பலமுறை அந்தச் சிங்கத்தை குள்ளநரி தன் தந்திரத்தால் ஏமாற்றியும் இருந்தது.

இந்தமுறை சிங்கத்திடமிருந்து தப்பிக்க வேண்டுமென்றால், அது வந்த வழியே திரும்பித்தான் ஓட வேண்டும். ஆனால், சிங்கத்தின் வேகத்திற்கு ஈடுகொடுத்து ஓட முடியாது என்று குள்ளநரிக்குத் தெரிந்தே இருந்தது.

இதுவரை தான் சிங்கத்தை ஏமாற்றியதற்கு, இந்த முறை நிச்சயம் சிங்கம் தன்னைப் பழிவாங்கிவிடும் என்ற எண்ணம் வந்தது. குள்ளநரிக்கு உதறல் எடுத்தது. இருந்தாலும் அந்தப் புத்திசாலி குள்ளநரி, தன் மனதில் சட்டென்று ஒரு திட்டம் வகுத்துக்கொண்டது.

அது உடனே "காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்!" என்று அலறியவாறே, சிங்கத்தை நோக்கி ஓடியது. கூடவே அடிக்கடி இருபுறமும் நெடிதாய் நின்ற பாறைகளையும் அண்ணாந்து பார்த்துக்கொண்டது குள்ளநரி.

**தொடரும்...**




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖1535-பனாமாவின் ஆயரான ஃபிறே டொமாஸ் டெ பேர்லாங்கா என்பவரின் தலைமையில் வந்த கப்பல் பெருவுக்குச் செல்லும் வழியில் கலாபகசுத் தீவுகளில் தரையிறங்கியது.

❖1629-இங்கிலாந்தின் முதலாம் சார்ல்ஸ் நாடாளுமன்றத்தைக் கலைத்தான். அடுத்த பதினொரு ஆண்டுகளுக்கு நாடாளுமன்றம் இயங்கவில்லை.

❖1801-பிரித்தானியாவில் முதலாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இடம்பெற்றது.

❖1804-லூசியானா அதிகாரபூர்வமாக பிரான்சிடம் இருந்து ஐக்கிய அமெரிக்காவுக்குக் கையளிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

❖1876-அலெக்சாண்டர் கிரகாம் பெல் உலகின் முதல் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டார்.

❖1922-கிளர்ச்சியைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மகாத்மா காந்தி ஆறாண்டு கால சிறைத்தண்டனை பெற்றார். ஆனாலும் இரண்டாண்டுகளில் சுகவீனம் காரணமாக விடுதலையானார்.

❖1933-கலிபோர்னியாவின் லோங் கடற்கரையில் இடம்பெற்ற நிலநடுக்கம் காரணமாக 120 பேர் கொல்லப்பட்டனர்.

❖1977-யுரேனஸ் கோளைச் சுற்றி வளையங்களை வானியலாளர்கள் கண்டுபிடித்தனர்.

❖1982-கோள்கள் அனைத்தும் சூரியனின் ஒரு பக்கத்தில் வரிசையில் காணப்பட்டன.

❖2003-விடுதலைப் புலிகளின் வணிகக் கப்பல் இலங்கைக் கடற்படையினரால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டதில் 11 போராளிகள் பலி.

### பிறப்புகள்

❖1798-பியர்ரே பிரெடெரிக் சாரசு, பிரான்சியக் கணிதவியலாளர் (இ. 1861)

❖1867-லில்லியன் டி வால்டு, அமெரிக்கத் தாதி, மனிதநேயவாதி (இ. 1940)

❖1884-மா.மங்களம்மாள், ஈழத்துக் காந்தியவாதி, சமூக சீர்திருத்தவாதி, பெண்ணியவாதி, அரசியல்வாதி (இ. 1971)

❖1914-கா. பொ. இரத்தினம், இலங்கைத் தமிழறிஞர், அரசியல்வாதி (இ. 2010)

❖1921-எம். வி. ராஜம்மா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை (இ. 1999)

❖1933-பழ. நெடுமாறன், தமிழக அரசியல்வாதி, தமிழ்த் தேசிய உணர்வாளர்

❖1939-அஸ்கர் அலி என்ஜினியர், இந்திய செயற்பாட்டாளர், எழுத்தாளர் (இ. 2013)

❖1940-சக் நோரிஸ், அமெரிக்க நடிகர், தற்காப்புக் கலை வீரர்

❖1949-பில் பக்ஸ்டன், கனடியக் கணினி அறிவியலாளர்

❖1952-மோர்கன் சுவாங்கிராய், சிம்பாப்வேயின் 2வது பிரதமர்

❖1957-உசாமா பின் லாதின், அல் காயிதா அமைப்பை ஆரம்பித்த சவுதி அரேபியர் (இ. 2011)

❖1974-பிஸ் ஸ்டோன், டுவிட்டரை ஆரம்பித்த அமெரிக்கத் தொழிலதிபர்

### இறப்புகள்

❖1897-சாவித்திரிபாய் புலே, இந்தியக் கவிஞர், செயற்பாட்டாளர் (பி. 1831)

❖1913-ஹேரியட் டப்மேன், அமெரிக்க தாதி, செயற்பாட்டாளர் (பி. 1820)

❖1966-பிரிட்சு ஜேர்னிகி, நோபல் பரிசு பெற்ற டச்சு இயற்பியலாளர் (பி. 1888)

❖1973-தழிக்கரை காளிதாஸ் பிள்ளை, தமிழக நாதசுவரக் கலைஞர் (பி. 1913)

❖1978-பொபிலி அரசர், தென்னிந்திய அரசியல்வாதி, சென்னை மாகாண முதல்வர் (பி. 1901)

❖1979-எஸ். டி. சுந்தரம், தமிழக எழுத்தாளர், நாடகாசிரியர், நடிகர், கவிஞர், திரைப்பட இயக்குநர் (பி. 1921)

❖2016-பீ. எம். புன்னியாமீன், இலங்கை எழுத்தாளர், வெளியீட்டாளர், ஊடகவியலாளர், விக்கிப்பீடியர் (பி. 1960)

### சிறப்பு நாள்

❖பெரும் இனவழிப்பு நினைவு நாள் (பல்காரியா)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 55 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 50 | 80 | 60 |
| தக்காளி | 30 | 15 | 50 | 25 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 30 | 30 | 60 | 60 |
| கரட் | 80 | 80 | 140 | 70 |
| பூசணி | 10 | 40 | 60 | 50 |
| புடோல் | 70 | 30 | 60 | 70 |
| வாழைக்காய் | 50 | 40 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 100 | 120 |
| பாகற்காய் | 80 | 110 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 100 | 70 | 80 | 80 |
| கருணைக்கிழங்கு | 60 | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 80 | 40 | 80 | 90 |
| லீக்ஸ் | 120 | 130 | 160 | 160 |
| பீற்றூட் | 30 | 30 | 50 | 40 |
| கறிமிளகாய் | 100 | 70 | 100 | 160 |
| முருங்கைக்காய் | 500 | 420 | 600 | 600 |
| போஞ்சி | 100 | 70 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | — | 60 | 50 |
| கீரை-1பிடி | 30 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 70 | 80 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 35-90 | 75 | 90 |
| இராசவள்ளி | 160 | 130 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 65 | 120 | 80 |
| முள்ளங்கி | 20 | 30 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 10 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | — | 80 | 80- |

ஓர் இனத்தை துன்புறுத்தி மகிழ்ச்சியடைவது இறைவனேயே அவமதிக்கும் செயலாகும்.

*- ஓர் அறிஞர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சிறுபான்மை இன மக்களை பாதுகாப்பது யார் பொறுப்பு?

இலங்கையில் சிறுபான்மை இன மக்களின் பாதுகாப்பு என்பது அச்சம் நிறைந்ததாகவே இருந்து வருகிறது.

இந்நிலைமை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. மாறாக இலங்கை சுதந்திரம் அடைந்து சிங்களத் தரப்பிடம் ஆட்சி அதிகாரம் கையளிக்கப்பட்டதில் இருந்து சிறுபான்மை இன மக்கள் பேரினவாதப் பேய்க்கு இரையாகி வருவது தொடர்கிறது.

சில சந்தர்ப்பங்களில் ஆட்சியாளர்களே இனவன்முறைய்யை தூண்டி விட்டுள்ளனர். இதற்கு 1983 ஜூலைக் கலவரம் தக்க சான்றாதாரமாகும்.

பேரினவாதிகள் தமிழ் மக்களைக் கொன்று துவம்சம் செய்தபோதெல்லாம் படைத் தரப்பினர் நின்று வேடிக்கை பார்த்தனர் என்பது நிதர்சனமானது.

இதுதவிர கடந்த முப்பது ஆண்டு கால யுத்தத்தின்போது அரச படைகள் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி ஷெல் வீச்சுகளை நடத்தியும் விமானம் மூலம் குண்டுகளை வீசியும் தமிழ் மக்களைக் கொன்றழித்தனர்.

இதன் உச்சக்கட்டமாக வன்னிப் பெருநிலப் பரப்பில் தமிழின அழிப்பு நடந்தேறியது.

எக்காலத்திலும் இலங்கையில் தமிழ் மக்கள் எழுகை பெறக்கூடாது என்ற அடிப்படையில், வன்னி யுத்தம் நடத்தப்பட்டதுடன் சுமார் மூன்று இலட்சம் தமிழ் மக்கள் முட்கம்பி வேலிகளுக்குள் அடைக்கப்பட்டு மிக மோசமாக நடத்தப்பட்டனர். இவை இலங்கையில் நடந்த இன வன்மத்தின் பதிவுகள்.

இப்போது கண்டியில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக வன்முறை நடந்துள்ளது. பொலிஸாரையும் படையினரையும் ஈடுபடுத்தியும் கலவரத்தை உடனடியாகக் கட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை என்றால்,

இலங்கையில் உள்ள சிறுபான்மை இன மக்களின் பாதுகாப்பு யார் கையில் என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

முப்பது ஆண்டு கால விடுதலைப் போராட்டத்தை சர்வதேசத்தின் துணையுடன் முடிவுறுத்திய இலங்கை ஆட்சியாளர்கள் இன்று வரை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணவில்லை.

தீர்வு காணுகின்ற முயற்சி நடப்பதாக சர்வதேசத்தின் மத்தியில் கூறப்பட்டாலும் அவை எதுவும் நடைமுறையில் இல்லை என்பதே உண்மை.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு எனக் கூறிக் கொண்டுவரப்பட்ட இடைக்கால வரைபிலும் பௌத்தத்துக்கு முன்னுரிமை என்பதே வலியுறுத்தப்பட்டுள்ளது.

பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குவதற்கு நாம் எதிர்ப்பில்லை எனக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கூறிய போது,

வடக்கு கிழக்கில் ஆயிரம் விகாரைகள் அமைக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்மொழிந்தது.

ஆக, இலங்கையில் சிறுபான்மை இன மக்களின் பாதுகாப்பை ஆட்சியாளர்கள் உறுதி செய்ய முடியாதவர்களாக இருப்பதால்,

இலங்கையின் சிறுபான்மை இன மக்கள் தொடர்பில் சர்வதேசத்தின் தலையீடு அவசியம் என்பது தவிர்க்க முடியாததாகும்.

# வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தொடர்பு

## அசாத் சாலி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட வன்முறை சம்பவங்களில் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தொடர்பு இருப்பதாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

“கட்டாயம் இந்த வன்முறை சம்பவங்களில் அரசியல்வாதிகளுக்கு தொடர்பு உள்ளது.

இதுதொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியிடம் அதாவது ரவி கருணாநாயக்கவிடமும் முறைப்பாடு ஒன்று கையளித்துள்ளேன். அதேபோல ராஜித சேனாரத்னவிடமும் முறைப்பாடு ஒன்று கையளித்துள்ளேன்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவருக்கு தொடர்பு உள்ளதாக சி.ஐ.டியிடம் இருந்துதகவல்கிடைத்துள்ளது.

அதேபோல தாமரை மொட்டு கட்சியின் நுவரெலிய மாவட்ட தலைவர் ஒருவர், பிக்கு ஒருவர், பிரதேச சபையில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மற்றும் வேட்பாளர் ஒருவரை கைது செய்து பின்னர் விடுதலை செய்துள்ளனர்.

ஆனால் அவர்களை மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

யாராக இருந்தாலும் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும். அப்போதுதான் நாடு சுமுகமான நிலையில் செல்லும் எனக் கூறினார். (ம)

### பேருந்து சாரதி மீது தாக்குதல்

## தென் மாகாண சபை உறுப்பினரும் அவரது மனைவியும் பொலிஸாரால் கைது

தலங்கம பிரதேசத்தில் தனியார் பேருந்தொன்றின் சாரதியை தாக்கிய தென் மாகாணசபை உறுப்பினர் எம்.கே. கசுன் மற்றும் அவரது மனைவி ஆகிய இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கப் வண்டியில் பயணித்த தென் மாகாண சபை உறுப்பினரும் அவரது மனைவியும் சென்று கொண்டிருந்த வேளை பேருந்து சாரதியுடன் ஏற்பட்ட வாய்த் தகராறு காரணத்தினாலேயே இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது தென் மாகாண சபை உறுப்பினரும் அவரது மனைவியும் இணைந்து கையில் துப்பாக்கியை ஏந்தியவாறு குறித்த பேருந்து சாரதியை தாக்கியுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தை இனந்தெரியாத நபரொருவர், தனது கையடக்க தொலைபேசியில் காணொளியாக பதிவு செய்துள்ளார்.

இதைதொடர்ந்து இருவரையும் கைதுசெய்துள்ள பொலிஸார், அவர்களின் துப்பாக்கியையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்த துப்பாக்கியில் ஐந்து குண்டுகள் இருந்துள்ளன. இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**வீடு கட்ட எந்தத் திதி சிறந்தது?**

வளர் துதியை திதி
வளர் திருதியை திதி
வளர் சஷ்டி திதி
வளர் சப்தமி திதி
வளர் தசமி திதி
வளர் திரயோதசி திதி
வளர் பௌர்ணமி திதி
தேய் துதியை திதி
தேய் திருதியை திதி
தேய் பஞ்சமி திதி
தேய் சஷ்டி திதி
தேய் சப்தமி திதி
தேய் தசமி திதி
தேய் துவாதசி திதி
தேய் திரயோதசி திதி

இவை பொதுவாகக் கொடுக்கப்பட்டது. திதி சூன்யம் அல்லாமல் பார்த்து வீடு கட்ட ஆரம்பிக்க வேண்டும்.

*(தொடரும்)*

### நீதிமன்றில் ஆஜராகுமாறு

## ரவி கருணாநாயக்கவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவு

லஞ்சம் குறித்த வழக்கொன்றில் சாட்சியமளிக்க முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவை எதிர்வரும் ஏப்ரல் 23ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு மேலதிக நீதவான் துலானி அமரசிங்க நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளைப் பச்சை அரிசியை விற்பனை செய்த போது, விலைச் சுட்டெண்ணுக்கு முரணாக ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை விற்பனை செய்ய உத்தரவிட்டதன் மூலம் அரசுக்கு 4 மில்லியன் ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்தியதாக சதொச நிறுவனத்தின் முன்னாள் பதில் முகாமையாளருக்கு எதிராக இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு வருகிறது.

நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு ரவி கருணாநாயக்கவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்ற கூட்டம் காரணமாக அவர், நேற்று ஆஜராக முடியவில்லை என அவரது சட்டத்தரணி நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தார்.

இதனையடுத்தே ஏப்ரல் 23ஆம் திகதி ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை யாழ் பிரதேசத்தில் பூதர்மடம், கோப்பாய் சந்தி, மானிப்பாய் வீதி, கைதடி வீதி, இருபாலை சந்தி, இருபாலை பழைய வீதி, வட்டக்குளம், கட்டைப்பிராய், கல்வியங்காடு, இலங்கைநாயகி, கல்வியங்காடு சந்தி, ஆடியபாதம் வீதி, நாயன்மார்கட்டு, இராமலிங்கம் வீதி, முடமாவடி கிளிகடை சந்தி, GPS றோட், கோப்பாய்பொலிஸ, பாற்பண்ணை, திருநெல்வேலி சந்தை, கலாசாலை வீதி, பலாலி வீதியின் ஒரு பகுதி, துணவி, பண்டத்தரிப்பு, மாதகல், இளவாலை, தொல்புரம், சங்கானை, சாந்தை, சில்லாலை, சீரணி, சண்டிலிப்பாய், வட்டுகோட்டை ஒரு பகுதி, தொட்டியாலடி, பிரான்பற்று, மாரிசன்கூடல, சேந்தான்குளம், இளவாலை பெரியவிளான், மெய்கண்டான், சுழிபுரம், ஜம்புகோளப்பட்டிணம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாட்டங்கேணி, கொக்கிளாய், உண்ணாப்பிலவு, முல்லைத்தீவு நகரம், கள்ளப்பாடு, வண்ணாங்குளம், வட்டுவாகல் கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அலுவலகம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில சுந்தரபுரம் கிராமம், பஸார் வீதி, மில் வீதி, சந்தை சுற்றுவட்ட வீதி, பம்பைமடு கிராமம், கற்பகபுரம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும். (இ-9)


# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- கடவுளைக் காண மனிதனுக்குத் தொண்டு செய்யுங்கள். பட்டினியால் வாடும் ஏழைகளை நாராயணர்களாக பாருங்கள்.
- உங்களை உடல் அளவிலோ, அறிவு அளவிலோ, ஆன்மிக அளவிலோ ஏதாவது ஒரு விடயம் பலவீனமாக்கினால், அதை விஷமாகக் கருதி உதறித்தள்ளுங்கள்.
- இறைவன் ஒரு சக்தி மட்டுமல்ல, அவரே உண்மையும் கூட. இதை உணர்ந்து உண்மையுடன் நடந்து கொள்ளுங்கள்.
- திறக்க முடியாத அனைத்து வாசல்களையும் அன்பு திறக்கிறது. உலகின் அனைத்து இரகசியங்களுக்கும் வாசல் அன்பு தான்.
- கால்பந்து விளையாடி விட்டு, கீதை படித்தால் மனதில் நன்றாகப் பதியும். ரத்தத்தில் வேகமிருந்தால் தான், பகவான் கிருஷ்ணரின் அறிவையும், ஆற்றலையும் அறிய முடியும்.
- நம்மிடத்தில் ஒன்றை இழுத்துக் கொள்ளும் சக்தியைப் போல, அதை விலக்கும் சக்தியும் உள்ளது.
- முடியாது என்ற வார்த்தையை அகராதியை விட்டே உதறித்தள்ளுங்கள். உங்களால் எல்லாவற்றையும் சாதிக்க முடியும்.

# சூதாட்டத்தில் ஈடுபட்டார் சமி மனைவி கொடுத்த அடுத்த அதிர்ச்சி

## மறுக்கிறார் சமி



இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் முகமதுசமி. அவர் மீது மனைவி ஹசின் ஜஹன் பரபரப்பு புகார்களை கூறினார்.

முகமதுசமிக்கு பல பெண்களுடன் தொடர்பு இருப்பதாகவும், தன்னை அடித்து துன்புறுத்துவதாகவும், பொலி வுட் நடிகையை திருமணம் செய்ய விரும்புவதால் விவாகரத்து கேட்டு தொடர்ந்து தொல்லை தருவதாகவும் கூறினார்.

இதுகுறித்து முகமது சமி மீது கொல்கத்தா பொலிஸிலும் புகார் கொடுத்துள்ளார்.

இதனால் முகமது சமியின் பெயரை வீரர்கள் ஒப்பந்த பட்டியலில் சேர்க்காமல் இந்திய கிரிக்கெட் சபை நிறுத்தி வைத்துள்ளது.

இந்த நிலையில் முகமது சமி மட்ச் பிக்சிங் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக ஹசின் ஜஹன் பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளார்.

முகமதுசமி, பாகிஸ்தானை சேர்ந்த அலிஷபா என்ற பெண்ணிடம் பணம் வாங்கினார். மட்ச் பிக்சிங் சூதாட்டத்துக்காக இந்த பணம் கொடுக்கப்பட்டு இருக்கலாம். எதற்காக பணம் கொடுக்கப்பட்டது என்று என்னிடம் முகமது சமி கூறவில்லை.

முகமது சமி, மனைவியான என்னை ஏமாற்றும் போது நாட்டை ஏன் ஏமாற்றி இருக்கமாட்டார். முகமது சமி பணம் வாங்கியதற்கான ஆதாரம் இருக்கிறது.

டுபாய் ஹோட்டலில் அவர் பாகிஸ்தான் பெண் அலிஷபாவை சந்தித்தார். அந்த ஹோட்டலில் அவர் அறைபுக் செய்தாரா? இல்லையா? என்பதை சோதித்து பாருங்கள் என்றார்.

மனைவியின் புகார்களை முகமது சமி மறுத்து உள்ளார்.

அவர் கூறுகையில், "

ஹசின் ஜஹன் சரியான மன நிலை யில் இல்லை என்பதை நான் 100 சதவீதம் சொல்வேன். சூதாட்ட புகார் என்பது மிகப்பெரிய குற்றச்சாட்டா கும். அதை கண்டிப்பாக நிரூபிக்க வேண்டும். அது பற்றி முறையாக விசாரிக்க வேண்டும்.

எனது ஒப்பந்தப்பட்டியல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது வருத்தம் அளிக்கிறது. நான் கிரிக்கெட் சபை நிர்வாகிகள் யாரிடமும் பேசவில்லை. ஆனால் அவர்கள் இந்த விடயத்தை சரியாக கையாள்வார்கள் என நம்புகிறேன்.

என்னுடைய ஒரே கேள்வி என்னவென்றால் இவ்வளவு நாள் புகார் தெரிவிக்காமல் இப்போது திடீரென்று ஏன் புகார் கூறு கிறார் என்பது தான்.

அவரிடம் நான் பேச முயன்றேன். ஆனால் அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை. அவரை சுற்றி உள்ளவர்களால் மிகப் பெரிய சதி நடக்கிறது. (க)

# இலங்கையுடனான தோல்வி நல்ல அனுபவத்தைத் தந்தது

## ரோகித் தெரிவிப்பு



இலங்கை அணிக்கு எதிரான முதல் போட்டியில் செய்த தவறை யோசித்து களமிறங்கியதே, பங்களா தேஷை இரண்டாவது போட்டியில் ஜெயிக்க காரணம் என இந்திய அணித் தலைவர் ரோகித் சர்மா கூறியுள்ளார்.

இலங்கையில் நடைபெற்று வரும் இருபது-20 முத்தொடரின் முதல் ஆட்டத்தில் இந்திய அணி இலங்கையிடம் தோற்றது.

இந் நிலையில் நேற்று முன்தினம் பங்களாதேஷுடன் இரண்டாவது ஆட்டத்தில் விளையாடிய இந்தியா ஆறு விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

வெற்றிக்கு பின்னர் பேசிய இந்திய அணித் தலைவர் ரோகித் சர்மா,

இலங்கைக்கு எதிரான முதல் போட்டியில் நாங் கள் செய்த தவறுகளை யோசித்தே இப்போட்டியில் களமிறங்கினோம். வீரர்கள் அனைவரும் சிறப்பாக செயற்பட்டனர்,

ஆனாலும் சில பிடிகளை தவறவிட்ட தால் பீல்டிங்கில் இன்னும் சிறப்பாக செயற்பட வேண்டி யுள்ளது என அவர் கூறியுள்ளார். (க)

# பந்துவீச்சில் கலக்கும் மலிங்க ரசிகர்கள் உற்சாக வ்ரவேற்பு



இலங்கையின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க மீண்டும் ஒருமுறை தனது அதிரடி பந்துவீச்சை வெளிப்படுத்தியதன் மூலம் இராணுவப் படை விளையாட்டுக் கழகத்தை 6 விக்கெட்டுகளால் வீழ்த்தி NCC அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற் றது.

கொழும்பு பி சரா ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இலங்கை உள்ளூர் இருபது-20 தொடரின் அரையிறுதி போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற இராணுவப் படை விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. எனினும் அந்த அணியின் விக்கெட்டுகள் அடுத்தடுத்து பறிபோனதால் சவாலான ஓட்டங்களை பெறுவதற்கு தவறியது.

குறிப்பாக லசித் மலிங்க வீசிய மூன்றாவது ஓவரில் இரண்டு விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்டது இராணுவப்படை அணிக்கு பெரும் பின்னடைவாக இருந்தது. இறுதியில் இராணுவப்படை விளையாட்டுக் கழகம் 17.1 ஓவர்களில் 102 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

அபாரமாக பந்துவீசிய மலிங்க 3.1 ஓவர்களில் 14 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டுகளை பதம் பார்த்தார். இதன்மூலம் அவர் இம்முறை உள்ளூர் கிரிக்கெட் தொடரில் மொத்தம் 16 விக்கெட்டுகளை வீழ்த்தி அதிக விக்கெட்டுகளை சாய்த்த வீரர்கள் வரிசையில் சக அணி வீரர் சதுரங்க டி சில்வாவுடன் முதலிடத்திற்கு முன்னேறினார்.

கடந்த ஆண்டு உள்ளூர் இருபது-20 தொடரில் மலிங்க ஒரு ஹெட்ரிக் சாதனையுடன் 12 விக்கெட்டுகளையே வீழ்த்தி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் எட்ட முடியுமான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பாடிய NCC அணிக்கு இலங்கை இருபது-20 அணியில் இடம் பெறத் தவறிய நிரோஷன் திக்வெல்ல 19 பந்துகளில் 2 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் 27 ஓட்டங்களை பெற்றதோடு லஹிரு உதாரவும் அதிகபட்சமாக 27 ஓட்டங்களை பெற்றார்.

இறுதியில் NCC அணி 14.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 108 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. (க)

# மகளிர்தின வாழ்த்துக்கள் தமிழில் சொன்ன ஹர்பஜன்





இந்திய கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங், மகளிர் தினத்தையொட்டி தமிழில் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

இந்திய சுழற்பந்து வீச்சாளரான ஹர்பஜன் சிங், சமீபத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு தெரிவு செய்யப்பட்டார். இந்நிலையில், மகளிர் தினத்திற்கு தனது வாழ்த்துக்களை அவர் தமிழில் தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில், 'அன்னையும் அவளே, சகோதரியும் அவளே, தோழியும் அவளே, மனைவியும் அவளே, மகளும் அவளே, உலகில் உள்ள அனைத்து உறவுகளின் அடிப்படையும் அவளே.

பெண்ணாகப் பிறவி எடுத்த அனைவருக்கும் அன்பு சகோதரனின் மகளிர் தின நல்வாழ்த்துக்கள். பெண்மையை போற்றுவோம்' என தெரிவித்துள்ளார். (க)



# உச்சத்துக்குச் சென்ற ஷிகர் தவான்

இந்திய துடுப்பாட்ட வீரர் ஷிகர் தவான் ஊதியம், புதிய ஊதிய ஒப்பந்தத்தின் மூலமாக பல படிகள் உயர்ந்துள்ளது.

பி.சி.சி.ஐ புதிய ஊதிய ஒப்பந்தத்திற்கான பட்டியலை சமீபத்தில் வெளியிட்டது.

அந்த பட்டியலில், அதிரடி ஆட்டக்காரர் ஷிகர் தவான் 'C' தரநிலையில் இருந்து, 'A+' தர நிலைக்கு உயர்ந்துள்ளார்.

இதன்மூலம் அவரின் ஆண்டு ஊதியம் 7 கோடியாக உயர்ந்துள்ளது.

இதற்கு முன்பு அவர் 'C' தரநிலையில் இருந்த போது, தவானின் ஆண்டு ஊதியம் 50 இலட்சமாக இருந்தது.

ஆனால், தற்போது அவரின் மாத ஊதியமே 58 இலட்சங்களாக அதிகரித்துள்ளது.

முன்னணி வீரர்களான கோலி மற்றும் டோனி யின் ஆண்டு ஊதியம் முறையே 7 கோடி மற்றும் 5 கோடி ஆகும்.

எனினும், ஷிகர் தவான் தரநிலை அவர்களை விட 1300 சதவித அளவில் உயர்ந்துள்ளது.

டோனியின் தரநிலை 'A+'இல் இருந்து 'A' நிலைக்கு இறங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

## முருகையா கோமகன்...

செல்லவிருந்த நிலையில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சியான விசாரணைகளின் பின்னர், நாளை மறுதினம் திங்கட்கிழமை கொழும்பு 4ஆம் மாடிக்கு விசாரணைக்கு வருமாறு தெரிவித்து நேற்று மாலை விடுவிக்கப்பட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடுப்பு பொலிஸாரால் கடந்த 2010.08.23ஆம் திகதி கைது செய்யப்பட்டு ஆறு ஆண்டுகள் தென்னிலங்கைச் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இவர் கடந்த 2016.02.29ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டிருந்தார். அதன் பின்னர் ஆலய வழிபாட்டுக்காக கடந்த 2016ஆம் ஆண்டு ஜுலை மாதம் இந்தியாவுக்குச் செல்ல முற்பட்டபோது அவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தார். பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறி அவரைக் கைது செய்த பொலிஸார் அங்கு இடம்பெற்ற விசாரணைகளைத் தொடர்ந்து விடுதலை செய்திருந்தனர்.

இதனையடுத்து பயணத் தடை நீக்குமாறு கொழும்பு நீதிமன்றில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.தவராசா ஊடாக கோமகன் மனுத் தாக்கல் செய்தார். விசாரணைகளை மேற்கொண்ட நீதிமன்று வெளிநாட்டுக்கான பயணத் தடையை நீக்கியிருந்தது.

இந்நிலையில், நேற்று அவர் இந்தியாவுக்குச் செல்வதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்திற்குச் சென்றபோது மதியம் 12 மணியளவில் விமான நிலையத்தில் வைத்து பொலிஸார் கைது செய்தனர். பயணத் தடை நீக்கப்பட்டமை தொடர்பாக நீதிமன்றினால் வழங்கப்பட்ட ஆவணங்களை அவர் காண்பித்த போதிலும் அது தொடர்பாக குடியகல்வு மற்றும் குடிவரவுத் திணைக்களத்திற்கு நீதிமன்று அறிவித்திருக்கவில்லை என பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

கட்டுநாயக்கா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அவர் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் விசாரணைக்காக திங்கட்கிழமை காலை கொழும்பு 4ஆம் மாடிக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-9)

## ஐ.நாவின் உயர் அதிகாரி...

கூட்டமைப்பினருடன் நேற்று கொழும்பில் நடத்திய சந்திப்பின் போது ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான ஜெவ்ரி பெல்ட்மன் குறிப்பிட்டதாக கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பின்போது எதிர்க்கட்சித்தலைவரும் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளான தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் ஆகியோரும் பங்கேற்றனர்.

நேற்றைய சந்திப்புத் தொடர்பாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் கருத்து வெளியிடுகையில்,

இலங்கைக்கான அவரது ஐந்தாவது வருகை இதுவாகும். இந்த முக்கியமான தருணத்திலே அவர் வந்திருப்பதை நாங்கள் வரவேற்றிருக்கின்றோம். அவர் ஜனாதிபதியைச் சந்தித்ததாக சொன்னார். எங்களோடு நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையிலே இப்போது இருக்கின்ற ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலையை விளக்கிச் சொல்லியுள்ளோம். கூட்டரசாங்கம் குறித்த ஆணையின் பிரகாரம் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் அந்த ஆணையை முழுமையாக நிறைவேற்ற வேண்டியது அவர்களது கடமை என்பதை நாம் வலியுறுத்திச் சொல்லியிருக்கின்றோம். ஒரு உள்ளூராட்சித் தேர்தலிலே ஏற்பட்ட பின்னடைவு காரணமாக மக்களுக்கு கொடுத்த ஆணையை உதாசீனம் செய்து கைவிடமுடியாது என்பதை ஆணித்தரமாக சொல்லியிருக்கின்றோம். அவரும் தான் ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தையிலே இதே விடயங்களை வலியுறுத்தி சொல்லியிருப்பதாக கூறினார்.

சர்வதேச சமூகம் இலங்கையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் மிகவும் காலதாமதமாக ஏற்பட்டதாகவும் இப்போது முன்னேற்றம் குறைந்திருக்கின்றதென்பதையும் அவதானித்திருக்கின்றதென சொன்னார். தற்போது நடந்து கொண்டிருக்கின்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரிலே விசேடமாக உயர் ஸ்தானிகரின் அறிக்கையிலே இது பிரதிபலிக்கப்படும் என்று சொன்னார். சர்வதேசத்தின் கவனம் வெகுவாக இலங்கை பால் ஈர்க்கப்பட்டிருக்கின்றும் இந்த அரசாங்கம் எந்த மக்கள் ஆணையின் மீது ஆட்சியில் அமர்த்தப்பட்டதோ அது முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும் என்பது தான் ஐக்கிய நாடுகள் சபையினதும் பொதுவாக சர்வதேச சமூகத்தினரதும் எதிர்பார்ப்பாகும் என்பதையும் சொல்லியிருக்கின்றார். இங்கே தான் நடத்துகின்ற பேச்சுவார்த்தைகள் பற்றி மனித உரிமைகள் உயர் ஸ்தானிகரோடும் கலந்துரையாடுவேன் அவருக்கும் அதைப் பற்றி சொல்லுவேன் என்று வாக்களித்திருக்கின்றார்.

ஐக்கிய நாடுகள் சபையினுடைய விசேடமாக பொதுச் செயலாளருடைய ஆதரவு இலங்கையிலே ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான முயற்சி வெற்றிபெற வேண்டும் என்பதற்கு தொடர்ச்சியாக இருக்கும் என்பதும் நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைத் தீர்மானம் முற்றுமுழுதாக செயல் வடிவம் பெறவேண்டும் என்பதிலும் தங்களுடைய ஆதரவும் இருக்கும் என்பதையும் வலியுறுத்தினார் என நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார். (ம)

## அமைதி நிலை...

நாட்டின் தற்போதைய நிலை குறித்து வெளிநாட்டு தூதுவர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஒன்றுகூடப்பட்டிருந்த சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். இந்த சந்திப்பில் வெளிநாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி உயர் ஸ்தானிகர்கள், தூதுவர்கள் மற்றும் இராஜதந்திர அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

கண்டி மாவட்டத்தின் சில பிரதேசங்களில் கலவர சூழலை ஏற்படுத்த காரணமானவர்களையும் கலவரங்களில் ஈடுபட்டவர்களையும் கைதுசெய்து, அதிகபட்ச தண்டனையை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தான் பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்புக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த பல வருடங்களாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு கூட்டத்தொடர் இடம்பெறும் மார்ச் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்த பல்வேறு குழுக்கள் செயற்பட்டுவருவது அவதானிக்கப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

கடந்த மூன்று வருட காலமாக நாட்டில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் முழுமையான அர்ப்பணிப்பை செய்துள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, எதிர்காலத்திலும் இதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன, சட்டம் ஒழுங்கு தொடர்பான அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார, ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ, பாதுகாப்பு செயலாளர் கபில வைத்தியரத்ன ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம)

## அறிந்த மகன்...

வரே இவ்வாறு உயிரை மாய்த்துள்ளார்.

மேற்படி நபர் தோல் நோயினால் பீடிக்கப்பட்டு இருந்ததனால் வீட்டில் இருந்ததாகவும் இந்நிலையில் நேற்று அவரின் தாயார் இறந்ததாக தகவல் கிடைத்ததும் வீட்டில் உள்ளோர் அங்கு சென்றுள்ளனர். ஆனால் இவர் மட்டும் தனிமையில் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

மரணச்சடங்கிற்கு சென்றவர்கள் வீடு திரும்பிய போதே அவர் தூக்கில் தொங்கி மரணமடைந்தமை தெரியவந்தது. நேற்றிரவு 7.30 மணியளவில் சம்பவ இடத்துக்கு சென்ற பருத்தித்துறை மரணவிசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணையினை மேற்கொண்டு சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனை மேற்கொள்ளுமாறு வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ம-60)

## கிளிநொச்சியில்...

தொடர்பில் விசேட அதிரடி படையினருக்கு கிடைத்த தகவலின்படி சோதனை மேற்கொண்டபோது குறித்த கஞ்சா பொதியும், கடத்தி சென்ற சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். 1.5 கிலோ எடையுடைய கஞ்சா பொதியே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபரையும், கஞ்சா பொதியையும் கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளனர். (ம-312,315)

## ஆலயக் கேணியிலிருந்து...

வர் கரணவாய் கிழக்கைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கந்தசாமி பாலசுப்பிரமணியம் (வயது 56) எனப் பொலிஸார் கூறினர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை மேற்படி குடும்பஸ்தர் மாடு அவிழ்ப்பதற்காக வயலுக்குச் சென்றவர் இரவாகியும் வீடு திரும்பாததையடுத்து உறவினர்கள் அவரைத் தேடியுள்ளனர்.

இந்நிலையில் கரவெட்டி கிராய் பிள்ளையார் கோவில் கேணியில் மோட்டார் சைக்கிளுடன் குடும்பஸ்தர் சடலமாக காணப்பட்டதையடுத்து நெல்லியடிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

தடயவியல் பொலிஸார் தடயம் பெற்றதுடன் கரவெட்டி மரணவிசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைத்து பிரேத பரிசோதனை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-60)

## ஜனாதிபதி இன்று...

வரும் 12ஆம் திகதி ஜப்பானுக்கு பயணமாகும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அங்கு 5 நாள்கள் தங்கியிருப்பார்.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோன் ஆகியோரின் கூட்டு அழைப்பை ஏற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று சனிக்கிழமை புதுடில்லிக்குப் பயணமாகிறார்.

புதுடில்லியில் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் சர்வதேச சூரிய சக்திக் கூட்டணியின் முதலாவது மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்பார். இந்த மாநாட்டில் 32 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

இதேவேளை, ஜப்பான் ஸினசோ அபேயின் அழைப்பை ஏற்று வரும் 12ஆம் திகதி 5 நாள் பயணமாக ஜப்பானுக்குப் பயணமாகிறார்.

சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவையை மேம்படுத்துவதற்காக இலங்கை அரசுக்கும் ஜப்பான் சர்வதேச் ஒத்துழைப்பு முகவர் இயக்கத்துக்கும் (ஜெய்கா) இடையே யென் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது என்றுள்ளது. (ம)

## ஐ.நா அதிகாரி...

நடைபெற்றது.

இலங்கைக்கு வருகை தந்திருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் அலுவல்கள் தொடர்பான உதவி பொதுச் செயலாளர் ஜெப்ரி பெல்ட்மன் (Jeffrey Feltman) நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தார்.

இலங்கையின் ஜனநாயகம், சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித்திட்டங்களை பாராட்டிய ஜெப்ரி பெல்ட்மன் இதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு குறித்து மகிழ்ச்சி வெளியிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு வழங்கிவரும் உதவிகள் வழிகாட்டல்கள் உள்ளிட்ட ஒத்துழைப்பு குறித்து நன்றி தெரிவித்த ஜனாதிபதி, எதிர்காலத்திலும் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் உதவியை எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

உலகின் அனைத்து நாடுகளுடனும் இலங்கை பேணி வரும் நட்புறவு ரீதியான வெளிநாட்டுக் கொள்கை தொடர்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, எதிர்காலத்திலும் அந்த கொள்கையை பின்பற்றி சர்வதேச அமைப்புகளுடனும் அனைத்து நாடுகளுடனும் தொடர்புகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

அரசாங்கத்தின் நல்லிணக்க செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் முழுமையான ஒத்துழைப்பு எதிர்காலத்தில் கிடைக்குமென்று ஜெப்ரி பெல்ட்மன் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்ணான்டோ உள்ளிட்ட அதிகாரிகளும் இச்சந்திப்பின்போது பிரசன்னமாகியிருந்தனர். (ம)

## இனவாதத்தை தூண்டி...

சிறைத் தண்டனை வழங்கக் கூடிய ஐ.சி.சி.பி.ஆர். (ICCPR) சர்வதேச சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரிய அவர், குறித்த வன்முறைச் சம்பவங்களினால் நாடு முழுவதும் கலவரம் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

யுத்தத்தில் இருந்து மீண்டு வரும் நிலையில் இந்தப் பிரச்சினை தோன்றியுள்ளதுடன், எதிர்கால சந்ததிக்கு பிளவுபட்ட நாட்டையே மிச்சம் வைக்கும் நிலை ஏற்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)

## தொழுகைக்கு செல்ல...

நிலையில், நேற்று வெள்ளிக்கிழமை தொழுகைக்காக பள்ளிவாசல்களுக்குச் செல்வதற்கு தாம் அச்சத்துடன் இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இது குறித்த அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

ஊரடங்குச் சட்டம், அவசர காலச்சட்டம் என்பன பிறப்பிக்கப்பட்ட போதிலும், முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்தும் இடம்பெறுவதாகத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சிறப்பு ஏற்பாடுகள் முஸ்லிம்களால் செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ஆண்கள் வேறுபட்ட நேரங்களில் தொழுகைகளில் ஈடுபடவுள்ளனர். பெண்களையும், குழந்தைகளையும் தனியாக வீட்டுக்கு வெளியே செல்வதும் தடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## கண்டி வன்முறை...

செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான குணசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்தே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நேற்று காலை 6.00 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்தில் 65 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதனுடன் இனங்களுக்கு இடையே முறுகலை ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்கள் ஊடாக பிரசாரங்களை மேற்கொண்ட பாடசாலை மாணவர்கள் இருவர் குற்றபுலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)

## பள்ளிவாசல்களை...

ளனர்.

அவிசாவளை ஜும்மா மஜ்ஜித்தில் ஜும்மா தொழுகை முடியும் வரை பிரதேசத்தை சேர்ந்த விகாராதிபதி ஒருவர் பள்ளிவாசலில் வீற்றிருந்தார்.

வெலிகமை, இரத்மலானை ஆகிய பிரதேசங்களில் உள்ள பள்ளிவாசல்களுக்கும் பிக்குமார் சென்று பாதுகாப்பு வழங்கியுள்ளனர்.

தமது பாதுகாப்புக்காக பள்ளிவாசல்களுக்கு வருகைதந்த பௌத்த பிக்குமாரை வரவேற்ற முஸ்லிம்கள், தமக்காக குரல் கொடுத்தமைக்கு நன்றிகளை தெரிவித்துள்ளனர். (ம)

## மூவாயிரத்துக்கு...

மையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த 24 மணிநேரங்களில் கண்டி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் சோதனை நடவடிக்கைகளின்போது 20 பெற்றோல் குண்டுகள் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், சட்டத்தை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், எந்த சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்கு தேவையான ஆளணி தம்மிடம் உள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி மாவட்டத்தில் பதற்றம் நிலவிய திகன, கலஹா, கட்டுகஸ்தோட்ட, மெனிக்ஹின்ன, அம்பத்தென்ன, அக்குரணை, பூஜாப்பிட்டிய உள்ளிட்ட பகுதிகளை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க நேரில் சென்று ஆய்வு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)


### விற்பனைக்கு

அச்சுவேலி பத்தமேனி பழைய டச்சு வீதியில் (காத்தாடி வளவு) தோடக்காணி 27 பரப்பு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
க.ஞா.சம்பந்தபிள்ளை- 0779533226
(3142)

### காணி விற்பனைக்கு

கொக்குவில் - பொற்பதி வீதி - காளி கோயில் ஒழுங்கைக்கு அருகாமையில் காணி விற்பனைக்கு உண்டு. (3169)

தொடர்பு: 077 458 6569

### சிக்கன் பிரியாணி

அறிமுகம் - Rs. 250/=

ப்றைட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்
Fried Chicken - Rice & Bites

யாழ் பாடியில்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 9868, 077 736 0353, 075 987 5800
(C-1813)

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550*/=Kg
கனடா - 1050*/=Kg

DELIVERY IN 3 - 5 DAYS

தொடர்புகளுக்கு: 0768226240

யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

V2 TRAVELS (C-1727)

### கறையான் தொல்லையா?

கட்டடங்களில் கறையான்களால் ஏற்படும் அல்லது ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்களை உத்தரவாதத்துடன் இல்லாதொழித்து தரப்படும்

(5 Years - 10 years Warranty)

ஆலோசனையும் மதிப்பீடும் இலவசமாக வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு :-
ந.ரூபகாந்த் 0771515897, 0703312299, 0214993200
(3172)

### வேலைவாய்ப்பு

வடக்கு மாகாண இளைஞர் யுவதிகளுக்கு அரிய வாய்ப்பு. Optimo International PVT (LTD) இன் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கிளைகளுக்கான பின்வரும் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.



- முகாமையாளர்
- வரவேற்பாளர்
- நிர்வாக உத்தியோகஸ்தர்கள்
- வெளிக்கள உத்தியோகஸ்தர்கள்

ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தகைமை



- O/L மற்றும் A/L
- 18-30 வயதெல்லை
- ஆண் பெண் இருபாலாரும்

இறுதித் திகதி: 05.03.2018

தொடர்பு:
077 288 1162, 076 604 8878
(3171)

### வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

EXPRESS Courier Services

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்
021 221 5656 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | மீசாலை | முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை
(C-1790)

### வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் உள்ள Softlogic காட்சியறைக்கு ஆண்/பெண் இருபாலாரும் உடனடியாகத் தேவைப்படுகிறார்கள். பணிபுரிய ஆர்வமுள்ளோர் 12.03.2018 திங்கட்கிழமை சுயவிபரக்கோவையுடன் கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

**Softlogic Show room**

63-65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 912 7954
(C-1832)


## மரண அறிவித்தல்



### திருமதி தயாளன் ரூபாவதி (சாந்தி)

யாழ்.பருத்தித்துறை இன்பர்சிட்டியைப் பிறப்பிடமாகவும், வல்லிபுரப்பரியாரியார் ஒழுங்கை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தயாளன் ரூபாவதி (சாந்தி) அவர்கள் கடந்த (07.03.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியம் - மாணிக்கம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும், இராசதுரை - சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், இராசதுரை தயாளன் (ராஜன் வீடியோ) அவர்களின் பாசமிகு துணைவியாரும், ரமணன் (மொறட்டுவ பல்கலைக்கழகம்), தயாரூபன், தயாநிதி, கார்த்திகா ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மநாதன் (ஜேர்மனி), நித்தியானந்தராசா (பெரியகுட்டி - ஜேர்மனி), சிவானந்தராசா (சின்னகுட்டி - லண்டன்), சம்பத்குமார் (சுகந்தன் - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், உதயா, பாக்கியலட்சுமி, விஜிதா, சோதி, இராசேந்திரம் உமாகுமாரி (ஜேர்மனி), உதயணன் (அமரர்), இரங்கநாதன் (உபஅதிபர் - ஹாட்லிக் கல்லூரி), விஜயகுமாரி (ஆசிரியர் - யா/பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்), குமரன், றஜனிபா (ஜேர்மனி), நித்தியா (அமரர்), நிர்மலன், அபிராமி (மகாலக்ஷ்மி), திருமகள் (வாணி B.B.A- அவுஸ்திரேலியா), செல்லக்குமரன் சாந்தினி (அமரர்), நிசாந்தன், குகன்யா (வைத்தியர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், கெவின், லாரா, சாரா, சரணியா, நிவேதன், சிவரூபிதா, சிவத்திரா, சிவனிசா, சிவாசன், சகானா, கிறிஸ்ரினா, சபினா, ஜோஸ்சியா, சுகந்தன், சாருஜா, சோபிகா, சுயலக்ஷன், அஸ்விதா ஆகியோரின் அன்பு மாமியாரும், சாமுவேல், சரோன், செர்வின், மகிஸ், லதுமிர்தன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (12.03.2018) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ராஜன் வீடியோ, ராஜன் என்ரபிறைஸ், பருத்தித்துறை.

தகவல்:
இ.தயாளன் (கணவர்)
(G-1833)


## Techno World

(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)

### A/L தொழில்நுட்பப் பிரிவு

**எமது நிறுவனத்தின் கடந்த கால சாதனைகள்**

- A/L 2017 இல் தேசிய அளவில் 60இற்கும் மேற்பட்ட மாணவர்களை தொழில்நுட்ப பீடத்துக்கு அனுப்பிய ஒரே ஒரு கல்வி நிறுவனம்.
- A/L 2018 மாணவர்களுக்கான மாதாந்த பரீட்சை, மீட்டல் வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.
- A/L 2019 முதல்நிலைப் பாடசாலைகளில் அதியுயர் புள்ளியை பெற்ற மாணவர்களை உருவாக்கியமை.
- A/L 2020 மாணவர்களுக்கான இரண்டாவது பரீட்சைகளை முடித்த பெருமையுடன்.

பொறியியல், உயிர்முறைமைகள் தொழில்நுட்ப செய்முறை வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் மூன்று மணித்தியாலங்கள் நடைபெறுகின்றது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பட்டதாரி ஆசிரியர்களால் மத்திரமே கற்பிக்கப்படுகின்றது

மாணவர்களுக்கு தனிப்பாட அனுமதி உண்டு

A/L 2020, Day Class புதிய பிரிவு
காலை 8.00 மணிக்கு

தொடர்பு: 077 017 5346


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.